தந்தை பால் கடம்பவனம்

# அனுபவ திருஷ்டாந்தங்கள்

N74
75610.

தொகுத்தவர்: ஆர்.எஸ். ஜேக்கப்

1032
25.7.78

தந்தை பால் கடம்பவனம்

# அனுபவ திருஷ்டாந்தங்கள் நூறு

ASSISTANT REGISTRAR OF BOOKS
2 5 AUG 1978
MADRAS 600 009
PUBLIC (I & PR) DEPARTMENT

நூலாசிரியர்



தந்தை பால் கடம்பவனம்

தந்தை பால் கடம்பவனம்

# அனுபவ திருஷ்டாந்தங்கள் நூறு

தொகுத்தவர்:

## வித்துவான் ஆர். எஸ். ஜேக்கப்

கிறிஸ்தவ இலக்கிய சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600 003

# SERMON ILLUSTRATIONS OF FATHER PAUL KADAMBAVANAM

*Compiled by*
VIDWAN R. S. JACOB

Q6
N74

©

*First published by Pulavar Rasiah in 1974*
*This revised edition 1978*

75610

*Cover Design by* MADHU ADS.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1978. B9984

# தந்தை பால் கடம்பவனம்

தந்தை பால் கடம்பவனம், தஞ்சாவூருக்கருகில் சாலியமங்கலம் என்னும் கிராமத்தில், 1887ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் நாளில், அழுத்தமான சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். சிறந்த சிவ பக்தர். தேவாரம் திருவாசகம் கற்று மடத்திலும் ஆலயங்களிலும் பூசை நடத்தி வந்தார். 'மானுனது நீரோடைகளை நோக்கி வாஞ்சித்துக் கதறுமாப் போல' அவரது உள்ளம் உண்மையான இறைவனைக் கண்டு கொள்ள ஏங்கித் தவித்தது. வேதாந்த விசாரணையிலீடு பட்டார். உண்மைகளைத் தேடி அலைந்தார்.

1904ம் ஆண்டில் புதுக்கோட்டையிலுள்ள ஒரு கிறிஸ்தவ ஆராதனை. அன்றையச் செய்தி, கிறிஸ்தவர்கள் இறை உறவுகொள்ளும்முறை அனைத்தையும் இரகசியமாய் உற்றுக் கவனித்து புதுமையான வழிபாட்டால் கவர்ச்சிக்கப்பட்டார். அன்று நிகழ்ந்த பிரசங்கம் தனக்காகவே விடுக்கப்பட்ட தென்று கருதினார். பைபிளை பானைக்குள் மறைத்து வைத்து ஒருவருமில்லாத தருணம் பார்த்துப் படிக்கத் துவங்கினார்.

விபூதியைவிட்டு விவிலியத்தை விரும்பினார். திருநீற்றை விட்டு திருமறையின் பக்கம் திரும்பினார். எதிர்ப்புகளை ஏற்புடன் வென்றார். தாயின் கண்ணீரை மகிழ்வுடன் மேற்கொண்டார். நாதன் இயேசுவை நாடினார். இரகசிய, பகிரங்கக் கிறிஸ்தவனாக இருந்து பாடுகள் பல பட்டார்.

உடுத்தின வேட்டியோடு சென்னைக்கு ஓடிய கடம்பவனார், 1908ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம் தேதி சென்னை சீயோன் ஆலயத்தில் ஞானதீட்சை பெற்றுக் கிறிஸ்து சமயத்தைத் தழுவினார். அந்நாள் தொட்டு இந்நாள் வரை 65 ஆண்டுகளாகக் கிறிஸ்துவை அறிவித்து வருகிறார். கடைசிக் காலத்திலும் கண்ணொளி கெட்டாலும் உள்ளொளி பெற்று —தொண்ணூறு வயது தாண்டிய பின்னரும் இயேசுவின் நாமத்தை ஓர் இளஞ் சிங்கம்போல் துள்ளிக் குதித்து கர்ஜனையுடன் அறிவித்து வருகிறார்.

பல்லாண்டுகளுக்குமுன் கிறிஸ்து சமயத்தைத் தழுவிக் காலஞ்சென்ற கதிர்வேலு முதலியாரின் பேத்தியான கமலம்மாளை 1916ல் மணந்து 55 ஆண்டுகள் இனிய இல்லறம் நடத்தினர். இவரது ஊழியத்திற்குக் கமலம்மாள் பக்க பலமாய் இருந்தார்கள்.

பால் கடம்பவனம் அவர்கள் சைவ சித்தாந்த ஆராய்ச்சி யாளர். மாண்புமிக்க தமிழ் மாணவர். இரட்சண்ய சரிதப் படலத்தின் முதல் உரையாசிரியர், சிறந்த நூலாசிரியர், கேட்டார்ப் பிணிக்கும் பேச்சாளர். இந்து மதமும் கிறிஸ்தவ மதமும் நன்குணர்ந்தவர். தமிழும் ஆங்கிலமும் கற்றறிந் தவர். தாயுமான சுவாமிகளின் முதற் சீடரான அம்பலவாண சுவாமிகளுடைய வழித் தோன்றல். இமயம் முதல் குமரி வரை சுற்றித் திரிந்தவர். இலங்கை, பர்மா முதலிய இடங் களை நன்கறிந்தவர். இரங்கூன் அத்தியட்சாதீனத்தில் 25 ஆண்டுகள் காரியதரிசியாகவும் கணக்கராகவும் பணி புரிந்தவர். திருச்சபை புத்துயிர்பெற வீர முழக்கம் செய் தவர். உடைந்து இடிந்துபோன குடும்பங்களை இயேசுவின் அன்பால் கட்டியவர். தெய்வீக சிகிச்சையாளர். ஆத்துமநோய் தீர்க்கும் மருத்துவர். நெல்லையின் நண்பர். ‘திருநெல்வேலி அத்தியட்சாதீன ஆரம்பம்’ என்ற அரிய நூலை எழுதியவர். இரட்சணிய சான்றோன் என்ற தாமிரப் பட்டயம் பெற்றவர். இன்று கண் பார்வையற்ற நிலையில் செங்கல்பட்டில் மகன் இல்லத்தில் வசித்து வருகிறார்.

பால் கடம்பவனப்பெரியார்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டே செல்லலாம். ஆனால் இந்நூலிலுள்ள அனுபவ திருஷ்டாந்தங்கள் அனைத்துமே அவரது வாழ்வின் பின்னணி யங்கள்தாம். அவரது வாழ்க்கைச் சரிதங்களின் பல கோணங் களை இந்நூல் முழுவதும் திருஷ்டாந்த வடிவில் பரக்கக் காணலாம். எனவே மிகுதி கருதி இத்துடன் அமை கிறேன்.

‘முதியோர் பேசட்டும், வயதுசென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும்’ *(யோபு 32:7)*

ஆர். எஸ். ஜேக்கப்

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

திருஷ்டாந்தத் திரட்டு எனது திருப்பணிகளில் ஒன்று. கருத்துக்களை ஆணித்தரமாக மனதில் பதியவைக்க அருளுரை எடுத்துக்காட்டுகள் வலுமிகுந்தனவாகும். அருமை இரட்சகரும் கடவுள் அரசுபற்றிய மறை செய்திகளை உவமைகளாகச் சொன்னார். எனவேதான் எனது எழுத்துப் பணிகளுக்கு மத்தியில் பக்திமான்களின் உன்னதமான உவமைகளைத் திரட்டி வெளியிடுவதையும் இறை இலக்கியப் பணியாகக் கொண்டேன்.

தந்தை பால் கடம்பவனம் அவர்களை தமிழ்க் கிறிஸ்தவ உலகு நன்கு அறியும். வாரமொரு கடிதம் எழுதி என்னை ஊக்குவிக்கும் பெரியார். கவியரசர் கிருஷ்ணபிள்ளை வைணவத்திலிருந்து வைராக்கிய கிறிஸ்தவரானார். பால் கடம்பவன சுந்தரனார் சைவ சமயத்திலிருந்து கிறிஸ்துவின் அடியாரானார். தொண்ணூறும் வயதிலும் தொண்டாற்றத் துடிக்கும் தூய உள்ளம்; துவழாத தெய்வ எண்ணம்; நெஞ்சமெல்லாம் நெல்லையம்பதியைப்பற்றிய இனிய நினைவுகளே.

அனுபவ திருஷ்டாந்த வெளியீடு குறித்து 7–9–'73ல் சென்னையில் தந்தையவர்களோடு நேரில் கலந்து உரையாடி ஒரு முடிவுக்கு வந்தோம். அன்னாரது முழு ஆசியையும், பூரண அனுமதியையும் பெற்று 1974 டிசம்பரில் 'அனுபவ திருஷ்டாந்தங்கள் நூறு' என்ற நூலின் முதற் பதிப்பை வெளியிட்டேன்.

பல ஆண்டுகளாக சேகரித்து வைத்திருந்த பால் கடம்பவனாரின் திருஷ்டாந்தத் திரட்டிற்கு தலைப்புகள், பகுப்புகள், விவிலிய மேற்கோள்கள் முதலியன யாவும் புதிதாகச் சேர்த்தேன். மொழி நடையில் மாற்றம் செய்தேன். எடுத்துக்காட்டுகளின் நிகழ்ச்சிகள் அனைத்தும் உண்மை. தந்தையவர்களின் வாழ்வில் நடந்த சம்பவங்கள் அதிகம்.

எனது முந்திய சிறுகதை—திருஷ்டாந்த நூல்களைப் போலவே இந்நூலும் மிகுந்த வரவேற்புடன் துரிதமாக விற்பனையாயிற்று. கடந்த மூன்று ஆண்டுகளாக பிரதிகள் கிடையாத நிலை ஏற்பட்டது.

தந்தை பால் கடம்பவன சுந்தரனாரின் ஆயுள் காலத்திலேயே—மேலும் அவர்தம் 91ம் வயதின் நினைவாக 'அனுபவ திருஷ்டாந்தங்கள் நூறு' என்ற நூலை மறுபதிப்புக் கொண்டுவர விழைந்தேன். சி. எல். எஸ். ஸ்தாபனத்தார் என் விருப்பத்தை நிறைவேற்ற முன்வந்தனர்.

இரண்டாம் பதிப்பை மிகச் சிறந்த முறையில் வெளிக் கொண்டுவந்த கிறிஸ்தவ இலக்கிய சங்க நிறுவனத்தாருக்கு என் உள்ளம் வழிந்தோடும் நன்றியை நவில்கின்றேன். தந்தையவர்களின் மிகுந்த ஆசியும் அவர்களுக்கு உண்டு. இப் பொறுப்பை முன் நின்று நடாத்திய—அவ்வப்போது என்னை ஊக்கிய என் கெழுதகை நண்பர் திரு. தி. பாக்கியமுத்து அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

அனைத்தும் நிறைவுடன் நடந்தேற அருள்பாலித்த இறையருளுக்கு என் இதயாஞ்சலி.

ஜெப நிலையம்,
4, வாயிலார் நாயனார் தெரு,
பாளையங்கோட்டை 627 002.

ஆர். எஸ். ஜேக்கப்
8–5–1978

# 1
# பிறந்த நாள் பரிசு

காம்பெல் மார்கன் என்ற குருவானவர் சிறந்த எழுத்தாளர், நல்ல பேச்சாளர். பல்லாண்டுகள் இறைவனுக்குப் பணியாற்றிய பின் ஓய்வெடுத்துக்கொண்டார். அவர் முதிர் வயதான காலத்தில், அனுதினமும் ஹெலன் என்ற தமது பேத்தியுடன் உலாவச் செல்லுவதுண்டு. அப்படி உலாவச் செல்லுகையில் தமது பேத்தியுடன் பேசி, விளையாடி, இன்பமாகப் பொழுதுபோக்கி வந்தார்.

ஆனால் திடீரென்று ஒரு நாள் ஹெலன் உலாவப் போக வில்லை. காம்பெல் மார்கன் எவ்வளவோ கெஞ்சியும் ஹெலன் உலாவப் போக மறுத்துவிட்டாள். அடுத்த நாளும் தாத்தா அழைத்தார். அடுத்த நாளும் ஹெலன் போகவில்லை. அப்படியே 10 நாட்களாக ஹெலன் தாத்தாவுடன் உலாவச் செல்லவில்லை. ஆகவே மார்கன் துரை பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல், தனியாக உலாவச் சென்றுவிட்டு, சலிப்போடு வீடு திரும்புவார்.

பதினோராவது நாள் அதிகாலையில் ஹெலன் தன் தாத்தாவாகிய காம்பெல் துரையிடம் ஓடிவந்து, 'தாத்தா, இன்று உங்களுடைய பிறந்த நாள். உங்களுக்கு என் பிறந்த நாள் தோத்திரம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. இதோ என் பிறந்த நாள் அன்பளிப்பு' என்று அழகாகப் பின்னியிருந்த ஒரு மேஜோடை அவர் கையில் கொடுத்தாள். 'நாம் உலாவச் செல்லுகையில் உங்கள் மேஜோடு கிழிந்திருப்பதைக் கவனித்தேன். ஆகையால் 10 நாட்களாக உங்களோடு உலாவ வராமல், அந்நேரத்தில் உட்கார்ந்து இந்த மேஜோடைப் பின்னினேன்' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

காம்பெல் மார்கன் பேத்தியைத் தழுவி முத்தமிட்டு, 'கண்மணியே, அடுத்த ஆண்டு நான் உயிரோடிருந்தால், என் பிறந்த நாளுக்கு அன்பளிப்பு கொடுக்க நீ விரும்பினால் அதைக்

கடையில் வாங்கிக் கொடு. அதற்கென்று என்னைத் தனியே உலாவ அனுப்பிவிட்டு, வீட்டில் உட்கார்ந்து எதையாவது செய்துகொண்டிருக்கவேண்டாம். ஹெலன் நீதான் எனக்கு வேண்டும். நீ கொடுக்கும் பொருள் வேண்டாம். நீதான் வேண்டும்' என்ருர்.

இறைவன் விரும்புவதும் உன்னைத்தான், உன் தோழமை யைத்தான் விரும்புகிருர், உன் பொருளைவிட உன் அன்பைத் தான் அதிகமாக விரும்புகிருர்.

'உங்கள் இளைய சகோதரனை என்னிடத்துக்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்' *(ஆதியாகமம் 42:20)*

'அது ஆண்டவருக்கு வேண்டும் என்று சொல்லுங்கள்' *(லூக்கா 19:31)*

'நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்' *(2 கொரிந்தியர் 12:14)*

# 2

# மகாராஜாவைப் பார்த்தேன்!

நாகர்கோவில் என்னும் நகரில் நடந்த சம்பவம் இது:

தானியேல் தம் மகனைப் பார்த்து, 'மகனே! காலையில் வெளியே போனவன் பகல் 11 மணிக்குத்தானே வந்தாய்' என்று கேட்டார்.

மகன், 'அப்பா! மகாராஜா சமுத்திர ஸ்நானம்பண்ண கன்னியாகுமரிக்குப் போனார். மணிமேடையில் காத்திருந்த ஆயிரம் மக்களில் நானும் ஒருவனாக நின்று மகாராஜாவைப் பார்த்துவிட்டு வந்தேன்' என்றான்.

தகப்பன், 'நீ பார்த்ததைப்பற்றி எனக்குச் சொல்' என்றார். அதற்கு மகன், 'அப்பா! மகாராஜா சிவப்புச் சட்டையும், சல்லடமும் போட்டிருந்தார். அதில் ஜிகினா கோடுகளும், தங்கப் பித்தானும் இருந்தன. தங்கச் சங்கிலியும், கைவிரல்களில் மோதிரங்களும் அணிந்திருந்தார். அவர் தொப்பியில் ஜிகினாவினால் யானை, புஷ்பங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவர் எப்பக்கம் திரும்பினாலும் ஜில் ஜில்லென்று ஜொலித்தது. என்ன அழகு அப்பா! மகாராஜாவைப் பார்த்தேனே!' என்று கூறி மகிழ்ந்தான்.

உடனே தகப்பன் அவனைக் கட்டி அணைத்துக்கொண்டு, 'தாசையா! நானும் மணிமேடையில் நின்றேன். மகாராஜா வண்டிக்குள் வெள்ளைச் சட்டையுடன் தலையணையின்மேல் சாய்ந்துகொண்டிருந்தார். அங்கு வந்திருந்த அநேகர் அவரைப் பார்த்திருக்கமாட்டார்கள். மகனே நீ வண்டியோட்டியைத்தான் பார்த்தாய். நீ சொன்ன அடையாளங்கள் எல்லாம் அவனில் நானும் பார்த்தேன்' என்றார். தாசையா மகாராஜாவைக் கண்டதாக எண்ணி ஏமாந்து போனதை நினைத்து தகப்பன் வருந்தினார்.

இதில் ஒரு பாடம் உளது. நாம் வேத அதிகாரங்களையும், ஜெபங்களையும், சபைச் சட்டங்களையும் மனப்பாடமாக

அறிந்திருக்கலாம். இறைவனை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோமா? நாம் புல்லுள்ள இடம், அமர்ந்த தண்ணீர், கோலும் தடியும், பந்தி பானங்கள் இவற்றை அறிந்திருக்கலாம். அந்தச் சங்கீதத்தில் மறைந்திருக்கும் மேய்ப்பனைக் கண்டுள்ளோமா? அன்பின் இலட்சணங்களை நாம் படித்தும், கேட்டும் இருக்கின்றோம். அவைகளுக்கு ஆதாரமாக அதில் மறைந்திருக்கும் அன்பே உருவானவரைக் கண்டுள்ளோமா?

அவரை நமது பிரதி தின அனுபவத்தில் கண்டிருந்தால் குடும்பங்களிலும், சபைகளிலும் மனவேற்றுமைகளுக்கு இடம் இருக்குமா? நமது வாழ்க்கையில்தான் அதை நிரூபித்துக் காட்டவேண்டும்.

'உன் முக ரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்; உன் சத்தம் இன்பமும், உன் முக ரூபம் அழகுமாயிருக்கிறது' (உன்னதப்பாட்டு 2:14)

'தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்' (யோவான் 1:18)

# 3

# 'ராஜா படம்டா'

நெல்லை நாட்டில் ஒரு வாலிபன் தன் மனைவி இறந்தபின் நான்கு பிள்ளைகளையும் தன் தாயார் வசம் விட்டுவிட்டுப் பட்டாளத்தில் சேர்ந்தான். வட இந்தியாவுக்குப் போனபின் ஒரு தினம் ஒரு இன்சூரன்ஸ் கவர் வந்தது. அதை தாயார் உடைத்துப் பார்த்ததும் பளபளவென்று அச்சடிக்கப்பட்ட 10 ரூபாய் நோட்டுகள் 12 இருந்தன. அவள் அதைப் பார்த்து, ராஜா படம் நமக்கு எதற்கு என்று தூக்கி எறிந்து விட்டாள். பிள்ளைகள் அதை எடுத்து 'ராஜா படம்டா' என்று விளையாடிக்கொண்டிருந்த தருணத்தில், பிள்ளைகளின் தாத்தா வந்தார். ஒருவன் ஒரு 10 ரூபாய் நோட்டின் பின்புறம் சாதத்தைத் தடவி சுவற்றில் ஒட்டிக்கொண்டிருப் பதைப் பார்த்து அவர் அந்த 12 நோட்டுக்களையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார். சிறுவர்கள் 'ராஜா படம்' என்று அழுதுகொண்டே இருந்தனர். அவர் ஒரு மணி நேரத்துக்குப் பின் 120 வெள்ளிக்காசுகளைக் கொண்டுவந்து தன் மனைவியிடம் 'பொன்னி அந்த ராஜா படம் சாதாரண தாள் இல்லை. அது ஒவ்வொன்றும் 10 ரூபாய். இதோ 120 ரூபாய்' என்று எண்ணிக் கொடுத்தார்.

அவள் புன்னகையுடன் கை நிறைய வாங்கி அதைக் கண்களில் ஒத்திக்கொண்டாள்.

நண்பர்களே, இதன் காரணத்தை நீங்கள் அறிந்து கொண்டீர்களா? பொன்னி ஆச்சி, தன் வாழ்நாளில் 10 ரூபாய் நோட்டைப் பார்த்தவளே அல்ல. எனவே அதைத் தூக்கி எறிந்துவிட்டாள்.

அன்புடையீர், இதில் ஒரு சவால் இருக்கிறது. வேதப் புத்தகத்தில் அடங்கியிருக்கும் பொருள் அறியாமல் அதை அலட்சியமாக நடத்துகிறவர்கள், ஜெபத் தியானம் இல்லாத வர்கள் பலர் நம்மிடையில் உள்ளனர் அல்லவா? ஜான்

பனியன் என்னும் பெரியவர், 'நான் பரிசுத்த வேதாகமத்தைத் திறக்கும்பொழுதெல்லாம் புதுக் கண்களால் அவைகளைப் பார்க்கிறேன்' என்றார்.

நாம் வேதாகமத்தைப் படிக்கும்போதெல்லாம் அதில் புது ஞானம், புது ஒளியைக் காண்கிறோம் என்று அர்த்தம்.

இறைவனின் அருமை பழகப் பழகத்தான் தெரியும். சமையலறையில் உள்ள இரும்புக் கத்தியை பிரதி தினமும் உபயோகப்படுத்தி வருவதால் வெண்ணிறத்தை அடைவதுபோல் வேதாகமத்தை வாசித்து உணர உணர அது நமது வாழ்க்கையையும், இருதயத்தையும் புதுப்பிக்கும். இல்லாவிடில் வேதப் புத்தகம் பழங்கதையாகத்தான் நமக்குக் காணப்படும்.

'கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்' *(சங்கீதம் 1:2)*

'வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்' *(யோவான் 7:49)*

# 4

# 'அம்மா, உங்களையும் சாமி பார்க்கிறார்'

என் பிரயாண ஊழியத் துறையில் ஒரு பக்தியுள்ள மாதைப் பார்த்தேன். அவர்கள் தன் ஆறு அல்லது ஏழு வயதுள்ள மகனைப் பக்தியுள்ளவனாகவும், தேவ ஊழியனாகவும் மாற்றப் பிரயாசப்பட்டு அடிக்கடி ஜெபித்துப் புத்தி சொல்லி வந்தார்கள். ஒருநாள் அவன் பள்ளியிலிருந்து வரும் முன், மேசையில் ஒரு மிட்டாய் துண்டை வைத்துவிட்டு ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிள்ளையாண்டான் வரும் போது அதைப் பார்த்துத் தின்றுவிட்டான். சிறிது நேரத் திற்குப்பின் அம்மாள், 'ராஜன், இங்கே வாடாக்கண்ணு, இன்று எவ்வளவு மார்க் வாங்கினாய்?' என்று கேட்டார்கள். அவன் ஓடிவந்து சிலேட்டைத் தூக்கி தன் மார்க்கைக் காட்டினான். 'மேசையில் இருந்த மிட்டாயைப் பார்த்தாயா?' என்று கேட்டார்கள். 'நான் அதைப் பார்க்கவும் இல்லை, தின்னவும் இல்லை' என்று சொன்னான். அதற்கு அம்மாள் 'ராஜன், நீ அந்த மிட்டாய் எடுத்ததைச் சாமி பார்த்தார். அதை நீ தின்றதையும் அவர் பார்த்தார். நீ திருடினது மில்லாமல் பொய் சொன்னதையும் அவர் கேட்டார். சாமிக்கு உன்மேல் உள்ள அபிப்பிராயம் குறைந்துபோனதினால் உனக்கு அவர் மார்க் கொடுக்கவில்லை. இந்த நாள் உனக்குக் கெட்ட நாளாய்ப் போய்விட்டதே' என்று சொல்லி, 'இனி நீ திருடாதே, பொய் சொல்லாதே' என்று பிரம்பை எடுத்து 5, 6 அடிகள் அடித்துவிட்டார்கள். அவன் அழுது கொண்டு, 'அம்மா, நீங்கள் என்னை அடிக்கிறதையும் சாமி பார்க்கிறாரே' என்றான். உடனே அந்த அம்மாள் நான் ஒரு கோபக் குணமுள்ள தாயார் என்று சாமி பார்த்துவிட்டாரே என்று புலம்பி, 'ஆண்டவரே நான் என் பிள்ளையை அடித்த பாவியாகிவிட்டேன். எனக்கு என் கோபம் தணிய உதவி புரியும். என் ஒரே மகனை பலதரம் அடிக்காமல் அவனை அன்போடு வளர்க்க எனக்கு உதவிபுரியும்' என்று ஜெபித்து, ராஜனை அழைத்து அவன் கன்னத்தையும், அவனை அடித்த

முதுகையும் முத்தமிட்டு, 'இனிமேல் நீ திருடாமலும், பொய் சொல்லாமலும் இருந்தால் ஆண்டவர் உனக்கு 'மார்க்' கொடுப்பார்; அம்மா உன்னை அடிக்கமாட்டார்கள். அதனால் அம்மாளுக்கும் மார்க் கொடுப்பார்' என்று சொல்லி முடித்தார்கள்.

'கர்த்தர் இரக்கமும் மன உருக்கமுமுள்ளவர்'

*(சங்கீதம் 111:4 )*

'உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'

*(எபேசியர் 6:4)*

# 5
# மேலை நாட்டு நேர்மை

குமாரி டால்ஸ்கார்ட் என்னும் மாது டென்மார்க் தேசத்தின் தலைநகராகிய கோபன்ஹகன் என்னும் பட்டினத்தின் தெருவில் நடந்து சென்றபோது அவள் கழுத்தில் இருந்த பவழ மாலை கீழே விழுந்துவிட்டது. வீடு சென்றபின் அது காணாமற்போனதை அறிந்து மறுபடியும் திரும்பி தெருவெல்லாம் தேடிப் பார்த்தும் கிடைக்காமல் மனவருத்தத்துடன் போலீஸ் நிலயத்திற்குச் சென்றாள். அங்கு அந்த மாலையைக் கண்டு அதிகாரியினிடம் பெற்றுத் திரும்பினாள்.

லண்டன் பட்டணத்தில் ஒரு புத்தக வியாபாரி தன் கடையில் காலையில் புத்தகங்களை வைத்து, அதன் விலையை அதன்மேல் எழுதி வைத்து, அதன் நடுவில் ஒரு பித்தளைச் செம்பை வைத்துவிட்டு வீட்டுக்குப் போய்விடுவான். அக் கடைக்கு வருகிறவர்கள் தங்களுக்கு வேண்டிய நூல்களை எடுத்துக்கொண்டு அதன் விலையை அந்தச் செம்பில் போட்டு விடுவார்கள். கடைக்காரன் மாலையில் வந்து குறைந்த புத்தகங்களுடைய விலையையும் செம்பில் உள்ள பணத்தையும் எண்ணிப்பார்த்தால் சரியாக இருக்கும்!

காலஞ்சென்ற மறைத்திரு. இரங்கராமானுஜம் லண்டனில் பஸ் வண்டியில் சென்ற சமயம் சக பிரயாணி ஒருவரைக் கவனித்தார். அவர் இறங்கவேண்டிய இடம் வரும்வரையில் கண்டக்டர் அவரிடம் வரவில்லை. அவர் இறங்கும்பொழுது பக்கத்தில் இருந்த இவரிடம் டிக்கட் பணத்தைக் கொடுத்து அதைக் கண்டக்டரிடம் கொடுத்துவிடும்படியாகச் சொல்லி விட்டு இறங்கிவிட்டார். அவர் இறங்கிப் போனபின் இவர்

கண்டக்டரை அழைத்து நடந்த காரியத்தைச் சொல்லி அவனிடம் பணத்தைக் கொடுத்தார். அவன் அந்தப் பணத்துக்குரிய டிக்கட்டை எடுத்து அதைக் கிழித்து எறிந்து விட்டான்!

'உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்'
*(நீதிமொழிகள் 2:7)*

'எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாய் இருக்க வேண்டும்' *(1 தீமோத்தேயு 3:11)*

# 6

# தோட்டக்காரா! ஓர் உதவி!

சுவீடன் தேசத்தில் பிரதான நகரமாகிய அப்சாலா பட்டணத்தில் ஒரு பெண் மாலேயில் உலாவச் சென்ற தருணத்தில் ஒரு நந்தவனத்தைப் பார்த்தாள். அவள் கண்களேயும், மனதையும் கவர்ந்த புஷ்பங்கள் பலவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த தருணம் அங்கு வந்தவனேப் பார்த்து 'தோட்டக்காரரே, நீர் எனக்கு ஓர் உதவி புரியவேண்டும். நான் ஒரு தாய், தகப்பன் அற்ற பிள்ளே. என் பாட்டி என்னே அருமையாக வளர்த்து வருகிருள். அவள் பிறந்த நாள் நாளேய தினம். அவர்களேச் சந்தோஷப்படுத்த நான் கொடுக்கும் வண்ணம் புஷ்பக் கொத்து ஒன்றைக் கொடுங்கள்' என்று கேட்டாள். அவன் அப்பிள்ளேயை உட்கார வைத்துவிட்டு நீண்ட காம்புள்ள புஷ்பங்களேக் கொய்து வட்டமான ஒரு பொக்கேயாகச் செய்து அவள் கையில் அரைமணி நேரத்திற்குப் பிறகு கொடுத்தான். அவள் மனதில் உள்ள சந்தோஷத்திற்கு அளவில்லே. 'தோட்டக்காரா, இந்தப் பணத்தை வைத்துக்கொள்ளும்' என்று ஒரு தொகையைக் கொடுத்து தன் நன்றியைத் தெரிவித்தாள். அவன் அதை வாங்காமல், 'பெண்ணே, அரசன் புஷ்ப வியாபாரி அல்ல, புஷ்பத்தை விற்பது அவன் தொழிலும் அல்ல' என்முன். உடனே அவள் நிமிர்ந்து பார்த்து அவன் சுவீடன் தேசத்து மன்னன் என்பதை அறிந்து ஒற்றை முழங்காலில் நின்று 'அரசரே, உம்மை நான் தோட்டக்காரன் என்று மதியீனத்தால் மதித்தேன். மன்னிப்பு ஈக' என்முள். அவள் குற்றத்தை உணர்ந்தவளாக அப் புஷ்பச் செண்டை அரசனுக்குக் கொடுத்தாள்.

அரசன் குனிந்து அவளே நிற்கவைத்து 'நான் தோட்டத்தில் உலாவ வந்தபடியால் நான் தோட்டக்காரன்தானே! நீ வருத்தப்படவேண்டாம்' என்று சொல்லி அப் பூச்செண்டை அவள் கையில் கொடுத்து மன்னன் அவளே முகமலர்ச்சியுடன் அனுப்பிவிட்டான்.

நண்பரே, இறைவன் நமக்கு அருளும் ஈவுகள் அனைத்தும் இலவசம்தானே! நாம் அந்த ஈவுகளையும் அதைக் கொடுக்கும் இறைவனையும் சந்தேகப்படாமல் அவைகளை மனங்குளிர வாங்கி அனுபவிப்போம் வாருங்கள்.

'ஓ, தாகமாயிருக்கிறவர்களே . . . நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்'

*(ஏசாயா 55:1)*

'அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணினாள்'

*(யோவான் 20:15)*

'சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்'

*(எபிரேயர் 7:7)*

# 7

# பேசிய உலக்கை!

இயேசு பெருமானுடன் நெருங்கி வாழ்ந்த பங்காரு, சந்திரா என்ற இரு தெலுங்கு மாதர்கள் அடுத்தடுத்து இருந்த இல்லங்களில் இனிமையாக வாழ்ந்து வந்தார்கள். அன்பும், ஐக்கியமும், ஆழ்ந்த பக்தியும் அவர்கள் உள்ளங்களில் உருவாகி இருந்தமையால், சில சமயங்களில் அவர்கள் கூடி ஜெபிப்பதும் உண்டு. இந்நிலையில் நடந்த சம்பவம் ஒன்றை எடுத்துரைப்பேன் கேளீர்!

சந்திரா, பங்காருவிடம் உலக்கை ஒன்றை இரவலாக வாங்கி வந்தாள். சில வாரங்களாக அந்த உலக்கை திருப்பிக் கொடுக்கப்படவில்லை. அதைக் கொடுத்துவிட்ட நினைவு சந்திராவுக்கு—அதை வாங்காத நினைவு பங்காருவுக்கு! உலக்கை போன இடம் தெரியவில்லை.

இவ்விஷயத்தில் அவர்கள் உள்ளத்தில் சற்று மனத்தாங்கல் எட்டிப் பார்த்திருந்தது.

வேலை முடிந்தவுடன் உலக்கையைச் சந்திரா முற்றத்தில் போட்டுவிட்டாள். விறகு வண்டிக்காரன் அன்று வாங்கின ஒரு வண்டி விறகை அந்த உலக்கையின்மேல் முற்றத்தில் போட்டுவிட்டான். வெயிலில் உலருவதற்காக ஒரு மாதம் போல் அவ்விறகுக் கட்டைகள் முற்றத்திலேயே கிடந்தன. பிறகு இரண்டாம் கட்டிலுள்ள பரணில், காய்ந்த விறகுகளை ஏற்றிக்கொண்டிருந்த தருணம், உலக்கை தென்பட்டது. அந்தோ! சந்திரா என்ன செய்வாள்? துரிதமாக அதை எடுத்துச் சென்று புலம்பினாள் கண்ணீருடன். 'இதைக் கொண்டுபோய்க் கொடுத்தால் அந்தச் சகோதரி, நான் பொய் சொல்லிவிட்டேனென்றும், நான் ஒழுக்கமற்றவளென்றும் நினைத்துக்கொள்ளுவாளே. அதனால் பிரிவினையும், பகையும் மலியக்கூடும். எனவே, இதை மறைத்துவிடுவதே மதியூகம்' என எண்ணி அதைக் கட்டிலின் கீழ் போட்டு விட்டாள்.

நாள் முழுவதும் இல்லற வேலையில் ஈடுபட்டு யாக்கை தளர்ந்து நித்திரைக்குப் போகும் தருணம், அவ்வுலக்கை சந்திராவுடன் பேச ஆரம்பித்தது. 'அக்கா, என்னை இங்கே போட்டுவிட்டீர்களே. என் அக்காள் என்னைத் தேடுகிறார்களே! அவர்கள் வீட்டு வேலையும் தோய்ந்துபோய்விடுகிறதே. இது தானா நியாயம்?' இப்படிப் பலதரம் உலக்கை கூச்சலிட்டது. சந்திராவின் தூக்கம் கெட்டுப்போய்விட்டது.

காலையில் எழுந்தவுடன், 'அக்காள், அக்காள்' என அவ் வுலக்கை மீண்டும் அலறியது. இவ்விதமாக அவ்வுலக்கை ஒரு வாரம்போல் 'தொண தொண' வென்று கத்திக் கொண்டே இருந்ததால் நித்திரை பங்கமடைந்த சந்திரா, அதைப் பின்கட்டிலுள்ள விறகுப் பரண்மேல் போட்டு விட்டாள். அன்றிரவு சந்திரா நன்றாகத் தூங்கினாள்.

பின்கட்டிலுள்ள கிணற்றில் தண்ணீர் இறைப்பதற்காகக் குடம், வாளி, கயிறு ஆகியவற்றுடன் சந்திரா அப்பக்கம் போகும்பொழுதெல்லாம் அந்த உலக்கை கூச்சலிடும். சந்திரா அதைக் கேட்டும் கேளாமலும் தண்ணீர் கொண்டுவருவது வழக்கம். இத்தொல்லையைத் தாங்க முடியாமல் அடிக்கடித் தவிப்பதுண்டு. ஒரு தினம் சந்திரா தண்ணீர் இறைக்கும்பொழுது அவ்வுலக்கை, 'அக்காள், நீ கிறிஸ்தவ மாதுதானா? நீ செய்வது நியாயமாகுமா? என்னை இப்படிப் போட்டிருப்பது உனக்குத் திருப்திதானா?' என்று 'லப லப' என அடித்துக்கொண்ட குரல் கிணறுவரை எட்டி சந்திராவின் காதைத் துளைத்தது.

ஏழை மகள் சந்திரா குடத்தை அங்கு வைத்துவிட்டு வேக மாக வீட்டிற்குள் நுழைந்து, ஆண்டவர் பாதத்தில் விழுந்து அழுதாள். உடனே அவ்வுலக்கையைப் பங்காருவிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்படிப் பலத்த ஏவுதல் கிடைத் தது. எழுந்தாளே சந்திரா, ஓடினாளே பங்காரு வீட்டிற்கு! நின்றாளே அவள் முன் கண்ணீருடன்!

பங்காருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவளைக் கட்டி அணைத்துக்கொண்டாள். நடந்த காரியத்தை எல்லாம் சொல்லி மன்னிப்புக் கேட்டபின் சந்திரா உலக்கையைக் கொண்டுவந்து பங்காருவிடம் கொடுத்துவிட்டாள்.

அதிலிருந்து பங்காருவும், சந்திராவும் அளவுகடந்த அன்பின் பெருக்கினுல் இன்பமுடன் தங்கள் நட்பை வளர்த்து வந்தார்கள்.

நண்பரே! நீர் என்ன நினைக்கிறீர்? உலக்கை பேசவே இல்லை என்கிறீரா? உண்மைதான். சந்திராவின் மனச்சாட்சியே பேசியது—அவளைப் பேசவும் வைத்தது. சிறந்த விசுவாசிகளின் மனச்சாட்சி அவர்களை வதைப்பது சகஜம். இதனுல் தான் முற்காலத்துப் பக்தன் ஒருவன் 'சுத்த இருதயத்தையும், நல்ல மனச்சாட்சியையும் தாரும்' என்று இறைவனை வேண்டினுன்.

'தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்'

*(சங்கீதம் 51:10)*

'பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்'

*(யாக்கோபு 4:8)*

'அன்போ தூய உள்ளம்; குற்றமற்ற மனச்சான்று'

*(1 தீமோத்தேயு 1:5)*

# 8

# ஐயங்கார் அகமகிழ்ந்தார்

**ப**ல்லாண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் எழுப்புதல் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்த ஒரு பெரியாரிடம் ஒரு மாது சொன்ன சாட்சியைக் கீழே காண்பீர்:

ஐயா, நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த பெண். என் பெற்றோர் சிறந்தவர்களாயினும், மார்க்கப் பற்றில் குறைந்தவர்கள். அர்த்தமில்லாமல் மார்க்க அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து வந்தனர்.

கல்வி கற்றபின் சில ஆண்டுகளாகப் பணியாற்றி வந்த தருணத்தில் ஆதாரப் பயிற்சிக்காக (Basic) சர்க்கார் என்னைத் தெரிந்தெடுத்து வேறொரு பள்ளிக்கு அனுப்பி வைத்தது. அப்பொழுது எனக்கு வயது 25 இருக்கும். அப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஒரு பிராமணர். அவர் அன்புள்ளம் படைத்தவர்.

ஒருநாள் காலையில் குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவே நான் பள்ளிக்குச் சென்றுவிட்டேன். நான் தனிமையாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட ஐயங்கார் (தலைமையாசிரியர்) என்னைத் தமது அறைக்குக் கூப்பிட்டனுப்பினர். நடுக்கத்துடன் அவருடைய அறைக்குச் சென்றேன். அவர் என்னைப் பார்த்து, 'அம்மா, உங்கள் பெயரைப் பார்த்தால் நீங்கள் கிறிஸ்தவராய் இருக்கவேண்டுமே!' என்றார். 'ஐயா, நான் கிறிஸ்தவப் பெண்தான்' என்றேன். 'அப்படியானல் இன்று காலை நீங்கள் வேதம் வாசித்து ஜெபம் செய்திருக்க வேண்டுமே. இன்று உங்களுக்குக் கிடைத்த வேத வசனம் என்ன?' என்று கேட்டார். அதற்கு நான் வெட்கத்துடன், 'ஐயா, வேதம் வாசித்து ஜெபம் செய்கிற பழக்கம் எனக்கு இல்லை' என்றேன். உடனே அவர் 'அம்மா, நாளையிலிருந்து வேதம் வாசித்து ஜெபம் செய்யும் பழக்கத்தை ஆரம்பியுங்கள்' என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார்.

ஒரு வாரத்துக்குப்பின் மறுபடியும் அவர் என்னை அழைத்து வேதம் வாசிக்கவும் ஜெபம்பண்ணவும் நான் பழகிக்கொண்டு வருகிறேனா என்று கேட்டார். மறுபடியும் வெட்கத்துடன் தலைகுனிந்து என்னிடம் வேதப் புத்தகம் இல்லை என்று சொன்னேன். அடுத்த நாள் சம்பளம் வாங்கும் நாள். சம்பளம் வாங்குவதற்காக நான் சென்ற சமயம் அவர் என்னைப் பார்த்து, 'அம்மா, உங்களுக்கு ஒரு தமிழ் பைபிள் வாங்கியிருக்கிறேன். அதற்குரிய பில் இதோ இருக்கிறது. பில்லில் காணும் தொகையைப் பிடித்துக்கொண்டு சம்பளத்தைத் தருகிறேன்' என்றார். நல்லது ஐயா என்று சொல்லி அவர் கொடுத்த பைபிளை வாங்கிக்கொண்டேன். அந்த ஐயங்கார் தலைமை ஆசிரியருக்குப் பயந்துகொண்டே பைபிள் வாசிக்க ஆரம்பித்தேன். தினமும் பைபிள் வாசித்தேன். என் உள்ளத்தில் அனல் வீச ஆரம்பித்தது. ஐயங்கார் அதைக் கேட்டு அகமகிழ்ந்தார். அப்பள்ளியை விட்ட பிறகும் பைபிள் வாசிப்பதும், ஜெபம் செய்வதும் அனுதினப் பழக்கமாகிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் தந்தை கடம்பவனம் அவர்களின் கூட்டத்திற்குச் சென்று உபதேசங் கேட்டு, அவர்களுடைய கடைசிக் கூட்டத்தில் என்னை முழுவதும் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தேன், இப்பொழுது நான் இறைவனுடைய பிள்ளை. இறைவனுக்கே துதி.

'உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்' *(யோனா 1:6)*

'வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே'

*(யோவான் 5:39)*

9

# மனத்தாழ்மை

சென்னையில் இருந்த பெரியார் ஒருவரைக் காண வாலிபன் ஒருவன் அவர் வீட்டிற்குச் சென்ருன். அப்பெரியாரின் மகள் வெளியில் வந்து சற்று கோபமாக பின்வருமாறு பேசினுள்: 'அப்பாவைப் பார்க்க தனிப்பட்ட நேரம் உளது. இத்தருணம் அவரைப் பார்க்க இயலாது, நீர் படித்த, நாகரீகமுள்ளவராகக் காணப்படுகிறீரே, உமக்கு இந்த ஒழுங்கு தெரியாதது எனக்கு மிக வருத்தம்' என வெகுண்டுரைத்து அவனைத் துரத்திவிட்டாள். சுமார் நான்கு ஆண்டுகளுக்குப் பின் அப்பெண்ணுக்கு விவாகம் சிறப்பாக நடைபெற்றது.

விவாகம் முடிந்தபின் ஒரு பூங்காவிலுள்ள பெஞ்சியில் அவர்கள் பேசிக்கொண்டிருந்த தருணம் அக்காதலன் அப்பெண்ணைப் பார்த்து 'முன்னுேர் தினத்தில் உன் தகப்பனுரைப் பார்க்க வந்த வாலிபனை வெகுண்டு துரத்திவிட்டாயாமே' என்ருன். அதற்கு அவள், 'தற்கால மக்களுக்கு மானம் மரியாதை என்பதே இல்லை. அப்பாவைப் பார்க்க வேண்டிய நேரம் அறியாது வந்த அந்த வாலிபனுக்கு ஒழுக்கத்தைப் புகட்டும்வண்ணம் ஒரு சூடு கொடுத்து அனுப்பினேன்' என்ருளே அப்பெண்மணியும். உடனே அக்காதலன் ஒற்றைக் கண்ணுல் அவளைப் பார்த்து விசில் அடித்துக்கொண்டு, 'நான்தான் அந்த வாலிபன்; அந்த சூடு இன்னும் ஆறவில்லை. உன் தகப்பனுரை அதற்குப் பின் பல தரம் கோயில்களிலும் கூட்டங்களிலும் கண்டு பேசினதின் பயனுக எங்கள் இருவருக்குள் உண்டான பரஸ்பர நட்பின் விளைவாக இவ்விவாகத்தை ஒழுங்கு செய்தார். இவ்வுலகிலுள்ள பெரியோரில் உன் தகப்பனுர் ஒருவர். உனது முற்கோபத்தினுல் உன் தகப்பனுரது பேர் கெட்டுப்போகாதபடி காத்துக்கொள்ளவே துணிந்து உன்னை மணம் புரிந்துகொண்டேன்' என்ருன். அவள் அகம் குழைய, முகம் வாட,

கண்கள் சொறிந்தவண்ணம் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

'மனத்தாழ்மையாய் இருப்பது நலம்'

*(நீதிமொழிகள் 16:19)*

'ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்'

*(பிலிப்பியர் 2:3)*

## 10

# நான் இவ்வாறு செய்திருப்பேனா?

நான் இரங்கூனில் அரசாங்க வேலை செய்து வந்த தருணத்தில், பிரதானமான கடிதங்கள் சிலவற்றை ஒரு கவரில் போட்டு கூட்டமான இரயில் வண்டியில் பிரயாணம் செய்தேன். நான் இறங்கும்பொழுது அக்கூட்டத்தில் அலசடிப்பட்டு அந்தக் கவரை நழுவ விட்டுவிட்டேன்.

'இப்பிரதானமான கடிதங்கள் போய்விட்டனவே, அரசாங்கத்திற்கு என்ன பதில் சொல்வேன்?' என்று துடித்துக்கொண்டும், ஜெபித்துக்கொண்டும் இருந்தேன். ஐந்து நாட்களுக்குப்பின் எனக்கு ஒரு ரெஜிஸ்டர் கவர் வந்தது. நான் மறந்துவிட்டு விட்டு வந்த கவரை ஒரு புருஷோத்தமன் எடுத்து, அதன் அருமையை அறிந்து, அதில் இருந்த என் விலாசத்திற்கு அனுப்பியிருந்தார். அவர் இளகிய குணத்தை நான் பாராட்டுகிறேன். அவர் யார் என்று எனக்கு இன்னும் தெரியாது! நான் இவ்வாறு செய்திருப்பேனா?

* * *

நான் பல்லாண்டுகளுக்குமுன் திண்டுக்கல் இரயில் நிலையத்தில் படுத்து அயர்ந்த நித்திரையில் இருந்த தருணம் ஒருவர் என்னைத் தட்டி எழுப்பி, 'ஐயா, உங்கள் பர்ஸ் (பணமும் டிக்கட்டும் உள்ள தோல்பை) பாதி தொங்குகிறது. எவனாவது எடுத்துக்கொண்டு போகக்கூடும். அதை எடுத்து உங்கள் உள் பாக்கெட்டில் வைத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி, நான் அதை உள் பாக்கெட்டில் வைக்கும்வரை காத்திருந்து என்னைப் படுக்க வைத்துவிட்டுப் போனார். அந்த உத்தமனை நான் பாராட்டுகிறேன். அவர் யார் என்று எனக்கு இன்னும் தெரியாது! நான் இவ்வாறு செய்திருப்பேனா?

* * *

கடந்த பர்மா யுத்தத்தில் சென்னைக்கு வரும் கடைசிக் கப்பலில் ஏற இருந்த பெருங்கூட்டத்தில் நான் டிக்கட் வாங்கக்

கூடாததால், ஓர் ஆங்கிலப் பாதிரியார் அந்த மக்களிடையில் அரைமணி நேரம்போல் க்யூ வரிசையில் நின்று டிக்கட் வாங்கி எனக்குக் கொடுத்த தருணத்தில், ஒரு நூறு ரூபாய் நோட்டு ஒன்றை என் கையில் கொடுத்து, 'பால், நீ சென்னையில் வெறுங்கையோடு இறங்கவேண்டாம், இப்பணத்தை வழிச் செலவுக்கு வைத்துக்கொள். நீ இதைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம்' என்று ஜெபித்துக் கொடுத்தார்.

நான் அந்த நோட்டைத் தனி ரூபாய் நோட்டுகளாக மாற்றி நாலு கட்டுகளாகக் கட்டி, எனது அரைஞாண் கொடியில் நாலு பக்கமும் அதைத் தொங்கவிட்டு ஒரு ஷர்ட்டினால் அதை மூடி, இருபத்தைந்து ஆண்டுகள் வசித்து வந்த பங்களாவைத் திறந்த படியே போட்டுவிட்டுக் கண்ணீருடன் கப்பலடிக்கு வந்து அக் கூட்டத்தில் நுழைந்து சென்னைக் கப்பலில் ஏறிவிட்டேன். அக்கப்பல், நீர்மூழ்கிக் கப்பலுக்குப் (Submarine) பயந்து எங்களைக் கல்கத்தா கொண்டுபோய் விட்டுவிட்டது. அங்குப் பல கஷ்டங்களைப் பல்லோருடன் பட்டுச் சென்னை வண்டியில் ஏறி, நான் இறந்துபோய்விட்டேன் என்று நினைத்து அழுது துடித்துக்கொண்டிருந்த என் மனைவி மக்களுடன் சேர்ந்து கொண்டேன்.

அந்த ஆங்கிலப் பாதிரியார் அப்பணத்தைக் கொடுத்திரா விடில், நான் பசியும் பட்டினியுமாக இருந்து டிக்கட் வாங்கப் பணம் இல்லாமல் பல்லோரைப்போல் நானும் கல்கத்தாவில் மரித்துப்போய் இருப்பேன். அந்த ஆங்கிலப் பாதிரியாரின் அன்பையும், முன்யோசனையையும் நான் பாராட்டுகிறேன். நான் இவ்வாறு செய்திருப்பேனா?

'தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்' *(சங்கீதம் 139:23)*

'தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்' *(1 கொரிந்தியர் 10:12)*

# 11

# உன் பெயர் அதுவா?

மகா அலெக்சாண்டர் என்ற கிரேக்க வீரனின் பட்டாளத்தில் சிப்பாயாக இருந்த ஒருவன், பட்டாள வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு நள்ளிரவில் வெளியே ஓட ஆரம்பித்தான்.

அங்குள்ள காவல்காரன் அவனைப் பிடித்து ஓர் அறைக்குள் அடைத்து வைத்திருந்து மறுநாளில் அவனைப் பட்டாளத்தின் அதிபதிமுன் நிறுத்தி, நடந்தவைகளைச் சொல்லிவிட்டான். அந்த அதிபதி அவனைப் பார்த்து அவன் தப்பி ஓட பிரயத்தனப்பட்டது உண்மையா என்று கேட்டான். அதற்குச் சிப்பாய் அதை ஒப்புக்கொண்டான்.

அதற்குப்பின் அந்த அதிபதி அவன் ஊரையும், அவன் பட்டாளத்தின் பேரையும், அவன் வேலை செய்த காலத்தையும், அவனுக்குக் கிடைத்த பரிசுகளையும், அவன் மனைவி மக்களைப்பற்றியும் விசாரித்துவிட்டு அவன் பெயரையும் கேட்டான்.

அதற்கு சிப்பாய் பணிவாக 'என் பெயர் அலெக்சாண்டர்' என்றான். உடனே அதிபதி எழுந்து நின்று 'நீ அலெக்சாண்டர் என்னும் பெயரை வைத்துக்கொண்டு, அலெக்சாண்டர் பட்டாளத்தைவிட்டு ஓடுகிறாயா? நீ ஒரு கோழை, முட்டாள். அலெக்சாண்டர் என்ற பெயர் உனக்குத் தகாது. அப்பெயரை மாற்றிக்கொள் அல்லது உன் மனதை மாற்றிக்கொள்' என்று கோபித்து, 'நீ எங்கள் பட்டாளத்திற்கு வேண்டாம்' என்று பிடித்துத் தள்ளிவிட்டான்.

அந்தச் சிப்பாய் கண்ணீருடன் அந்த அதிபதியின் காலைப் பிடித்து அழுது, தன் மனதை மாற்றிக்கொண்டதாகவும், இனி அப்பட்டாளத்திலேயே முடிவுபரியந்தம் பணிபுரிவதாகவும் பகர்ந்தான். அந்த அதிபதி சிப்பாயின் கையைக் குலுக்கி மறுபடியும் அவனை அலெக்சாண்டர் பட்டாளத்தில் சேர்த்துக் கொண்டான்.

இதை வாசிக்கும் நண்பரே! இதில் ஒரு நல்ல சவால் நமக்கு உண்டு. சில சமயங்களில் புறமதஸ்தர் நம்மைப் பார்த்து, 'நீ கிறிஸ்தவனுய் இருந்தும் பொய் சொல்லுகிருயே, மனேவியை அடிக்கிருயே, மதுபானம் குடிக்கிருயே, பொய்க் கணக்கு எழுதுகிருயே?' என்று சொல்வதை நாம் கேட்டுள்ளோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதை நாம் அறிந்திருப்பதைவிட பிற மதத்தைச் சேர்ந்த நண்பர்கள் நன்ருய் அறிந்திருக்கிருர்கள் என்பது தெளிவு.

நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் நமக்குக் கிடைத்துள்ள போதனேயின்படி நடப்பதே நல்லது.

'கர்த்தர் புறப்பட்டு, யுத்த நாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்' *(சகரியா 14:3)*

'அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல என்ருர்' *(லூக்கா 9:62)*

'அருட்செய்தியில் வைக்கும் நம்பிக்கைக்காக ஒரே நோக்கத் துடன் ஒருமித்துப் போராடுங்கள்' *(பிலிப்பியர் 1:27)*

# 12

# வாழ்க்கையின் வனப்பு

காலஞ்சென்ற பிஷப் ஹீபர் அவர்கள் முழந்தாளில் இருந்து ஜெபிக்கும்வண்ணம் ஒரு வெள்ளைக்கல் சிலை கல்கத்தா கதீட்ரல் ஆலயத்தின் மூலஸ்தானம் (Altar) முன் இருக்கிறது.

ஏழாவது எட்வர்ட் மன்னன் வேல்ஸ் இளவரசனாக கல்கத்தா வந்த சமயத்தில் ஆர்ச்டீக்கன் இளவரசனை அழைத்துப்போய் அந்தச் சிலையைக் காட்டினார்.

மன்னன் அவரைப் பார்த்து, 'அவரைப்பற்றி இத்தனை அழகிய சிலை அமைக்கும் அளவிற்கு பிஷப் ஹீபர் செய்த வேலை என்ன?' என்று கேட்டார். அதற்கு ஆர்ச்டீக்கன், 'அவர் செய்த வேலைக்காக அல்ல! அவர் எப்படி வாழ்ந்தார் என்பதைக் காட்டவே சிலை நாட்டப்பட்டது' என்றாராம்.

இது உண்மை. இதில் சிறந்த சத்தியம் அடங்கியிருக்கிறது. இந்தியா கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி போதுமான அளவு அறிந்திருக்கிறது. இனி பிரசங்கத்தினால் மாத்திரம் அல்ல, நம் வாழ்க்கையினாலும் அவரை உலக மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும் என்பது திண்ணம். நாம் பிரசங்கியாகவும், சாட்சியாகவும், எழுதப்பட்ட நிருபமாகவும் இருக்கவேண்டும் என்று வேதம் விளக்குகிறது. நமது வாழ்க்கையில் எத்தனையோ கிறிஸ்மஸ் பண்டிகைகளையும், புதிய வருடத்துக் கொண்டாட்டங்களையும் கண்டிருக்கிறோம். நாம் புதிதான வாழ்க்கையில் ஏறி வந்திருக்கிறோமா? அல்லது இவைகள் எல்லாம் சடங்காச்சாரங்களாகப் போய் விட்டனவா? கிறிஸ்தவ நெறியை நம்மைவிட மற்றவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்களே! நாம் வாழ்ந்து காட்டவேண்டும்.

'நீ ஒரு கிறிஸ்தவனாய் இருந்தும் தவறு செய்கிறாயே' என்று பிற சகோதரன் நம்மைப் பார்த்துக் கேட்டதைக் கேட்டிருக் கிறோம். 'நீ உயிருள்ளவன் என்று பெயர்கொண்டிருந்தும்

செத்தவனாய் இருக்கிறாய்' என்று சர்தை சபைக்குச் சொல்லியுள்ள எச்சரிப்பு நம் நினைவிற்கு வருகிறது (வெளி. 3:1).

'ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்' என்னும் இனிய மொழி புதிய உணவிலும், புதிய உடையிலும் அல்ல! புதிய வாழ்க்கை, புதிய மனமாற்றம், புதியன புகுதல் என்று பொருள்!

'குற்றமுள்ளவன் தன் வழிகளில் மாறுபாடுள்ளவன்; சுத்தமுள்ளவனோ தன் கிரியையில் செம்மையானவன்'

(நீதிமொழிகள் 21:8)

'ஆவியில்லாத சரீரம் செத்ததாய் இருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது'

(யாக்கோபு 2:26)

## 13

# இருதயத்தை அறுத்துப் பாருங்கள்!

பல்லாண்டுகளுக்கு முன் நெப்போலியன் என்னும் போர் வீரன் வாட்டர்லூ (Waterloo) என்னும் ஊரில் பெரிய சண்டையை நடத்திக்கொண்டிருந்த தருணத்தில் இருபத்தைந்து வயது வாலிபன் ஒருவன் கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தான். அவனை வைத்தியசாலைக்குக் கொண்டு போய் அவன் இருதயத்தில் ஒரு குண்டு இருப்பதை டாக்டர் கண்டார். மயக்கமருந்து கண்டுபிடிக்கப்படாத காலம் அது. டாக்டர் அவனைப் பார்த்து, 'உன் இருதயத்திலிருக்கிற குண்டை நான் எடுக்கப்போகிறேன். தாங்கமுடியாத வலி இருக்கும். அதைப் பொறுத்துக்கொள்' என்றார். அதற்கு அவன், 'கொஞ்சம் ஆழமாக என் இருதயத்தை அறுத்துப் பாரும். அங்கே நீர் நெப்போலியனைக் காண்பீர். குண்டு இருந்தால் நோவு அதிகமாக இருக்கும். நெப்போலியன் என் உள்ளத்தில் இருப்பதால் நம்பிக்கையும் சமாதானமும் இருக்கும். எனவே நான் நெப்போலியன் பெயரால் மரிக்கப் போகிறேன்' என்றான்.

நண்பரே, நமது இருதயத்தில் பொய், களவு, திருட்டு, சண்டை, பண ஆசை, மோகம் முதலிய குண்டை ஒத்த அந்நிய சரக்குகள் இருக்கின்றனவா என்பதை பரிசுத்த ஆவியின் பூதக் கண்ணாடியைக்கொண்டு சோதித்து ரட்சகரின் ரத்தத்தினால் துடைத்து சுத்திகரித்து 'சுத்த இருதய வாசரும் தூய இருதய நேசருமான' இயேசுபிரானை அந்த இருதயத்தில் வைத்துக்கொண்டால், நம் நீண்டகால வாழ்க்கையில் நமது இருதயத்தில் சந்தோஷமும் சமாதானமும் பொங்கி வழியும்.

‘ஆபத்தில் நானே அவனேடிருந்து அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்’ *(சங்கீதம் 91:15)*

‘என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு’ *(பிலிப்பியர் 4:13)*

‘கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிருர்; அவர் அவ்வாறு இருப்பதே உங்களுக்கு இனி மாட்சிமை கிடைக்கும் என்பதற்கு ஆதாரம்’ *(கொலோசேயர் 1:27)*

# 14

# வீரிய போர் வீரர்

பல்லாண்டுகளுக்கு முன் இத்தாலி தேசத்தைக் குடியரசு நாடாக மாற்றும் துறையில் ஜெனரல் கரிபால்டி என்னும் போர் வீரரும் அவர் சகாக்களும் போர்புரிந்து வந்தார்கள். அரசனது பட்டாளத்திற்கு எதிர்த்து நிற்கக்கூடாததால் படு தோல்வி அடைந்துவிட்டார்கள். அவமானம் ஒருபுறம், ஆற்றலும் ஆர்வமும் மற்ருெருபுறம் அவரை நெருக்கி வந்ததால் கரிபால்டி என்பவர் அப்பட்டாளத்தைத் தம் இல்லத்திற்கு அழைத்து வரிசையாக நிற்கவைத்தார். ஏராளமான மக்கள் வந்து ஒழுங்காக நின்றனர். ஜெனரல் கரிபால்டி மேடைக்குச் சென்று புலம்பினுர்: நண்பர்காள்! நாம் தோல்வி அடையவில்லை. இது வெற்றிக்கு முன்குறி. நான் மறுபடியும் போர்க்களத்திற்குச் செல்லத் தீர்மானித்துள்ளேன். உங்களுக்குக் கொடுக்க என்னிடம் பணம் இல்லை. பசியும், பட்டினியும் தான் நான் கொடுக்கும் பரிசு. காயமும் இரத்தமும்தான் நீங்கள் அடையும் வெற்றிப் பதக்கம். நான் இரு நிமிடம் கண் மூடித் திறப்பேன். அதற்குள் போருக்கு வரப் பிரியமுள்ளோர் ஓர் அடி முன் வாருங்கள் என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடினுர். நிமிடங்கள் இரண்டு கழிந்தன. கரிபால்டி கண்களைத் திறந்து பார்த்தார். வரிசை மாருது இருந்தது. ஒருவராவது முன்வரவில்லை என்று எண்ணி முகவாட்டமடைந்தார். அருகிலிருந்த ஒரு பட்டாள வீரன் அவர் முகக்குறியைக் கவனித்து, அவர் முன் சென்று: 'பிரபுவே பட்டாளம் முழுவதும் ஓர் அடி முன்வந்திருக்கிறது! நமக்கு இனிமேல் ஐயமில்லை!' என்ருன்.

கிறிஸ்தவ சேவையும் இத்தன்மையுடையது. அக்காலத்தில் வீரிய விசுவாசிகள் சிந்தின இரத்தத்தால்தான், கிறிஸ்தவ சமயம் இன்று உலகில் வலிமையாக நாட்டப்பட்டது என்பதை நாம் அறிவோம்.

உமக்கென்று பாடுபட்டோன்
நஷ்டப்பட மாட்டானே
உமக்கென்று ஜீவன் விட்டோன்
சாகா ஜீவன் பெற்றுனே.

'சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை'
*(2 சாமுவேல் 1:22)*

'பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்ட முண்டு' *(எபேசியர் 6:12)*

'கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக் கொடுக்கத் துணிந்தவர்கள் . . . பர்னபா, பவுல்'
*(அப்போஸ்தலர் 15:25)*

## 15

# வருந்தினல் வராதது ஒன்றுமில்லை!

நான் பர்மாவில் இருந்தபோது கனம் ஜார்ஜ்வெஸ்ட் என்பவர் அத்தியட்சராக இருந்தார். அவர் ஆங்கில நாட்டில் கேம்பிரிட்ஜ் கல்லூரியில் படித்துவந்த வாலிப நாள்முதல், சுருட்டுப்பிடிக்கும் பழக்கத்தைக்கொண்டவர். மிஷனரியாகி அத்தியட்சர் பதவியை ஏற்ற பின்பும் புகைபிடிக்கும் பழக்கம் அவரைத் தொடர்ந்து வந்தது. அப்பழக்கத்தினல் 'அத்தியட்சரே குடிக்கிருரே!' என்று அநேகர் சாதகப்படுத்திக் கொள்ள ஏதுகரமாய் அமைந்தது.

ஆக்ஸ்போர்டு குழுவைச் சார்ந்த பக்தர்கள் இரங்கூன் வந்து மனச்சாட்சியைக் கருத்தாக்கவல்ல கூட்டங்கள் பலவற்றை நடத்தினர்கள். அவர்கள் முயற்சியால் இவர் பக்தியின் மேல் படியில் ஏறினபின், புகை பிடித்தலை விட்டு விட்டார். நான் அவருடன் வேலை செய்த காலங்களில் அவர் புகை பிடித்ததை நான் பார்த்ததே இல்லை. அப்பெரியார் இந்த வெற்றியை ஒரு சாட்சியாகப் பலர் முன் ஒரு கூட்டத்தில் விளக்கினர்.

வருந்தினல் வராதது ஒன்றுமில்லை. வீரிய பக்தியும், சீரிய மனமும்தான் காரணம்.

'கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசிர்வதிப்பார்' *(சங்கீதம் 115:13)*

'உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்'

*(ரோமர் 14:21)*

# 16

# தாலிப் பாக்கியம்!

நெல்லை மாவட்டத்தில் பண்ணைவிளை என்னும் ஒரு புராதன கிறிஸ்தவக் கிராமம் உள்ளது. இதில் காலம் சென்ற பக்தன் தாமஸ் வாக்கரும், கார் மைக்கேல் அம்மையாரும் ஆதியில் பணி ஆற்றி வந்தனர். பல்லாண்டுகளுக்கு முன் ஈசாக்கு ஆபிரகாம் என்னும் ஒரு சிறந்த பக்தர் குருவாக அங்கு பணியாற்றி வந்தார். அவரை அக்காலத்து மக்கள், ஒரு நீதிமானுகவே மதித்து வந்தார்கள்.

அவர் திருப்பணியாற்றின காலத்தில் திருமணத்தை முடித்துக்கொள்ள மணமக்களும், பந்துக்கள் பலரும் அங்கு வந்திருந்தார்கள். மாப்பிள்ளை வீட்டார் தாலியைக் கொண்டுவர மறந்துவிட்டதை அறிந்து திகைத்தனர்; வெட்கினர். வெகு தூரத்திலிருந்து வந்தவர்களாகையால் உடனே போய் எடுத்துக்கொண்டுவர முடியாத நிலை. விவாகத்தைச் சில நாட்களுக்குப் பின்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் குருவை அணுகினர்.

அவர் வியப்பைக் காட்டாது, விவாகத்தை ஒத்திபோட வேண்டாம். கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று அவர்களைத் தேற்றி அனுப்பிவிட்டார். அதன்பின் குருவானவர் சமையல் அறையில் வேலை செய்துகொண்டிருந்த தம் அருமை மனைவியை அணுகி, 'ராகேல், ஒரு காரியம் நடைபெற வேண்டி இருக்கிறது, இத்தருணத்தில் உன்னைத்தவிர உதவி செய்வார் ஒருவரும் இல்லை' எனப் புகழ்ந்தார்.

அம்மையாரோ, 'அது என்ன உதவி? நான் எவ்விதத்தில் அவ்வுதவியைப் புரியக்கூடும்? அதைச் சொல்லுங்கள்' என்ருர். உடனே அவர், அன்று மாலை நடக்கவேண்டிய விவாகத்திற்கு, மாப்பிள்ளை வீட்டார் தாலியைக் கொண்டு வர மறந்துவிட்டதால் விவாகத்தைத் தள்ளிப்போடக் கேட்கிருர்கள். அப்படிச் செய்வது நியாயமாகுமோ? என்ருர்.

உடனே அம்மையார், 'உங்கள் கதையெல்லாம் எனக்கும் தெரியும். என் தாலியைக் கேட்கிறீர்கள்போலும்' என்றார். அதற்குக் குருவானவர், 'ராகேல்! உன் உள் ஒளியினால் அதை அறிந்துகொண்டாய். ஆம், அதைக் கொடு' என்றார். அம்மையாரோ, 'அதைக் கழற்றிக்கொடுக்க எனக்கு உரிமை இல்லை; அதைக் கட்டின நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்' என்று கழுத்தை நீட்டினார். அவர் குனிந்து அந்தத் தாலிச் சரத்தை எடுத்தவுடன், அம்மையார் அத் தாலியை கையில் வாங்கி மவுனமாக ஜெபித்து கண்களில் ஒற்றிக்கொண்டு அதை முத்தமிட்டுக் கணவர் கையில் கொடுத்தார்கள்.

குருவானவர் அதை எடுத்துச் சென்று, மஞ்சள் தடவின புதிய கயிற்றில் இரு தங்கக் குண்டுகளுடன் அதை இணைத்துத் தட்டில் வைத்து மணமகன் கையில் கொடுக்க, திருமணம் சிறப்பாய் நடந்து முடிந்தது. இத் தாலி எங்கிருந்து வந்தது என்பதை ஒருவரும் அறிந்தாரில்லை. ராகேல் அம்மையாரும் தம் கழுத்தில் வெறும் கயிற்றை மாத்திரம் மரணபரியந்தம் அணிந்திருந்தார்கள். இந்த இரு நீதிமான்களுடைய கல்லறை பண்ணைவிளை கோயிலுக்குப் பக்கத்தில் இருப்பது கண்கூடு.

**'நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே'**

*(நீதிமொழிகள் 3:27)*

**'நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக'**

*(கலாத்தியர் 6:9)*

# 17

# உங்கள் சபையைச் சேர்ந்த விக்டோரியா

பல்லாண்டுகளுக்குமுன், லண்டன் அரண்மனையிலுள்ள ஜெப ஆலயத்தில், கந்தர்புரி அத்தியட்சர் விக்டோரியா மகாராணிக்கு இராப்போஜனம் கொடுத்துவிட்டு வெளியில் வந்தவுடன் மிகப் பணிவுடன் அரசியுடன் பேசினுர். அரசியே, தாங்கள் அரசர் குடும்பத்தைச் சேராத ஒரு வாலிபனை மணக்கப்போவதாக ஒரு வதந்தி உலவுகிறதே, அது உண்மையா? என்ருர். அது சரிதான் என் ராணி ஒப்புக் கொண்டாள்.

அத்தியட்சர் மிகத் தாழ்மையாக மாபெரும் அம்மணியே! நீங்களோ உலகத்தை ஆளுகிறீர்கள். நான் உட்பட உலகத்திலுள்ளோர் பலர் தங்கள் சொல்லை மதித்துத் தங்களுக்குக் கீழ்ப்படிந்து வருகிருேம். தாங்கள் ஒரு சாதாரணமானவரை மணக்கப்போகிறீர்களே! தாங்கள் அவருக்குக் கீழ்ப்படிவது மதியாகுமோ? விவாக ஆராதனையை நான்தான் நடத்துவேன். அந்த ஆராதனையிலுள்ள 'கீழ்ப் படிகிறேன்' என்னும் வார்த்தையை விட்டுவிட்டு ஆராதனையை நடத்தலாமா என்ருர்.

அதற்கு மகாராணி 'கனம் பொருந்திய அத்தியட்ச பிரபுவே! இங்கிலாந்தை ஆளும் மகாராணி அவரை மணக்கப் போவதில்லை. உங்கள் சபையைச் சேர்ந்த விக்டோரியா என்ற ஒரு பெண் அவரை மணக்கப்போகிருள். எனவே கீழ்ப்படிகிறேன் என்னும் வார்த்தையை விட்டுவிடாமல் ஆராதனையை நடத்துங்கள்' என்ருள்.

கீழ்ப்படிதல் அடிமைத்தனத்தின் குறியன்று. ஒற்றுமையின் நெறி. ஒரு குடும்பம் நன்கு நடைபெற வேண்டுமாயின் மனைவி கணவருக்கும், கணவன் மனைவிக்கும் கீழ்ப்படியவேண்டும். ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்தால் மாத்திரம் ஜோடிக்

காளைகளையொக்க இல்லறம் என்னும் வண்டியை இழுத்துச் செல்லக்கூடும். இல்லறத்திற்கு வேண்டியது பரஸ்பர மதிப்பு, அன்பு, ஒற்றுமை முதலியன. கணவன் மனைவிக்குத் தெரியாமலும், மனைவி கணவனுக்குத் தெரியாமலும் பணத்தைச் செலவழிப்பது பரஸ்பர நட்பை ஊனப்படுத்தும். இல்லறம் என்பது இப்பூமியில் தேவனுடைய இராஜ்யத்தையொக்கும். அன்பு இன்பத்தைப் பெருக்கும். இல்லறம் நல்லறமாகத் தழைக்கும்.

**'நீங்கள் மனம் பொருந்திச் செவி கொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்'** *(ஏசாயா 1:19)*

**'மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்'** *(கொலோசேயர் 3:18)*

# 18

# மாமியாரின் சாமியாட்டம்

**ப**ல வருடங்களுக்கு முன், நான் மெய்ஞ்ஞானபுர ஆலயத்தில் பிரசங்கித்தேன். ஆலய ஆராதனை முடிந்தபின், அதே ஊரில் ஏழு வெவ்வேறு இடங்களில் பேசும்படி அழைக்கப்பட்டேன். ஏழு கூட்டங்களில் பேசினபடியால் சிறிது அலுப்புத் தட்டியது. இரவு 9 மணிக்குப் பிறகு கோவில் வாசலின் வடபுறமுள்ள ஒரு கிணற்றின் பக்கத்தில் காற்று வாங்கிக்கொண்டிருந்தேன். அங்கும் மட மடவென்று சுமார் 60 பேர்கள் கூடிவிட்டனர். அவர்களுக்கு இரவு பதினொரு மணி வரைக்கும் அப்பனைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

வந்திருந்தவர்களில் சிலர் ஒரு குடும்பத்தில் மாமியாருக்கும் மருமகளுக்கும் ஏற்பட்ட சண்டையைப்பற்றிக் கூறிச் சமாதானம் செய்து வைக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். சென்றேன். புருஷன் சாப்பிட்ட இலையில் மனைவி சாப்பிடவேண்டும் என்று பிடிவாதம் செய்தார் மாமியார். மாமியார் கொஞ்சம் கர்நாடகம். மருமகள் படித்தவள். எல்லார் முன்னிலையிலும் எச்சில் இலையில் சாப்பிடத் தயங்கினாள். இதுதான் மாமியாருக்கும் மருமகளுக்கும் ஏற்பட்ட சண்டைக்குக் காரணம். நான் சென்ற பிறகும், மாமியார் பிடிவாதமாகவே இருந்தார்கள். தம் முன்னிலையில் தம் மருமகள் முழங்காற்படியிட்டு மன்னிப்புக் கேட்க வேண்டுமெனவும் சாதித்தார்கள். மருமகள் பண்புள்ளவள். முழங்காற்படியிட்டாள். மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். அந்தக் காட்சி இன்றும் என் மனத்தைவிட்டு அகலவில்லை. இளம் பிஞ்சு உள்ளம் படைத்த மருமகளிடம் காணப்பட்ட

பொறுமை, சாந்தம், அடக்கம் முதலிய நற்பண்புகளை முதிர் வயதையடைந்த பழுத்த பழமாகிய மாமியாரிடம் நாம் காண்கின்றோமில்லையே. இறைவனருளால் அங்கு சமாதானம் ஏற்பட்டது.

'மனத்தாழ்மையாயிருப்பது நலம்' *(நீதிமொழிகள் 16:19)*

'தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார்'
*(1 பேதுரு 5:5)*

# 19

# மகிமைக்கு முன் தாழ்மை

நெல்லை நாட்டில் நான் ஒரு பெரிய கிராமத்தில் எழுப்புதல் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்த தருணம் ஓர் உபதேசியார் மகள் என்னிடம் வந்து மாலை மாலையாக அழுது பின்வருமாறு சொன்னாள்: 'ஐயா, என் கணவர் ஓர் உபாத்தியாயர். இந்த பைபிளை கிழித்திருக்கிறதைப் பாருங்கள். அவருடைய முரட்டுத்தனத்தைக் குறைக்க என்னால் கூடவில்லை. நான் ஓர் உபதேசியார் மகள்; என் கதியைப் பாருங்கள்' என்று அழுதாள். கூட நின்ற அவளுடைய தகப்பனார் ஒரு கடிதத்தை எனக்குக் காண்பித்தார். அக்கடிதத்தில் அப்பெண்ணின் கணவன் அந்த ஊருக்கு ஓர் இரவில் வந்து அவர் வீட்டிற்கு நெருப்பு வைத்துவிட்டுப் போவதாக எழுதியிருந்தான். வைக்கோலினால் போடப்பட்ட கூரையில் நெருப்புப் பற்றினால் அணைக்கமுடியாது. அந்தக் கிராமத்தில் நெருப்பை அணைக்கப் போதுமான தண்ணீரும் இல்லை. எனவே உபதேசியார் போலீஸ்காரர்களுக்குச் சொல்லி இந்த அட்டகாசத்தை நிறுத்தப் போவதாகச் சொன்னார்.

நான் சற்று நேரம் மௌன தியானத்திலிருந்து என் வெளிப்படுத்துதலை அவர்களுக்குச் சொன்னேன். உபதேசியாரே, உங்கள் மருமகனை அவமானப்படுத்த போலீஸ்காரரிடம் சொல்ல வேண்டாம். அது உமக்கும் அவருக்கும் கேவலமாக இருக்கும் என்று சொல்லி, அப்பெண்ணைப் பார்த்து 'மகளே, உன் கணவர் நாளை இரவு இங்கே வரப்போகிறார். வீட்டைக் கொளுத்தமாட்டார். நீ அவரைக் கண்டவுடன் அவர் இரண்டு மைல் நடந்து இரவு ஒன்பது மணிக்கு வந்திருப்பதால் அவர் ஸ்நானம் செய்ய வெந்நீர் போட்டுக் கொடுத்து நல்ல உணவும் அளித்து அவரை மரியாதையாக நடத்துங்கள். கடிதம் வந்ததையும், அதன் காரணத்தால் உங்கள் மனம் துடித்துக்கொண்டிருப்பதையும் காட்டவே

வேண்டாம்' என்று சொல்லி ஜெபம் செய்துவிட்டு நான் வேறு ஊருக்குப் போய்விட்டேன்.

நான் சொன்னபடியே மறுநாள் இரவு ஒன்பது மணிக்கு அவர் வந்தாராம். ஒருவராவது கோபக் குறியைக் காட்டாமல் அவரை மரியாதையாக நடத்தினார்களாம். இவ்விதமாக இரண்டு மூன்று முறை அவர் உபதேசியார் வீட்டிற்கு வந்து கடைசியில் தம் மனைவியை அழைத்துக்கொண்டு போய்விட்டார் என்றும் கேள்விப்பட்டேன். லேகியோன் மனம் மாறி தன் மனைவியுடன் சேர்ந்துகொண்டவண்ணம், இவரும் முற்றும் மனம் மாறி தம் மனைவியுடனும், மாமனார் மாமியாருடனும் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டு வந்தேன்.

சில ஆண்டுகளுக்குப் பின் நான் வேறொரு ஊருக்குப் போயிருந்த தருணம் ஓர் அம்மாள் என்னை வீட்டிற்கு அழைத்துத் தன் கணவராகிய அந்த உபதேசியார் இறந்துவிட்டதையும் சொல்லி, தன் மருமகன் மனைவியோடு சந்தோஷமாக வாழ்ந்து வருவதையும் முக மலர்ச்சியுடன் கூறினாள். மேலும் அவளுக்குப் பிறந்த சுமார் ஐந்து வயதுப் பிள்ளையை எனக்குக் காட்டி அவனுக்கு என் பெயரை வைத்திருப்பதாகச் சொல்லி அப்பிள்ளையை ஆசீர்வதிக்கக் கோரினாள். அப்படியே நான் ஜெபித்து அவனை ஆசீர்வதித்தேன். 'பொறுத்தார் நாடாள்வார்; பொங்கினார் காடாள்வார்' என்பது எவ்வளவு உண்மை.

**'சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்'** *(நீதிமொழிகள் 31:30)*

**'மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்'** *(எபேசியர் 5:24)*

# 20

# சந்தோஷம்—ஒற்றுமை—ஏகமனம்

நெல்லை மாவட்டத்தில் கால்டுவெல் அத்தியட்சரின் பாதங்கள் பட்ட புண்ணிய பூமியான இடையன்குடி என்னும் கிராமத்தில் நடந்த சம்பவம் இது.

அங்கே நான் எழுப்புதல் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்த தருணம் அங்குள்ள ஒரு பெரிய குடும்பத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கும் சண்டையை ஒழிக்க ஒரு பக்தர் என்னை அழைத்தார். தூரத்திலுள்ள அந்த வீட்டிற்கு நாங்கள் இருவரும் சென்றோம். அங்கு ஏழு மாதர்களும், இரு ஆடவர்களும் இருந்தனர். நான் சமாதானத்தைப்பற்றி சில நிமிடங்கள் பேசினபின் கர்த்தர் இருதயத்தைப் பழுதுபார்க்கிறவர் அல்லர், புதிய இருதயத்தைக் கொடுப்பவர்; பழையவைகளெல்லாம் ஒழிந்து எல்லாம் புதியதாக வேண்டிய நேரம் இது என்று சொல்லி என் 'பைபிளின்' பேரில் அவர்கள் கைகளை வைக்கச் சொன்னேன். அதன் பேரில் என் கையை வைத்து நான் வழக்கம்போல் செய்கிறவண்ணம் ஜெபத்திற்கு முன் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தேன்.

என்ன ஆச்சரியம்! உடனே அந்த ஏழு மாதர்களும் சத்தம் போட்டு அழுதார்கள். சில வினாடிகளுக்குப்பின் 'ஸ்தோத்திரம் செய்வேனே' என்ற கீர்த்தனையை நான் துவக்கி முதல் சரணம் முடிந்தபின் இரண்டாம் சரணத்தை அவர்களைப் பாடச் சொன்னேன். அவர்கள் அனைவரும் அழுகைக் குரலுடன் அதைப் பாடினார்கள்.

அதன்பின் 'அருமை மக்களே, தற்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்கள் உள்ளங்களில் கிரியை செய்ய ஆரம்பித்து

விட்டார். உங்களுக்கும் இந்த வீட்டிற்கும் கொர்னீலியஸ் வீட்டாரது அனுபவம் வந்துவிட்டது. மோட்சத்தில் தேவ தூதர்களுக்கும் உங்கள் நிமித்தம் சந்தோஷம் வந்துவிட்டது. அவர்களும் தற்பொழுது உங்களைப் பார்த்துக்கொண்டிருக் கிறார்கள். உங்கள் இருதயங்களைத் திறந்து வையுங்கள். சமாதானப் பிரபுவும் ஆவியானவரின் அருளும் உங்கள் உள்ளங்களை எடுத்து நடத்த இடங்கொடுங்கள் என்று சொல்லி நான் நடுவில் உட்கார்ந்து, என் பைபிளை 'ஸ்டூல்' என்னும் நாற்காலியில் வைத்துக்கொண்டு நீங்கள் சுற்றி நின்றுகொண்டு மறுபடியும் உங்கள் கைகளை வையுங்கள் என்று சொன்னேன். ஆவியானவர் அங்கே நிழலாடினார். பாவமன்னிப்பின் ஜெபத்தையும் பிரதிஷ்டை ஜெபத்தையும் சுருக்கமாகச் சொல்லி ஆசீர்வாதத்துடன் அதை முடித்தேன். அதன்பின் அந்த அம்மாமார்களை ஒருவரை ஒருவர் கைகொடுத்து சிநேகமாகிக்கொள்ளக் கேட்டேன். உடனே அவர்கள் ஒருவரையொருவர் அக்கா, அண்ணி, மாமி என்று சொல்லிக்கொண்டே கட்டி அணைத்து முத்தமிட்டுக்கொண் டார்கள். பிறகு ஐந்து நிமிடம்போல் நான் காத்திருந்த சமயத்தில் அவர்கள் முகங்களைக் கழுவிக்கொண்டு வந்தார் கள். உங்களுக்குள் சமாதானம் வந்துவிட்டது. அதை ஜாக்கிரதையாகக் காத்துக்கொள்ளுங்கள். தற்பொழுது நீங்கள் அனைவரும் ஆண்டவர் கையில் இருக்கிறீர்கள் என்று சொல்லி மிக மதுரமாகப் பேசிவிட்டுத் திரும்புங்கால் அவர்கள் அனைவரும் வெகுதூரம் என் பின்னால் வந்து விடை பெற்று ஏகிவிட்டனர்.

சில மாதங்களுக்குப்பின் நான் பாளையங்கோட்டையில் காலஞ் சென்ற மறைத்திரு. சத்தியசாமுவேல் அவர்கள் வீட்டில் தங்கியிருந்த தருணம் ஒரு நண்பர் என்னை அவசரமாக ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கே பல் வலியினால் ஓர் அம்மையார் படுத்திருந்தார்கள். அவர்கள் என் வரவைப் பாராட்டி 'ஐயா, இடையன்குடியில் ஒரு வீட்டிற்கு வந்து சமாதானம் செய்தீர்களே, அங்கிருந்த அம்மாமார்களில் நான் ஒருத்தி. அந்த நாள் முதல் அந்தக் குடும்பங்களில் சந்தோஷமும் ஒற்றுமையும் ஏகமனமும் நிலவி இருக்கிறது.

கர்த்தருக்குத் துதி, இதை நீங்கள் அறிய ஆசைப்படுவீர்களென்று உங்களுக்குச் சொன்னேன்' என்றார்கள். துதியுடனும் சந்தோஷத்துடனும் நான் ஜெபம்பண்ணிவிட்டு வந்தேன்.

வெண்கலக் கதவுகளை உடைத்து இரும்புத் தாழ்ப்பாள்களை முறிக்கிறவர் இறைவனல்லவா?

'நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மானத்தைக் காப்பாள்'
(நீதிமொழிகள் 11:16)

'தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது'
(2 கொரிந்தியர் 7:10)

# 21

# குண மாற்றம்!

நெல்லை நாட்டின் கீழச் செவல், மேலச் செவல் என்னும் கிராமங்களில் அருள்திரு. டேர் என்னும் பெரியார் குருத் தொண்டு புரிந்துவந்த தருணத்தில் நடந்த வல்லமையான எழுப்புதல் கூட்டத்துக்குப்பின் பிரதிக்கினைத் தாள் பலருக்குக் கொடுக்கப்பட்டது.

நான் வெளியில் வந்தவுடன் பிரதிக்கினைத் தாள் ஒன்றை ஒருவருக்குக் கொடுத்தேன். அவர் அதை வாங்க மறுத்து விட்டார். நான் அவரிடம் பேச ஆரம்பித்தேன். குரு என்னை அவரிடம் பேசவிடாமல் தடுத்து, துரிதமாக வீட்டிற்கு அழைத்துச் சென்றார். சாப்பாட்டு மேஜையில் அவர் சொன்ன வார்த்தை இதுவே: 'ஐயா, அவர் மிலிட்டரியில் இருந்து வந்து, குடியில் பழகி மனைவியை ஓயாமல் அடிக்கிறார். தாயார் முகத்தில் துப்புகிறார். நான் ஒருநாள் இயேசுவின் இரத்தத்தைப்பற்றி பிரசங்கித்தேன். அப்போது அவர் கைக்குட்டையில் வெற்றிலை எச்சிலைத் துப்பி ஆராதனை மத்தியில் எழுந்து நின்று அக்குட்டையைக் காட்டி, 'இதுதான் இயேசுவின் இரத்தம்' என்று சொன்னார். அப்பேர்ப்பட்டவனுக்கு இந்தப் பிரசங்கங்களும் பிரதிக்கினைத் தாளும் கிரியை செய்யுமா?' என்று குரு சொன்னார்.

உடனே நாங்கள் அனைவரும் அங்கேயே முழங்கால் ஊன்றி அவனைச் சீர்ப்படுத்த இறைவனிடம் கெஞ்சி நின்றோம்.

ஓர் ஆண்டுக்குப் பின், நான் இடையன்குளத்தில் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த தருணத்தில் 'யாராவது சாட்சி சொல்லக்கூடுமா?' என்றேன். ஒருவர் எழுந்து நின்றார். அவரை நான் அறியாததால் உடனே குருவைப் பார்த்து அவரைப் பேசவிடலாமா என்று அவர் சம்மதத்தைப் பெற்ற பின் அவரை மேடைக்கு அழைத்தேன்.

அருமை நண்பரே, நான் அழைத்தது போதும்! அவர் வந்து நின்று கதறி அழுதார். மேலச் செவலில் நான் கண்ட

நண்பரேதாம் அவர். தாம் மனைவியை அடித்ததையும், தாயாரோடு சண்டை போட்டதையும், எச்சில் குட்டையைக் காட்டினதையும் சொல்லி அழுது, தாம் மனம் திரும்பினதை யும், தற்போது தமக்கு பென்ஷன் வருவதால் ஊர் ஊராகச் சென்று ஆண்டவருக்கு சாட்சி கொடுத்து வருவதையும் விளக்கினர். பரிசுத்த ஆவியானவரின் கிரியை இதுதான் அன்றோ!

'உமது சாட்சிகள் மிகவும் உண்மையுள்ளவை'

*(சங்கீதம் 93:5)*

'சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்'

*(யோவான் 18:37)*

## 22

# பண்டிகை கொண்டாடியது யார்?

இரங்கூனில் இரத்தினக்கண் என்றொரு பெண் இருந்தாள். அவளுடைய கணவர் பலரால் 'சித்தப்பா' என்று அழைக்கப்பட்டார். அச்சு ஆபீசில் சிறிய வேலை செய்து கஷ்ட ஜீவனஞ் செய்து வந்தார். அவர் கிறிஸ்மஸ் பண்டிகைக்கென்று தம் மனைவிக்குப் பதினறு ரூபாய்க்கு ஒரு புடவை வாங்கிக் கொடுத்திருந்தார். அவள் அதை நன்றி யுடனும் மகிழ்ச்சியுடனும் பெற்று பண்டிகையன்று உடுத்திக் கொள்வதற்கென்று பெட்டியில் வைத்திருந்தாள்.

பக்கத்துக் குடிசையிலிருந்த ராஜம் என்னும் ஏழைப் பெண், தன் கணவர் தனக்குப் பண்டிகைக்குப் புடவை வாங்காமலிருப்பதை அறிந்து வருந்தினள். கடனுக்குப் புடவை வாங்குவது மதியன்று. இன்னும் இரண்டு மாதம் பொறுத்திருந்தால் நல்ல புடவை வாங்கித் தருவதாகக் கணவர் வாக்குப்பண்ணினர். நல்ல நாளிலும், பெரிய நாளிலும்கூட எனக்கு ஒரு புதுப் புடவை கிடையாதா? என்று புலம்ப ஆரம்பித்துவிட்டாள் ராஜம்.

இந்தப் பரிதாப நிலையை அறிந்த இரத்தினக்கண், தன் கணவன் தனக்கு வாங்கிக்கொடுத்திருந்த புடவையை எடுத்துக் கொண்டுபோய் ராஜத்தினிடம் சென்று, 'அக்கா, இந்தப் புடவையைப் பண்டிகைக்குக் கட்டிக்கொள்ளுங்கள்' என்று கூறிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டாள். ராஜம் மகிழ்ச்சியுடன் அப்புடவையைக் கட்டிக்கொண்டு பண்டி கைக்குச் சென்றாள். இரத்தினக்கண் பழைய புடவையைக் கட்டிக்கொண்டு மகிழ்ச்சியுடன் பண்டிகை ஆராதனைக்குப் போனாள்.

இவ்விருவரில் கிறிஸ்மஸ் பண்டிகையை மிகக் களிப்புடன் கொண்டாடியது யார்?

'நன்மை செய்யப் படியுங்கள்' (ஏசாயா 1:17)

'பிள்ளையைத் (இயேசு) துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்' (லூக்கா 2:12)

# 23

# ஈசனுக்கு வேண்டாம் இந்த ஈகை

**நா**ன் ரங்கூனில் இருந்த காலத்தில் என். எம். எஸ். (National Missionary Society) சங்கத்திற்குக் காரியதரிசியாகப் பணிபுரிந்த தருணத்தில், அங்கிருந்த ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த மாது ரூ. 200 விலையுள்ள ஒரு ஜோடி தங்கக் காப்பை என். எம். எஸ். சங்கத்திற்கு வைத்துக் கொள்ள என்னிடம் கொடுத்தார்கள்.

அம்மாதுக்கும் அவர்கள் கணவருக்கும் சமாதானம் இல்லையென்பதை நான் நன்கு அறிந்தவன். எனவே 'அம்மா, இக்காணிக்கையைக் கொடுக்க உங்கள் கணவருடைய அனுமதியைப் பெற்றிருக்கிறீர்களா?' என்று வினவினேன். அதற்கு அம்மாது 'இக்காப்பு என் அப்பா எனக்குக் கொடுத்தது. என் கணவருக்கும் அதற்கும் சம்மந்தமில்லை. என் இஷ்டப்படி நான் அதை உபயோகப்படுத்தலாம்' என்றார்கள்.

அதற்கு நான், 'விவாகம் ஆன பிறகு ஒரே மாம்சமும் ஒரே இரத்தமுமாக மாறியுள்ளபடியால் உங்கள் வசம் உள்ள நகை, பணத்திற்கெல்லாம் உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் சம உரிமை உளது. எனவே நீங்கள் இக்காணிக்கையை ஈசனுக்குக் கொடுப்பது பொருந்தாது' என்று சொன்னேன். அதற்கு அவர்கள் 'என் கணவரைக் கேட்கவேண்டிய அவசியம் இல்லை' என்று அழுத்தமாகச் சொன்னார்கள். அதற்கு 'அம்மணி, இந்த நகையை நான் ஏற்றுக்கொண்டு உங்களுக்கு மூன்று நாட்கள் தவணை கொடுக்கிறேன். நீங்கள் அதற்குள்ளாக ஜெபித்து ஒரு தீர்மானத்திற்கு வந்த பின் சொல்லுங்கள்' என்றேன்.

அந்த நகையை நான் காரியாலய கஜானாவில் வைத்து விட்டேன். மூன்றும் நாள் காலையில் அவர்கள் வருவதைக் கண்டு அந்த நகையை என் கையில் வைத்துக்கொண்டேன்.

தாம் வெகுநேரம் யோசித்ததாகவும், பலபேரிடம் யோசனை கேட்டதாகவும், அதன் பயனாக தம் கணவருடன் இவ் விஷயத்தைக் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை எனச் சொன்னார்கள்.

அதற்கு நான் ஏகமனத்துடன் வராத காணிக்கைகளும், சண்டை சச்சரவு பகைகளுக்கிடையில் வரும் பணங்களும், வேண்டா வெறுப்புடனும் அலட்சியமாகக் கொடுக்கிற தொகைகளும், கட்டாயப்படுத்தி வாங்குகிற பணங்களும், தேவ ஊழியத்திற்கு ஆசீர்வாதமாய் இருப்பதில்லை என ஸ்பர்ஜன் பெரியார் சொல்லியிருக்கிறார். அதன்படியே உங்கள் நகை ஈசனுக்குத் தேவையில்லை என்று அந்த ஜோடிக் காப்புகளை திருப்பிக் கொடுத்துவிட்டேன்.

அதை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள்.

இந்த சம்பவத்தை என். எம். எஸ். தலைவருக்குத் தெரியப் படுத்தினேன். அந்தக் காணிக்கையை நான் திருப்பிக் கொடுத்தது 'நலம்' என்று சொன்னதுடன் அதைப்பற்றி கமிட்டியிலும் சொன்னார்.

**'வீண் காணிக்கைகளைக் கொண்டுவர வேண்டாம்'**

*(ஏசாயா 1:13)*

**'இரத்தக் கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாது'** *(மத்தேயு 27:6)*

# 24

# இதை யார் உமக்குச் சொன்னது?

**ப**ல்லாண்டுகளுக்குமுன் அரக்கோணத்திற்கு அருகில் உள்ள ஒரு தோப்பில் உபதேசிமார்களுக்கென இரண்டு நாட்கள் ஒடுக்கக் கூட்டம் வைத்திருந்தார்கள். உணவும், உறக்கமும், அத்தோப்பிலேதான். அதை நடத்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வேத பாடம், பாட்டு, சாட்சி முதலியவைகளால் பரவசப்பட்டோம். அங்கு வந்திருந்த உபதேசியார் ஒருவரையாவது நான் முன் அறிந்தவன் அல்லன். கடைசி இரவுக் கூட்டத்தில் என்னையறியாமலே பின்வருமாறு சொல்லிவிட்டேன்: 'உபதேசிமார்கள் தேவ ஊழியர்கள். ஆனபடியால், வீட்டிலும் வெளியிலும் சகலருடன் சமாதானமாக இருக்கவேண்டும். ஒருக்கால் இங்குள்ள உபதேசியாரில் ஒருவர் தம் மனைவியை திட்டிவிட்டு அவள் முகத்தில் விழிக்காமல், இரண்டு நாட்கள் ஒடுக்கக் கூட்டத்திற்கு வந்துவிட்டு நிம்மதியாக இருக்கப்போகிறேன் என்று சொல்லிவிட்டுக் கோபத்துடன் வந்திருக்கலாம்' என்று சொன்னேன்.

மறுநாள் காலையில் ஓர் உபதேசியார் என்னிடம் வந்து, 'ஐயா, யாராவது, ஏதாவது சொன்னால் கேட்கிற வழக்கம் உமக்கு உண்டா' என்று கோபமாகக் கேட்டார். 'அந்த ஒரு வழக்கம்தான் என்னிடம் இல்லை. ஆண்டவர் தனித்தியானத்தில் எனக்குக் கொடுக்கும் விஷயத்தைத்தான் நான் விளக்கிக் காட்டுவேன். மற்றவர்கள் பேச்சைக் கேட்டு என் தூதை, நான் மாற்றிக்கொள்வதே இல்லை' என்றேன். சற்று நேரங் கழித்து அழ ஆரம்பித்தார். அவரை என் நெஞ்சில் அணைத்துத் தட்டிக்கொண்டே இருந்தேன். உடனே அவர், 'ஐயா நீங்கள் சொன்னபடியெல்லாம் என் மனைவியைத் திட்டிவிட்டு இக்கூட்டத்திற்கு வந்தவன் நான்தான். இதை யார் உமக்குச் சொன்னது?' என்றார். நான் பிரமிப்படைந்து 'எனக்கு ஒருவரும் சொல்லவில்லை, எனக்குக் கொடுத்திருந்த நடத்துதலின்படியே பேசினேன்' என்றேன்.

அவர் உடனே முழங்காலில் விழுந்து தம்மையும் தம் மனைவியையும் ஆசீர்வதிக்கக் கேட்டார். அவரை உட்கார வைத்து ஜெபித்து அனுப்பினேன். அவர் எழுந்தவுடன், 'உபதேசியாரே ஒரு வார்த்தை; நீர் வீட்டுக்குப் போனவுடன் உம் மனைவியிடம் மன்னிப்புக் கேட்டு, அவளுடன் சமாதானமாகவேண்டும்' என்றேன். அவர் 'ஐயா, நீங்கள் இப்படிச் சொல்லுவீர்கள் என்று நான் எதிர் பார்த்தேன். நான் அப்படியே செய்கிறேன். எனக்காக ஜெபம்பண்ணுங்கள்' என்றார்.

'சமாதானம்பண்ணுகிற ஆலோசனைக்காரருக்கு உள்ளது சந்தோஷம்' *(நீதிமொழிகள் 12:20)*

'தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்' *(எபேசியர் 5:28)*

# 25

# முகூர்த்தக்கால் நடுதல்

கிறிஸ்தவர்கள் விவாகப் பந்தல் போடும் முன் முகூர்த்தக் கால் நடுகிறார்கள். நமது மார்க்கத்திற்கும் மனச்சாட்சிக்கும் இது பொருந்துவது எவ்வாறு?

நமது இந்து நண்பர்கள் பச்சை மரத்தின் கிளையைக் கொண்டுவந்து, அதற்கு மஞ்சள் குங்குமமிட்டு மாலை அணிந்து மேளதாளத்துடன் நாட்டுவார்கள். விவாகம் நடக்கும் முன் துளிர் இலைகளுடன் அக்கிளை முகிழ்ந்து நிற்கும். மணமான மூன்றாம் நாள் மணமக்களுக்குக் கங்கணம் கழற்றினபின், இக்கிளையை அவ்வீட்டின் சுத்தமான இடத்திலோ தோட்டத்திலோ நடுவார்கள். அது பெரிய மரமாக வளர்ந்து நிற்கும். இக்கிளை துளிர்த்து செழித்து வளருவது போல் மணமக்களது உள்ளமும் இல்லமும் செழித்து வளர வேண்டும் என்பதே அவர்கள் ஆசை ஆகும்.

அந்தோ கிராமக் கிறிஸ்தவர்களோ காய்ந்து உலர்ந்து செத்துப்போன பனஞ்சட்டத்தின் உச்சியில் மாமரத்தின் இலையைக் கட்டி அதை முகூர்த்தக்காலாக நடுகின்றார்கள். இந்தச் செத்த மரத்தை ஆசீர்வதிக்க என்னை அழைக்கிறார்கள். இவ்வாறான பொருளற்ற வீண் சடங்குகள் 250 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் கிறிஸ்தவ சமுதாயத்தில் நடமாடி வருகின்றன. மெய்த் தெய்வத்தின் அறிவும் வணக்க முறையும் அனுபவமும் பல்லாண்டாகப் பெற்றுவரும் கிறிஸ்தவர்களாகிய நாம் இச்சடங்காச்சாரங்களைப் பற்றிக்கொண்டிருப்பது பரிதாபம்தானே.

நாம் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் இருந்தாலும் இறந்தாலும் இரட்சகனும் குல குருவுமாகிய கிறிஸ்து பெருமான் ஒரு

வரையே பற்றி இருப்பது உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடையாளமாகும்.

'குறி சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும் . . . செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்'

*(உபாகமம் 18:10,11)*

'மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாக எனக்கு ஆராதனை செய்கிறார்கள்' *(மத்தேயு 15:9)*

# 26

# நாள் நட்சத்திரம்?

கிறிஸ்தவ வாழ்க்கையில், நாள் நட்சத்திரம் பார்க்கலாமா என்ற கேள்விக்கு இடமேயில்லே. இறைவனுக்கு நம்மை முழுவதும் ஒப்புக்கொடுத்தபின் அவரல்லவா நமது இல்லறத்தின் சுக்கானேப் பிடித்து நடத்தி வருகின்ருர்? கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டவர்கள் முற்றிலும் புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட நவஜீவிகள். இவ்வாருன உன்னத பதவியில் ஏறியிருக்கும் மக்களது உள்ளம் கிறிஸ்துவையல்லாது வேறென்றிலும் சாராது. நாம் வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் அவர் தயவு மட்டும் நம்மிடமிருந்தால் போதாதா? கிறிஸ்துவின் பேரில் நாம் வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாக நாம் கஷ்ட நஷ்டங்களே அடைந்தாலும் அதுவும் நமது பெரும் பாக்கியம் தானே.

அகசியா கீழே விழுந்து வியாதிப்பட்டவுடன் பாகால்சேபூபிடத்தில் குறி கேட்கப் போனவர்களே கர்த்தருடைய தூதனுல் ஏவப்பட்ட எலியா வழிமறித்துத் தடுத்ததையும் வேத வசனம் விளக்கிக் காட்டியுள்ளதே! மேலும் ரோமானிய சபை புராதனச் சம்பிரதாயங்களே ஆசரிப்பதை இயேசு பெருமான் கடிந்துள்ளாரே! 'நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினுலே தேவனுடைய கற்பனேயை ஏன் மீறி நடக்கிறீர்கள்?' (மத். 15:3).

அடியேன் இவ்வாருன முறைகளில் முழுதும் ஊறின இந்துவாயிருந்தவன். கிறிஸ்து பெருமானின் ஜோதி எனதுள்ளத்தில் உதிக்கத் துவங்கின நாளிலேயே இவைகளேயெல்லாம் ஒழித்துவிட்டேன். இராகுகாலம், குளிகைகாலம், சூலம், சகுனம், அமிர்தயோகம், எமகண்டம் முதலிய எதுவும் கடந்த எழுபதாண்டுகளாக என் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டதேயில்லே. அதனுல் ஒரு விதத்திலும் நான் நஷ்டப்பட்டவனுமல்ல. என் ஜீவியம் ஜெப ஜீவியமே. இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்வது கூடிய காரியமா? பரிமாறு

கிறவன் தயவிருந்தால் பந்தியில் எங்கிருந்தாலும் பாயசம் கிடைக்குமல்லவா? அவர் சித்தம் நமது பாக்கியம்.

நாற்பது ஆண்டுகளுக்குமுன் என் விவாகம் ஒரு புதன்கிழமை மாலே சேலத்தில் நடைபெற்றது. இந்துவா யிருந்த என் தாயாரை முன்னுளாகிய செவ்வாய்க்கிழமை தஞ்சாவூரிலிருந்து சேலத்திற்கு அழைத்துச் சென்றேன். மாப்பிள்ளேயாகிய நான் செவ்வாய்க்கிழமையன்று பெண் வீட்டிற்குப்போவது சரியில்லேயென என் தாயார் வழியெல் லாம் சொல்லிக்கொண்டு வந்தார்கள். வண்டியிலிருந்தவர் களும் என் தாயார் பக்கம் சேர்ந்து என்னேக் கண்டித்துப் புத்தி சொன்னுர்கள். என் வியாக்கியானங்கள் அங்கு செல்ல வில்லே. நான் தோற்றுப்போனேன். என் தாயாரை திருப்தி செய்யவேண்டும் என்னும் அவா மேற்கொண்டது. அவர்கள் ரொட்டி, சோடா முதலியவைகளேச் சாப்பிடாத வைதீகமும் ஆச்சாரமுமுடையவர்கள். அவர்களே அன்றிரவு எங்கு அழைத்துச் செல்வது? இரயில் நிலேயத்தில் அவ்விரவெல்லாம் அவர்களேத் தங்க வைப்பதும் எனக்குப் பிடிக்கவில்லே. என் நிலேமை எக்கசக்கமாயிற்று. முடிவில் எனதருமைத் தாயாரை வணக்கமாக மன்னிப்புக் கேட்டபின் மாப்பிள்ளேயாகிய அடியேனும், சம்பந்தியாகிய எனதருமைத் தாயாரும் செவ்வாய்க்கிழமை பெண் வீட்டிலுள்ள விவாகப்பந்தலில் இறங்கினேம். மறுநாள் திருமணம் நடைபெற்றது. இல்லறம் என்னும் படகில் இறைவனும் ஏறியுள்ள காரணத்தால் அவரது கரம் எங்களே அற்புதமாக நடத்தி வருகின்றது. ஜெயத்திற்குமேல் ஜெயந்தான்.

ஒரு கிறிஸ்தவ சகோதரன் பிராமண நண்பர் ஒருவரிடம் தம் விவாகத்திற்கு நல்ல நாள் குறித்துத்தரச் சொன்னுர். அவர் குறித்த இலக்கணப்படியே இம்மியும் தவருது தாலி கட்டவேண்டுமென்று கையில் கடிகாரத்தை வைத்துக் கொண்டு பாதிரியாரைப் பாடாய்ப்படுத்தி குறிகாரன் குறித்த நேரத்தில் திருமாங்கலியத்தை அணிவித்தார். விவாக மான சில தினங்களுக்குள் அவ்விருவரும் மோட்டார் காருடன் குளத்தில் விழுந்து மாண்டார்கள். அந்த அமிர்தயோகமும் இலக்கணமும் நன்மை யாதும் புரிந்ததாகவோ, தீமையைத் தடுத்ததாகவோ காண்கின்ருேமில்லேயே.

நாள் நட்சத்திரம் பார்ப்பது அறிவீனம்;

பூரண விசுவாசத்தின் குறைவுக்கு அடையாளம்.

'Jesus first, the rest next.'

**'நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள் பார்க்கிறவர்களுக்கும் குறி சொல்லுகிறவர்களுக்கும் செவி கொடுக்கிறார்கள். நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவு கொடார்'** *(உபாகமம் 18:14)*

**'உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்'** *(மத்தேயு 15:6)*

# 27

# சாமண்ணுவின் சரக்குகள்

**சா**மண்ணு என்னும் பெரியார் மோட்சத்தைப் பார்க்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வதுண்டு. ஒரு தினம் கனுவில் மோட்ச வாசலுக்குச் சென்று அங்கிருந்த சம்மன சுடன் தம் ஆசையை எடுத்துரைத்தார். அவன், அவரை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் பல கட்டடங்களைக் காட்டி 'இவை இன்னின்னுருக்குக் கட்டி வைத்திருக்கிறேம்' என்றுன்.

அடுத்த தெருவில் இருந்த ஒரு கட்டடத்தைப் பார்த்து 'இதை யாருக்குக் கட்டியிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அவன், பூலோகத்தில் சாமண்ணு என்னும் ஒரு பெரியார் உளர். அவர் தோட்டக்காரனுகிய சோமுவுக்கு அக்கட்ட டத்தைக் கட்டியிருப்பதாகச் சொன்னுன். பல தெருக்கள் கடந்தபின் அங்கிருந்த குடிசையைக் காட்டி 'இதை யாருக் குக் கட்டுகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவன் 'பூலோகத்தில் சாமண்ணு என்னும் ஒரு பெரியார் உளர், அவருக்கு இதைக் கட்டப்பார்க்கிறேம்' என்றுன். அவர் திடுக்கிட்டு, 'ஐயா, சாமண்ணு என்னும் பெரியாருக்கு குடிசையும் அவர் தோட்டக்காரனுக்கு பங்களாவும் கட்டி யிருக்கும் காரணம் யாது?' என்றுர்.

தேவதூதன் அமைதியாக, 'பூலோகத்தில் உள்ளவர்கள் அனுப்பிக்கொண்டிருக்கும் சாமான்களைக் கொண்டுதான் அவரவர்களுக்கு ஏற்ற கட்டடத்தைக் கட்டி வருகிறேம். சோமு என்னும் தோட்டக்காரன் நாணயம், ஒழுங்கு, சன் மார்க்கம், பரிசுத்தம், நீதி, ஜெபம் முதலிய சரக்குகளை அனுப்பிக்கொண்டிருந்தான். அந்தச் சரக்குகளைக்கொண்டு அவனுக்கென பெரிய வீட்டைக் கட்டியுள்ளோம்.'

'சாமண்ணு என்னும் பெரியார் பொய், திருட்டு, கலகம், பகை முதலிய சாமான்களை அனுப்பிக்கொண்டிருந்தார்.

அவை வீடுகட்டச் சற்றும் உதவாதவை என்று தள்ளிவிட்டோம். சாமண்ணு என்பவர் எப்போது நல்ல சரக்குகளை அனுப்புவாரோ' என்ருன்.

உடனே சாமண்ணு 'ஓ' என்று அழுததும் விழித்துக் கொண்டார். பிறகு சோமுவை தம் வசம் சேர்த்துக்கொண்டு நல் நடக்கையாகிய சரக்குகளைக்கொண்டு மோட்சத்தில் தனக்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

நாம் இந்த உலகில் உண்ணவும், உறங்கவும், உடுத்தவும் மட்டும் பிறக்கவில்லை. மேலானவைகளை நாடுங்கள். நமக்கு ஆயத்தப்பட்டு வரும் வீட்டைக் கட்ட நல் நடக்கையான சரக்குகளை அனுப்பிக்கொண்டிருப்போம் வாருங்கள்.

'கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா' *(சங்கீதம் 127:1)*

'என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு . . . ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்' *(யோவான் 14:2)*

'அவர், கடவுளே சிற்பியாயிருந்து கட்டும் அசையாத அடித்தளமுள்ள ஒரு நகரத்தை எதிர்நோக்கி இருந்தார்' *(எபிரேயர் 11:10)*

# 28

# இரமண ரிஷி!

பல்லாண்டுகளுக்கு முன் மார்த்தோமா, சூரியானி கிறிஸ்தவ சபையைச் சார்ந்த அச்சன் தாமஸ் குரு அவர்களும், திரு. துரைசாமி, திரு. இராஜன், நானும் ஆகிய நால்வர் தமிழ்நாட்டின் பல பாகங்களில் சென்று எழுப்புதல் கூட்டங்கள் நடத்திவந்த தருணம் திருவண்ணாமலைக்கு வந்தோம். அங்கு நடத்திய கூட்டங்களுக்குப் பின், 'அங்கு இரமண ரிஷி என்னும் ஒரு பெரியார் உளர், அவரைப் பார்த்தாலும், அவர்முன் வீற்றிருந்தாலும் உடல் சிலிர்ப்பும் வைதீகப் புத்துணர்ச்சியும் உண்டாகு'மென்று கேள்விப்பட்டபடியால் அவரைக் காணப் புறப்பட்டோம்.

வண்டி அடியில் ஒரு சாது யாசகத்திற்காக எங்களை அணுகினர். நாங்கள் நால்வரும் அவருக்குச் சிறு உதவியைச் செய்தோம். அதை வாங்கியபின் அவர்,

'அந்தப் பணக்கார சாதுவைப் பார்க்கப் போகிறீர்களே, உங்கள் அருகில் நிற்கும் ஓர் ஏழை சாதுவிற்கு ஒரு வேளை உணவுகூட கொடுக்கவில்லையே' என்றார். இது என் மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது.

நாங்கள் அந்த ஆசிரமம் சென்று, சிறு மண்டபத்தில் வீற்றிருந்த சுமார் 30 பேர்களுக்கிடையில் அமர்ந்துகொண்டோம். ஏற்ற நேரத்தில் கோமணம் கட்டியவராக ரிஷியவர்கள் வந்தார்கள். உபவாசம், விரதம், யோகம் முதலியவைகளில் ஈடுபட்டு எலும்பும் தோலுமாய் இருப்பார் என நினைத்தேன். அவர் தொடையும் தொப்பையும் பெரிய அளவில் இருந்ததைக் கண்டு வியந்தேன். உட்கார்ந்த உடன் கடலைகள் சிலவற்றை அள்ளி வீசினார். அணிற்பிள்ளைகள் அவற்றைக் கொறித்துக்கொண்டு இருந்தன.

இப்பெரியார் வேதத்திலிருந்தும், கீதையிலிருந்தும் சுலோகங்கள் சிலவற்றை எடுத்து வைதீக முறையில் பகவானைப்பற்றிப் போதிப்பார் எனக் காத்திருந்தேன்,

ஏமாந்தேனே! ஆங்கிலத்தில் வெளிவரும் பத்திரிகையை விரித்துப் பக்கம் பக்கமாகச் சுமார் பதினைந்து நிமிடங்கள் படித்தபின் சிறிதுநேரம் உட்கார்ந்திருந்து எழுந்து போய் விட்டார்.

வழக்கம்போல் நாங்கள் மாலை தியானத்திற்குக் கூடின தருணம் அச்சன் கேட்ட கேள்விக்குப் பதிலாக அங்கிருந்த இருவர் ஒருவிதமான உணர்ச்சியும் வரவில்லை என்றார்கள்.

நானோ 'எனக்கும் ஒருவிதமான உணர்ச்சியும் வரவில்லை, அங்கு உணர்ச்சி வந்ததாகச் சொல்லும் மக்களைவிட நீ பெரிய பக்தனோ? என்று எனது மனச்சாட்சி கேட்டுவிட்டது' என்றேன்.

உடனே அச்சன் அவர்கள் கண்ணீருடன் என் கரத்தைப் பிடித்து,

'எனக்கும் ஒருவிதமான உணர்ச்சியும் வரவில்லை. அதற்குக் காரணம், இயேசு பெருமானது ஜோதி நம் நால்வரது உள்ளத்தையும் நிரப்பி இருப்பதால், இரமண ரிஷிக்கு அங்கு இடம் இல்லை' என்றார்.

இது உண்மை. காந்த விளக்கின்முன் விளக்கெண்ணெய் அகல் விளக்கிற்கு ஒளியுண்டா? நான் சைவ சித்தாந்தியாக வும், தமிழ் மாணவனாகவும், காவிய உரையாசிரியனாகவும் இருந்தவன். அந்த அறிவுத் துறையில் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் முதலியவர்களை நான் மிகவும் பாராட்டுகின்றவன். அவர்களது பாடல்களை இன்றும் நான் பாடிக் களிப்பேன். எனினும், எனது இதயாசனத்தில் இயேசு பெருமானுக்குத் தான் முதலிடம் உண்டு. சுமார் 60 ஆண்டுகளாக இயேசு பெருமானை மட்டும் வழிபட்டு வருகிறேன்.

'உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது.'

'அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே, அவைகள் கள்ளப் போஜனமாமே!' *(நீதிமொழிகள் 23:3)*

'இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக் கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார்' (யோவான் 8:12)

## 29

# ஒரே இரவில் உருவான ஆலயம்!

சென்ற நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவின பக்தர் ஒருவரது ஆர்வத்தை அறிவோம் வாருங்கள்.

ஒரு கிராமத்தின் நடுவில் அவருக்குச் சொந்தமான சில ஏக்கர் மனைக் கட்டுகள் என்னும் பூமி இருந்தன. அதில் அவர் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் கட்ட முயன்றார். அக்கிராம வாசிகள் 'கிறிஸ்தவ ஆலயம் கிராமத்தின் நடுவில் இருக்கக் கூடாது, அதைக் கிராமத்தின் ஒரு மூலையில் கட்டவேண்டும்' என்று தடை செய்தனர். பக்தன் என்ன சொல்லியும் பயன் படாததால் கட்டட வேலைக்கு ஆயத்தம் செய்தார்.

அத்தருணம் தாசில்தார் ஒருவர் அடுத்த கிராமத்தில் ஜமாபந்தி எடுக்க வந்திருக்கிறார் என்று அறிந்த அக்கிராமத் தார், அவரிடம் சென்று முறையிட்டு, அவர் நேரில் வந்து பார்த்துக் கோயில் கட்டுவதைத் தடை செய்யவேண்டும் என்று வருந்திக் கேட்டுவிட்டுத் திரும்பினர்.

சில நாட்களுக்குப்பின் தாசில்தார், தான் புதன்கிழமை காலை எட்டு மணிக்கு வருவதாக அனுப்பின செய்தி செவ்வாய்க்கிழமை மாலை அக்கிராமத்தாருக்கு வந்து சேர்ந் தது. இதைக் கேட்ட கிறிஸ்தவர்கள் பலர் ஒருமனதுடன் கூடி நள்ளிரவில் விளக்கெண்ணெய் விளக்குகளுடன் பனை மரங்கள் சில வெட்டி அவைகளை நாட்டி சுமார் 20 பேர் உட்காரக்கூடிய குடிசையைப் பொழுது விடியும்முன் கட்டி விட்டார்கள். உள்ளே ஒரு மேஜையைப் போட்டு, பனை மட்டையில் செய்த சிலுவை ஒன்றையும் நாட்டி அகல் விளக்கை வைத்துவிட்டார்கள். அக்கோயில் கூரை உச்சியிலும் ஒரு சிலுவையைப் பதித்துவிட்டனர்.

எட்டு மணிக்கு தாசில்தார் வந்தார். கிராமத்தார் அவரை அழைத்து வந்து, 'எஜமானே இந்த அநியாயத்தைப் பாருங்

கள். நேற்று மாலை இது தரிசு நிலமாகக் கிடந்தது! இரவு முழுவதும் நின்று இந்தக் கூரைக் கோயிலைக் கட்டிவிட்டார்கள். தூணையும் பச்சை ஓலைக்கூரையையும் பாருங்கள்' எனக் கோபத்துடன் சொன்னார்கள். தாசில்தார் அக்கூரையை அணுகி, சிலர் அங்கே ஜெபம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, அக்கோயிலைச் சுற்றிவந்து அம்மக்களைப் பொது இடத்துக்கு அழைத்துச் சென்று அவர்கள் சமாதானமாக இருக்கவேண்டும் என்று பல முறை புத்தி சொல்லியும் பலிக்கவில்லை. உடனே சில மாணவர் குதித்து எழுந்து, 'எஜமானே, ஒரு வார்த்தைச் சொல்லும், நாங்கள் அந்தக் கூரையைப் பிரித்து எறிந்துவிடுகின்றோம்' என்றார்கள். உடனே தாசில்தார் 'நகரத்தார்களே, இந்த இடத்தில் கோயில் கட்டவேண்டாம் என்று சொல்ல எனக்கு அதிகாரம் உண்டு. கட்டின கோயிலைப் பிரித்துவிடும்படிச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை. எனவே, அக்கோயில் அங்கு இருக்கட்டும்' என்றார். ஒரு பெரியார் எழுந்து, 'எஜமானே, நீங்கள் செய்த உபகாரம் போதும். நாங்கள் கலெக்டரிடம் மனு எழுதி அதைத் தடுக்கச் சொல்லப்போகிறோம்' என்றார். உடனே தாசில்தார் 'பெரியவரே, அதுதான் சரியான முறை; கலெக்டருக்கும் எழுதுங்கள். அவர் மனுவை எனக்கு அனுப்புவார். நான் நடந்த விஷயங்களை அவருக்குத் தெரிவிப்பேன். அக்கோயிலை எடுத்துவிட உத்தரவு அளிக்க அவராலும் கூடாது' என்று சொல்லிச் சென்றார்.

அத்துடன் அந்த அமளி ஒழிந்தது. அதே இடத்தில் சுமார் 50 பேர் உட்காரக்கூடிய ஓர் அழகிய கற்கோயில் கட்டப்பட்டுவிட்டது.

**'நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?'** *(2 சாமுவேல் 7:5)*

**'உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது'** *(யோவான் 2:17)*

# 30

# அன்பில்லா உணவு!

பல ஆண்டுகளுக்குமுன் சென்னைக்கு அருகாமையில் உள்ள ஒரு பெரிய சபையில் எழுப்புதல் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தேன். அவ்வூரில் இருந்த ஒரு சிறந்த கிறிஸ்தவ டாக்டர் என்னை இரவு உணவிற்கு அழைத்தார். அச்சபையின் குருவோடு கலந்துகொண்டபின் அவ்விருந்திற்கேகினேன்.

நான் அங்கு சென்ற தருணத்திலிருந்தே சுமார் அரைமணி நேரம் அவ்வூர் பாதிரியாரைப்பற்றி கேவலமாகப் பேசவும் ஏசவும் துவங்கினர். நான் எவ்வளவோ சொல்லியும் பயனில்லை. உடனே அவரைப் பார்த்து, 'டாக்டர் அவர்களே! உங்கள் இதயம் உங்கள் குருவுக்கு விரோதமாக இருக்கையில் நீர் எப்படித் தனித் தியானம், வேத வாசிப்பு, குடும்ப ஜெபம் முதலியவைகளை நடத்துகிறீர்களோ எனக்கு விளங்கவில்லை. குருவினுடைய அசௌகரியங்களைச் சற்றும் உணராமல் கல்வி கற்ற நீரே இவ்வாறுகப் பேசக்கூடுமாஞல் கிராமக் கிறிஸ்தவர்களைக் கேட்பானேன். எனக்கு வெட்கமாய் இருக்கிறது. நீர் பிறவியிலேயே கிறிஸ்தவர். நான் ஒரு கன்வர்ட், நீங்கள் எனக்கு முன்மாதிரியாக இல்லையே! இந்த மனப்பான்மை தேவனது பிள்ளைகளுக்குச் சற்றும் ஏற்காது. அன்பையும், ஐக்கியத்தையும், அன்னத்தையும் கொடுக்க நீர் என்னை அழைத்ததாகத் தெரியவில்லை. குருவை திட்டத்தான் என்னை அழைத்தீர்போலும். இவ்வுணவை அருந்த என் மனம் இடங்கொடுக்கவில்லை. தயவுசெய்து மன்னியுங்கள். நான் போகிறேன்' என்றேன்.

அதற்கு அவர், 'நீர் மாமிசம் சாப்பிடாதவர் என்று கேள்விப்பட்டு, பலவகையான அரிய உணவுவகைகளை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறேனே' என்றார். அதற்கு நான் 'டாக்டர் அவர்களே! நான் என் நாக்கின் ருசியைவிட உங்கள் வாக்கின் ருசியைப் பாராட்டுகிறவன். இனிய ருசி

பெரிதல்ல. அன்பும் ஐக்கியமும்தான் பெரியவை' என்று தாழ்மையாக உத்தரவு சொல்லி வந்துவிட்டேன்.

நடந்த காரியம் ஒன்றையும் நான் குருவிற்கு சொல்லவில்லை. 'அங்கு சாப்பிட மனமற்றவனாக திரும்பிவிட்டேன்' என்றுமட்டும் சொன்னேன். பின்னால் டாக்டர் குருவிற்கு எழுதியிருந்த கடிதம் ஒன்று கிட்டியது. அதில் அதே டாக்டர் குருவை விருந்திற்கு அழைத்திருந்தார். அக்கடிதத்தை அவர் எனக்குக் காட்டி என் அபிப்பிராயத்தை அவர் அறிய விரும்பினார். அதற்கு நான் 'குருத்துவரே, ஒன்றும் அறியாதவர் போல விருந்திற்குப் போவது நலம். நான் விருந்திற்கு அழைத்தும் குரு வரவில்லை என்று அவர் குறை கூறக்கூடும். மௌனத்தை சாதித்தவராக உணவை அருந்திவிட்டு வாருங்கள்' என்று அனுப்பினேன். இரவு 9 மணிபோல் திரும்பி வந்தார். என்ன ஆச்சரியம்! டாக்டரிடம் ஒரு மாறுதலைக் கண்டதையும், முழு நேரமும் அன்புடன் பேசிவிட்டு தன்னை மரியாதையாக அனுப்பினதையும் சொல்லி ஆச்சரியப்பட்டார். பிறகு குருவினிடம் இருந்து எனக்கு வந்த கடிதத்தில் டாக்டரது முழு மனமாற்றத்தையும் தன்னுடன் நட்புக்கொண்டிருந்த விதத்தையும் பாராட்டி குரு எனக்கு எழுதியிருந்தார். மெதுவான வார்த்தை கோபத்தைத் தணிக்குமாம்.

'பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்' (நீதிமொழிகள் 10:12)

**'நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?'**
(மத்தேயு 7:3)

# 31

# காலம் போம், வார்த்தை நிற்கும்!

இராம சாஸ்திரி என்னும் ஓர் அறிஞர் அகதிகள், அதிதிகள், ஏழை மக்களுக்கு உதவிபுரிவதே சேவை மார்க்கம் என்று நம்பிப் பணியாற்றி வந்த தருணம், அந்த ஊரிலுள்ள ஐரோப்பியப் பாதிரியார் ஒருவருடன் மார்க்க சம்பந்தமாகக் கலந்துகொள்ள விரும்பி ஒருநாள் மதியம் அந்தத் துரையின் வீட்டிற்குச் சென்ருர்.

துரை அவரைப் பார்த்து, தம்மைப் பார்ப்பதற்கு தனிப் பட்ட நேரம் உளது. அச்சமயம் தம்மைப் பார்க்கலாம் என்ருர். அதற்கு சாஸ்திரியார், தாம் 'யாசகன் அல்ல' னென்றும் துரையின் அறிவையும் அனுபவத்தையும் கேட்டு அவற்றைப் பின்பற்றவேண்டுமென்ற ஆவலுடன் வந்திருப்ப தாகவும் பணிவுடன் சொன்னுர். அதற்கு துரை வெகுண்டு பட்லரைக் கூப்பிட்டு, சாஸ்திரியாரை வெளியே அனுப்பிக் கதவைத் தாழ்ப்பாளிடச் சொன்னுர்.

பட்லர் வருமுன் சாஸ்திரியார் துரிதமாகப் போய் விட்டார்.

மூன்று மாதங்களுக்குப்பின் அடுத்த ஊரில் இருந்த கோவிந்த பிள்ளை என்னும் ஒரு பெரியார் வைத்திருந்த தோட்டத் தேநீர் விருந்திற்கு வந்திருந்த பலருக்கு அந்தத் துரையை அறிமுகப்படுத்திக்கொண்டுவந்த தருணம், சாஸ்திரியாரும் அங்கிருந்தனர். கோவிந்தபிள்ளை தன்னை அணுகுவதை அறிந்த இராம சாஸ்திரியார், அத்துரை அவர்களைத் தாம் மூன்று மாதங்களாக அறிந்துள்ளதாகவும், அவர் செய்ததை அடிக்கடி நினைத்து வருந்துவதாகவும் சொன்னுர். இராம சாஸ்திரி துரையை சந்தித்தது எங்கே, எப்படி என்று கோவிந்த பிள்ளை கேட்டவுடன், தாம் அத்துரையைப் பார்க்க மூன்று மாதங்களுக்குமுன் அவர் வீட்டிற்கு ஒருநாள் மதியம் போனதாகவும், துரை அவரை வெளியே பிடித்துத் தள்ளி

கதவைச் சாத்த பட்லருக்கு உத்தரவு கொடுத்ததாகவும் சொன்னுர்.

துரையின் முகம் வெட்கத்தால் சுருண்டது. காலம் கடந்து போகும், வார்த்தை நிற்கும்.

'மனுஷனுக்குத் தன் வாய்மொழியினுல் மகிழ்ச்சியுண்டாகும்'
*(நீதிமொழிகள் 15:23)*

'உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னே தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினுல் அவனுடைய தேவ பக்தி வீணுயிருக்கும்'
*(யாக்கோபு 1:26)*

## 32

# இறைவனை அறிவதே நித்திய ஜீவனும்

தற்பொழுது சென்னையில் இராயப்பேட்டையில் உள்ள புராதன வெஸ்லியன் சபையில் பணியாற்றிவரும் மறைத்திரு. ஜான் ரோசையா என்னும் குருத்துவர், சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் மூணார் என்னும் தேயிலைத் தோட்டத்தில் குருவாக இருந்த காலத்தில், அவருடைய அழைப்பின்பேரில் அங்குச் சென்று எழுப்புதல் கூட்டம் நடத்திவந்தேன். அத்தருணத்தில் நாங்கள் இருவரும் தேயிலைத் தோட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்தபொழுது தேயிலை மரத்தை எனக்குக் காட்ட அவரைக் கேட்டேன்.

அவர் புன்னகையுடன், 'தேயிலை ஆலமரம் அரச மரங்களில் உருவாகும் இலைபோல் இருக்காது. உங்கள் காலடியில் இருக்கும் செடிகளின் இளம் துளிர்தான் தேயிலை' என்று சொல்லி, அந்தத் துளிரைக் கிள்ளி எனக்குக் கொடுத்தது மல்லாமல், இயந்திரசாலைக்கு அழைத்துக்கொண்டுபோய் அந்தத் துளிர்கள் தேயிலையாக மாறினதைக் காட்டினார்.

நான் தேயிலைத் தோட்டத்தில் இருந்துகொண்டு, தேயிலைச் செடியின் அருகில் நிற்கிறேன் என்பதை அறியாமல் இருந்ததை உணர்ந்து வருந்தினேன்.

அவ்வாறே பரிசுத்த கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து இறைவனின் மகன், இறைவனின் மகள் என்னும் புத்திர பாக்கியத்தை உணராமல் இருக்கும் கிறிஸ்தவப் பிள்ளைகளது அறியாமையை இக்கட்டத்தில் உணருவோம்.

* * *

பல்லாண்டுகளுக்குமுன் சிவகாசி என்னும் ஊரில் நான் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்த தருணத்தில், அந்த ஊர் தபால் ஆபீசுக்குப் போகவேண்டி ஒரு வீதியின் முனையில் நின்றுகொண்டு அந்தப் பக்கம் போன ஒருவரை அழைத்து, 'தபால் ஆபீஸ் எங்கே இருக்கிறது?' என்று கேட்டேன்.

அதற்கு அவர் புன்னகையுடன், 'அதைக் கண்டுபிடிப்பது கடினமாய் இருக்கலாம். உங்கள் தலைக்குமேலே போகிற தந்திக் கம்பியை வெகுதூரம் சலிக்காமல் பார்த்துக் கொண்டே போங்கள். அந்தக் கம்பி இறங்குகிற இடம்தான் தபால் தந்தி ஆபீஸ்' என்று சொல்லி தூரத்தில் இருந்த ஒரு மரத்தடியில் நின்றுகொண்டார்.

நான் நிமிர்ந்து பார்த்தபோது, அந்தக்கம்பி என் முதுகுக்குப் பின் இறங்கினதையும், தபால் ஆபீசு வாசலிலேயே நான் நின்றுகொண்டிருந்தும், தபால் ஆபீஸ் என்பதை அறியாமல் இருந்த எனக்கு வியப்பைத் தந்தது.

அவ்வாறே தேவனுடைய திராட்சைத்தோட்டம் என்னும் சபையிலுள்ள குடும்பத்தில் பிறந்து, இறைவன் தொழுவத்தில் அமர்ந்து, அவரால் தூக்கிச் சுமக்கப்பட்டும், கழுவி ஆசீர்வதிக்கப்பட்டும் வரும் ஆடுகளாகிய சபையாரில் சிலர், அதைச் சற்றும் உணராமல் பணக்கஷ்டம், பகை முதலியவைகளில் சிக்கிக்கொண்டு இன்னல் அடைவதை இக்கட்டத்தில் நினைத்துக்கொள்வோம்.

* * *

**ப**ல ஆண்டுகளுக்குமுன் சென்னையில் உள்ள இராயபுரம் வைத்தியசாலையில் என் அம்மானுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இரவு இரண்டு மணிபோல் அந்தச் சிசுவை நான் பார்த்துவிட்டு, இரவு முழுவதும் நடந்து சிந்தாதிரிப் பேட்டையை அணுகிக் காலை நாலு மணிபோல் என் அம்மான் வீட்டுக் கதவைத் தட்டினேன். நடந்துவந்த களைப்பும், தாகமும் என்னைப் பீடித்திருந்தன. பக்கத்தில் படுத்திருந்த ஒருவர், 'நீர் யார் ஐயா? ஏன் தட்டுகிறீர்?' என்று கேட்டார். 'நான் என் மாமாவுக்கு ஒரு நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறேன்' என்றேன். 'என்னிடத்தில் சொல்லுங்கள், நான் அதைச் சொல்லுகிறேன்' என்றார். 'நானே அதை நேரில் சொன்னால்தான் இரசிக்கும்' என்றேன்.

உடனே அவர், 'கடம்பவனம்' என்றார். வெளியே படுத்திருந்தவர்தாம் என் அம்மான். என் மாமனோடு நேரில் பேசிக்கொண்டிருந்தும் நான் மாமனோடு பேசிக்கொண்டிருக்

கிறேன் என்பதை அறியாதிருந்ததை உணர்ந்து வெட்கப்பட்டேன்.

அவ்வாறே நமது தமிழ் மொழியில் ஜெபம்பண்ணும்போது இறைவனோடு பேசுகிறோம் என்பதை அறியாமல் ஜெப வாழ்க்கையை அசட்டைபண்ணி கரிசனையற்று ஏனோதானோ வென்று வாழ்ந்துவரும் வயது முதிர்ந்த கிறிஸ்தவர்களையும் இக்கட்டத்தில் நினைத்துக்கொள்வோம்.

அவரைப்பற்றியன்று, அவரையே அறிவதுதான் மெய் ஜீவனும்.

**'காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே'** *(பிரசங்கி 12:13)*

**'ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்'**
*(யோவான் 17:3)*

## 33

# உன் பாவம் உன்னைப் பிடிக்கும்

**ப**ல்லாண்டுகளுக்குமுன் மதுரை மாநகரில் நடந்த கிறிஸ்தவ மகாநாட்டிற்குத் தலைமை தாங்க வந்த அழைப்பை நான் ஏற்றுக்கொண்டு, அங்கு துரிதமாகச் சென்று வழக்கறிஞராக இருந்த திருவாளர் ஞான ஒளிவு அவர்கள் வீட்டில் தங்கியிருந்தேன். கூட்டத்திற்குப் போகும்முன் சவரம் செய்துகொள்ளவேண்டிய அவசரத்தை உணர்ந்து, பின்வரும் தீர்மானத்திற்கு உட்பட்டேன். வைகை ஆற்றிற்குச் சென்று அங்கிருக்கும் சவரத் தொழிலாளியை அணுகி, நான் கிறிஸ்தவன் என்பதைக் காட்டிக்கொள்ளாமல் காரியத்தை முடித்துக்கொள்ளலாம். நான் கிறிஸ்தவன் என்பதை அவன் அறிந்தால், இந்த வைதீகப் பட்டணத்தில் எனக்குச் சவரம் செய்ய மறுத்துவிடக்கூடும். முகச்சவரம் செய்துகொள்ளாமல் அக்கூட்டத்திற்குப்போவது சரியன்று.

ஆற்றங்கரைக்குச் சென்றேன். அங்கிருந்த இரண்டு மூன்று குடிசைகள்முன் உலாவிவிட்டு ஒரு குடிசையின்முன் சென்றேன். அவ்வீட்டுக்காரன் என்னைப் பார்த்து, 'என்னுங்க வேணும் உங்களுக்கு' என்றான்.

நான் 'சவரம் செய்துகொள்ளவேண்டும்' என்றேன். அவன் என்னை மேலும் கீழும் பார்த்துவிட்டு, 'நீங்கள் கிறிஸ்தவர்களா?' என்று கேட்டுவிட்டான், என் உள்ளம் உடைபடும் வகையில்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உடல் சிலிர்க்கப் பெற்றேன். அவன் உடனே 'என்னுங்க சும்மா நிக்கிறீங்களே?' என்றான். அந்தக் கேள்வியை அவன் கேட்கத் துணிந்த காரணத்தைக் கேட்டேன். அதற்கு அவன் 'இன்று அமாவாசை தினமானதால், இந்துக்கள் வரமாட்டார்கள். கிறிஸ்தவர்கள்தான் வரக்கூடும்' என்றான். நான் இந்துவாக இருந்தவன். அன்று அமாவாசைத் தினமென்று அறிந்திருக்

கும் பட்சத்தில் சவரம் செய்துகொள்ள அங்குச் சென்றிருக்க மாட்டேன். கையுங் களவுமாகப் பிடிபட்டுவிட்டேன்! வெட்கம் என் உள்ளத்தை நிரப்பிவிட்டது. பிறகு என் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பினேன். நம் குற்றங் குறைகளை மறைத்துவைப்பது கூடிய காரியமா?

'பொய் பேசும் உதடு பிரபுவுக்கு எவ்வளவேனும் தகாது'
(நீதிமொழிகள் 17:7)

'ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்'
(கொலோசெயர் 3:9)

# 34

# தெய்வத்தை நம்பியிருந்தால்...

சுமார் 400 ஆண்டுகளுக்குமுன் ஆங்கில நாட்டை சர்வாதிகாரியாக அரசு புரிந்துவந்த எட்டாவது ஹென்றி என்னும் மன்னன் ஆடின ஆட்டத்தையும், மக்களுக்குக் கொடுத்த துன்பத்தையும் ஆங்கில நாட்டுச் சரித்திரம் இன்னும் மறக்கவில்லை. அக்காலத்தில் அரசனது கொடுமையான ஆட்சியை எதிர்த்து நிற்பாருமில்லை. அத்தருவாயில் கார்டினல் ஊல்சி (Cardinal Wolsey) என்பவர் மந்திரியாக இருந்து அம்மன்னனைப் பூரணமாக நம்பி அவனைத் திருப்தி செய்யத் தம்மால் இயன்றவரையில் வளைந்து கொடுத்தார். எத்தனை நாள் அந்நிலைமையை நாட்டக்கூடும். அம்மன்னனது பல விவாகத்துறையில் மந்திரியினிடம் கருத்து வேற்றுமை இருப்பதை உணர்ந்து மன்னன் அவரை ஊருக்கு வெளியே அனுப்பி விட்டான்.

கார்டினல் ஊல்சி என்னும் பெரியார் கைவிடப்பட்டவராக பல்லாண்டுகளாக வெளியூரில் வசித்து விருத்தாப்பியரான பின் அம்மன்னன் அவருக்கு ஓர் அழைப்பு விடுத்தான். ஊல்சி பெரியாருக்கோ ஒன்றும் விளங்கவில்லை. இக்கொடிய மன்னன் எதற்காக அழைக்கிறான் என்பதையும் அவர் அறிந்து கொள்ளக்கூடவில்லை. அச்சம் ஒருபுறம், அமைதி ஒருபுறம், அனல் ஒருபுறமாக இருந்த தருணத்தில் 'இவ்வரசனின் நிழலை நம்பின அளவிற்கு நான் இறைவனை நம்பியிருந்தால் இந்த முதிர்வயதில் அவர் என்னைக் கைவிடமாட்டாரே' என இயம்பி வருந்தினர் என்பது சரித்திரம்.

பார்வோன் என்னும் அரசனின் நிழலையும், எகிப்து என்னும் நாட்டின் நிழலையும் (ஏசா. 30:3), ஆமணக்குச் செடி என்னும் சுகவாழ்வின் நிழலையும் (யோனா 4:6–8)

நம்பினவர்களைவிட சர்வ வல்லவருடைய நிழலில் நம்பின வர்கள் எட்டு ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்பதை 91ம் சங்கீதம் கடைசி மூன்று வசனங்களில் காண்கிறோம்.

'மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுத லாய் இருப்பதே நலம்' *(சங்கீதம் 118:8)*

'ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக' *(1 தீமோத்தேயு 6:16)*

## 35

# 'மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு'

திருப்பத்தூரில் கிறிஸ்துகுல ஆசிரமத்தை நாட்டியுள்ள டாக்டர் ஜேசுதாசன் பெரிய அண்ணனையும், டாக்டர் பேட்டன் சின்ன அண்ணனையும் தமிழ் உலகம் மறக்கும் நிலையில் இல்லை.

அடிவயிற்றில் 'அபெண்டிசைடிஸ்' (குடல் வால் வியாதி) என்னும் வியாதியுள்ள ஒரு வாலிபன் ஆசிரம ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்தான். சின்னண்ணன் வழக்கம்போல் அவன் கட்டிலில் உட்கார்ந்து அவனிடம் தமிழில் பேசி கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தார். வெள்ளைக்காரன் தமிழ் பேசுவதைக் கேட்டு அவன் பூரித்திருந்தான். அத் தருணத்தில் அவன் அடிவயிற்றைத் தடவிக்கொண்டிருந்த நேரத்தில் தாங்கமுடியாத வலி இருந்ததால் அவன் பேட்டன் சின்னண்ணன் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டான். சின்னண்ணன் திடுக்கிட்டுக் குனிந்து அவன் கன்னங்களில் முத்தமிட்டு தான் தெரியாமல் செய்துவிட்டதால் மன்னிப்புக் கேட்டு மறுபடியும் சில நேரம் அவன் பக்கத்தில் இருந்து அவனுடன் விளையாடி அவனைச் சிரிக்கவைத்து விட்டுச் சென்றார். மறுநாள் அவனுக்குச் சிகிச்சை செய்து சுகப்படுத்தி அனுப்பிவிட்டார்.

'உமது நேசம் திராட்சரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது'
*(உன்னதப்பாட்டு 1:2)*

'ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு' *(மத்தேயு 5:39)*

# 36

# அன்பும் அறமும்!

பல்லாண்டுகளுக்குமுன் நான் ஒரு பேருந்தில் அரக்கோணம் வந்துகொண்டிருக்கையில் ஒரு பொடியன் ஒரு மூட்டையுடன் வண்டியில் ஏறி அரை டிக்கட் கேட்டான். கண்டக்டர், அவன் முழு டிக்கட்டுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தினர். 'நேற்றுதான் ஐயா, நான் அரை டிக்கட்டில் வந்தேன். என் கையில் காசில்லையே' என்று அழுதான். அருகில் இருந்த பிரயாணி ஒருவர் அவனை, 'எருமை மாடே' என்று திட்டி 'வண்டியை ஓட்டும்' என்று சொல்லி அவனைப் பிடித்துக் கீழே தள்ளப் பார்த்தார்.

மாலை ஏழு மணி வேளையில் அவன் கீழே இறங்க இருந்தான். அப்படியானல் அவன் பின்னல் இரண்டு மைல் முன்னல் 15 மைல் நடக்கவேண்டியிருக்கும். அழுது கெஞ்சினன். பிரயாணியின் மூர்க்கமான குணம் குறையவில்லை. வண்டியின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர் கண்டக்டரை அழைத்து அவனின் முழு டிக்கட் பணத்தைக் கொடுத்து அவனை ஏற்றிவரச் சொன்னர்.

அவன் எங்களுடன் வந்து அரக்கோணத்தில் இறங்கினன். இவ்விடத்தில் 'அம்பு யார்? அன்பு யார்?'

* * *

ஒரு தினம் செங்கல்பட்டு தெருவில் பானைசட்டி தூக்கிக் கொண்டு வந்த ஒரு மாது எருமை மாட்டுக்குப் பயந்து கீழே விழுந்து தன் பானைசட்டிகள் உடைந்திருப்பதைக் கண்டு கண்ணீருடன், 'இப்பானையை விற்று விட்டு நொய்யரிசியாவது வாங்கிக்கொண்டுவா என்று என் மாமியார் சொன்னளே, தற்பொழுது என் பிள்ளைகளுக்கு நொய்க்கஞ்சிகூட இல்லாமல் போய்விட்டதே. என் புருஷன் என்னை அடிப்பானே. என் மாமியார் என்னைத் திட்டுவாளே' என்று அழுதாள், புலம்பினள்.

பக்கத்தில் இருந்தவர்கள், 'முட்டாளே, நீ எருமை மாட்டைப் பார்த்ததில்லையா? வீட்டிற்குப்போ, உன் கணவன் உன்னை அடித்து உதைக்கட்டும், உன் மாமியார் உன்னைத் திட்டட்டும். அப்போதுதான் உனக்குப் புத்தி வரும்' என்று முரட்டுத்தனமாக அவளிடம் பேசினார்கள். அத்தருணத்தில் சைக்கிளில் போய்க்கொண்டிருந்த ஒருவர் இதைப் பார்த்து பரிதபித்து 'அவளிடம் வந்து இந்தப் பானையை எவ்வளவுக்கு விற்றிருப்பாய்' என்று கேட்டார். 'முக்கால் அல்லது ஒரு ரூபாய்க்கு விற்றிருப்பேன் சாமி' என்றாள்.

அவர் அப்பணத்தை அவள் கையில் கொடுத்து, 'நொய் அரிசி வாங்கிக்கொண்டுபோ, பானை உடைந்ததை உன் மாமி யாருக்குச் சொல்லாதே' என்றார்.

அப்பணத்தை வாங்கி, 'மவராசா, நீ நல்லா இருப்ப. மவராசா, நீ நல்லா இருப்ப' என்று சொல்லி அவன் காலில் விழுந்து கும்பிட்டுக் கூடையை எடுத்துக்கொண்டு போய் விட்டாள்.

இவ்விடத்தில் 'அறம் எது? மறம் எது?'

'பிறனை அவமதிக்கிறவன் பாவஞ்செய்கிறான்; தரித்திரனுக்கு இரங்குகிறவனே பாக்கியமடைவான்' *(நீதிமொழிகள் 14:31)*

'இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்' *(மத்தேயு 5:7)*

## 37

# பனை மரத் தோப்பில்...

பல்லாண்டுகளுக்குமுன் நெல்லை நாட்டில் ஊருக்கு வெளியே யுள்ள வயல்களில் வேலை செய்துவிட்டு தங்கள் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சிலர், பக்கத்திலுள்ள பனை மரத் தோப்பிலே ஒரு சிறுவனுடைய அழுகுரலைக் கேட்டனர். யாரோ ஒரு சிறுவனைப் பாம்பு கடித்திருக்கவேண்டும் என்று அஞ்சி, அழுகுரல் வந்த திசையை நோக்கி நடந்தனர். அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்குப் பிரமிப்பை உண் டாக்கியது. இளைஞன் ஒருவன் முழங்காலில் நின்று, 'இயேசு கிறிஸ்துவின் நாமம் இங்கு மகிமைப்படவேண்டுமே! நெல்லை நாட்டிலுள்ளவர்கள் காளி, காட்டேரியை வணங்காமல், மெய்த் தேவனுகிய உம்மை வணங்கவேண்டுமே!' என்று விம்மி, விம்மி அழுது ஜெபித்துக்கொண்டிருந்தான். அவன் ஜெபித்து எழுந்தவுடன், அவன் யாரென்று தெரிந்துகொண்ட ஒருவர் 'நீ பெரிய வீட்டுப் பிள்ளையாயிற்றே! இங்கு என்னடா உனக்கு வேலை? ஏண்டா அழுகிருய்? இங்குப் பாம்பு அதிகம். இனிமேல் இங்கு வராதேடா' என்று சொல்லி அவன் காதைப் பிடித்து முறுக்கி 'வீட்டிற்குப் போடா' என்று அனுப்பி வைத்தார்.

இந்தச் சிறுவன்தான் முதல் இந்தியப் பேராயராகவும், இந்திய மிஷனரி சங்க முதல் செயலாளராகவும், தோர்ணக்கல் என்னும் புதிய அத்தியட்சாதீனத்தை உருவாக்கினவரும், அதற்கு ஆபரணமாக விளங்கியவருமான அசரியா அத்தியட்ச ராவார்.

'ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞான முள்ளவன்' *(நீதிமொழிகள் 11:30)*

'கர்த்தாவே, பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர்; எல்லாத் தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர்'

*(சங்கீதம் 97:9)*

'நீ வெட்கப்படாத ஊழியக்காரனுயிரு'

*(2 தீமோத்தேயு 2:15)*

# 38

# இவர்கள் இங்கே என்ன செய்கிறார்கள்?

ஆங்கில நாட்டை முதலாம் சார்லஸ் மன்னன் ஆண்டு வந்தபோது நடைபெற்ற புரட்சியின் காரணத்தால், அம் மன்னன் 1949ம் ஆண்டில் கொல்லப்பட்டார். அதன்பின், அந்நாட்டைக் குடியரசின் பாவனையில் ஆலிவர் கிராம்வெல் என்பவர் அதற்குக் காவலனாக ஒன்பது ஆண்டுகள் அதை நடத்திவந்தார். அவர் தேசாபிமானமும், மார்க்கப் பற்றுடையவராகவும் விளங்கினார்.

அவர் ஒருநாள் கோயிலுக்குச் சென்றிருந்த தருணம், ஆராதனை நடந்தபின் அவரை அவ்வாலயக் குரு ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்குப் பன்னிரண்டு சொரூபங்கள் இருந்தன. அவைகளின் தலைப்பாகையும், சட்டையும், பித்தான்களும், பெல்ட்டுகளும், காலிலுள்ள செருப்புக்களும் தங்கத்தினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கிராம்வெல், 'இவர்க ளெல்லாம் யார்? இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறார் கள்?' என்று கேட்டவுடன், குருத்துவர்,

'மேன்மை தங்கிய பிரபுவே, இவர்கள்தான் ஆண்டவ ருடைய பன்னிரண்டு சீடர்கள். இதை மற்றவர்கள் காணும் வண்ணம் இச்சிலைகளைச் சித்திரித்து வைத்துள்ளோம்' என்றார். அதற்கு கிராம்வெல் அசந்து போனவராக,

'இவர்களெல்லாம் ஆண்டவரின் சீடர்களா? உலகம் முழு வதும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேடத்தைப் பிரசங்கி யுங்கள் என்ற தெய்வ வாக்கை மதிக்காமல், சோம்பேறிக ளாக இங்கே ஏன் உட்கார்ந்திருக்கிறார்கள்' என்று சொல்லி, 'இங்குள்ள தங்கத்தையெல்லாம் பணமாக்கி மிஷனரிமார்

களே அந்நிய நாடுகளுக்கு அனுப்புங்கள். இப்பொம்மைகளே இந்த இடத்தில் இராமல் அப்புறப்படுத்துங்கள்' என்று உத்தர விட்டுச் சென்றூர். அதன்படியே நடந்ததாக சரித்திரம் சாதிக்கின்றது.

'சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்?'

*(நீதிமொழிகள் 6:9)*

'நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேடத்தைப் பிரசங்கியுங்கள்' *(மாற்கு 16:15)*

# 39

# 'ஐயா! அதிகம் பேசாதீர்'

இவ்வுலகிலுள்ள பெரிய சமுத்திரத்தில் தீவுகள் பல உள்ளன. ஒரு தீவின் அருகில் கப்பல் ஒன்று மூழ்கினது. மூழ்கின கப்பலிலிருந்து ஒரு பிரயாணி அங்கு மிதந்துகொண்டிருந்த பலகையின்மேல் படுத்து இரு கரங்களினாலும் தண்ணீரைத் தள்ளிக்கொண்டே அருகிலிருந்த தீவை நோக்கி வந்தான். அத்தீவிலுள்ளோர் இவன் வெகு தூரத்தில் வருவதைப் பார்த்து, படகுகளைக் கொண்டுபோய் அவனை ஏற்றி வந்து அன்பு பாராட்டி அவனுக்கு உடையும், உணவும் கொடுத்த பின்பு அவன் அயர்ந்து தூங்கிவிட்டான். மறுநாள் காலையில் எழுந்தவுடன் அவனுக்கு வேண்டிய ஆகாரங்களும் வைக்கப்பட்டிருந்தன. உடனே அவன் அவர்களைப் பார்த்து, 'இவ்வளவு அன்பும், நற்குணமும், அந்நியரை உபசரிக்கும் பண்பும் உங்களிடத்தில் இருப்பதைக் கண்டு நான் களிக்கின்றேன். ஆனால், நீங்கள் இயேசுகிறிஸ்துவை வணங்குகிறீர்கள் என்று அருகிலுள்ள கோயிலின்மூலம் அறிந்தேன். இந்த மூடத்தனம் உங்கள் வாழ்க்கையில் எப்படி நுழைந்தது' என்று வியப்பும் கண்டிப்பும் கலந்த விதமாகப் பேசினான்.

அதைக் கேட்ட அத்தீவுக்குப் பெரியவன், 'ஐயா, அதிகம் பேசாதீர்; நாங்கள் நரமாம்சப் பட்சிணிகளாக இருந்தோம். அதாவது, மனிதனைக் கொன்று அவன் மாமிசத்தைப் புசித்து வந்தவர்கள். நாங்கள் கிறிஸ்துவை அறியாது அவரை வணங்காதவர்களாக இருந்திருந்தால் இந்நேரம் உம்மைக் கொன்று உம் ஈரலையும், மூளையையும் நெருப்பில் சுட்டு நாங்கள் எல்லோரும் புசித்திருப்போம். நீர் காப்பாற்றப்பட்டதற்கும், எங்களிடத்தில் கண்ட நற்குணத்திற்கும் காரணம் இயேசுகிறிஸ்துதான். அதை நீர் அறியாத மடமைத்தனத்தை எங்களுக்குக் காட்டிவிட்டீரே! இனிமேல் நீரும் எங்களைப்போல் கிறிஸ்துவைப் பின்பற்றினால் உம்மிலும் இவ்வாறான நற்குணங்கள் பல விளங்கும்' என்று சொல்லி, சிறிது

நேரத்திற்குப்பின் அவ்வழியே வந்த கப்பலில் அவனை ஏற்றி அனுப்பிவிட்டார்கள்.

அவன் ஒரு கிறிஸ்தவ தேவ ஊழியனாக மாறினான் என்று சரித்திரத்திலிருந்து அறிகின்றோம்.

'அன்போ சகல பாவங்களையும் மூடும்' (நீதிமொழிகள் *10:12*)

'அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை'
(*1* கொரிந்தியர் *13:2*)

'உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது'
(*1* கொரிந்தியர் *16:14*)

# 40

# உங்கள் தாத்தா என்ன செய்துகொண்டிருந்தார்?

பல்லாண்டுகளுக்குமுன் டேவிட் லிவிங்ஸ்ட்டன் என்ற கிறிஸ்தவ மிஷனரி மூலம் ஆப்பிரிக்க மக்கள் கிறிஸ்தவ உபதேசங்கேட்டு கிறிஸ்துமூலம் கிடைக்கக்கூடிய உன்னத வாழ்க்கையைப் பெற்று, அனுபவித்து வந்தனர். டேவிட் லிவிங்ஸ்ட்டன் ஒரு கிராமத்தில் பிரசங்கித்துவிட்டுத் திரும்பும் சமயம் கிராம அதிகாரி கிறிஸ்துவின் உபதேசத்தால் கவர்ந்து கொள்ளப்பட்டு மிஷனரியிடம் பேசும்படி வந்தார்.

'துரையே, இயேசுகிறிஸ்துவும் அவருடைய அருமையான உபதேசமும் உலகத்திற்கு எப்பொழுது வந்தது?' என்று கிராம அதிகாரி கேட்டார்.

'பெரியாரே, கிறிஸ்து பெருமான் உலகம் தோன்றுவதற்கு முன்னுலேயே இருக்கிருர். அவர் உலகத்தில் மனிதனுகத் தோன்றி 2,000 வருடங்கள் ஆகின்றன. அவர் அருளிச் செய்த நற்செய்தி 2,000 வருடங்களாகப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது' என்ருர் மிஷனரி.

'அடேயப்பா! 2,000 வருடங்களாக இச்சுவிசேடம் பிரசங்கிக்கப்பட்டு வருகிறதா? அப்படியானுல், உங்கள் தாத்தா உங்கள் ஊரில் என்ன செய்துகொண்டிருந்தார்? உங்கள் தாத்தா எங்கள் நாட்டிற்கு வந்து எங்கள் தாத்தா விற்கு இச்சுப செய்தியை அறிவித்திருக்கலாமே! உங்கள் தகப்பனுர் உங்கள் ஊரில் என்ன செய்துகொண்டிருந்தார்? உங்கள் தகப்பனுர் எங்கள் ஊருக்கு வந்து என் தகப்பனுருக்கு இந்நற்செய்தியை அறிவித்திருக்கலாமே! அவர்களெல்லாரும் இச்சுவிசேடத்தைக் கேள்விப்படாமலே மாண்டுபோய்விட்ட னரே! உங்கள் தாத்தாவும், உங்கள் தகப்பனுரும் உங்கள் ஊரில் சோம்பேறியாகவே இருந்து நாட்களைக் கழித்த னரோ?' என்று கண்ணீருடனும் கோபத்துடனும் கேட்டார்.

சுவிசேடத்தை அறிவிப்பதற்கு நான் என்ன முயற்சி செய்கிறேன்? பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று காலங் கடத்துகிறேனு? பரீட்சைகள் எல்லாம் பாஸ்பண்ணின பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்றிருக்கிறேனே? பள்ளி மாணவனுயிருக்கையில்கூட ஒய்வு நேரங்களில் தூய துண்டுப் பிரதிகள் கொடுக்கலாமே! சன்மார்க்கப் புத்தகங்கள் விற்கலாமே! காலங்கடத்தினுல், அதற்குள் எத்தனை பேர் சுவிசேடத்தைக் கேளாமலே மாண்டுபோய்விடுவார்கள் என்ற எண்ணம் உன்னைத் துடிக்க வைக்கவில்லையோ?

பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்.

'கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது' *(ஏசாயா 62:6)*

'சுவிசேடத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ' *(1 கொரிந்தியர் 9:16)*

# 41

# ஒட்டியாணத்தை அல்ல!

பல்லாண்டுகளுக்குமுன் மதுரை மங்களபுரத்தில் இருக்கும் மிஷன் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் என்.எம்.எஸ். என்னும் சுதேச சுவிசேட சங்கத்தின் சார்பாக மூன்று கூட்டங்கள் நடைபெற்றன. அதில் பள்ளி மாணவிகளும் கிறிஸ்தவ மக்களும் வந்து அம்மண்டபத்தை நிரப்பியிருந்தனர். காணிக்கைத் தட்டில் சிறு சிறு நகைகள் கிடந்தன.

கடைசிக் கூட்டத்தில் ஒரு வெள்ளி ஒட்டியாணம் காணிக்கைத் தட்டில் அலங்காரமாக உட்கார்ந்திருந்தது. காணிக்கைத் தட்டிலுள்ள ஒட்டியாணத்தைப் பார்த்ததும் என் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. என் மனதில் தோன்றிய ஆசையை விளக்கினேன். அம்மணிகளே, நகைக்காகவும் பணத்திற்காகவும் பெரும்பாலும் நான் வந்தவன் அல்ல. எங்கள் சேவைக்கு ஆட்கள் தேவை. இப்பெருங்கூட்டத்தில் சேவைபுரிய விருப்பமுடையோர் இருக்கிறீர்கள். நான் இரண்டு நிமிடங்கள் கண்களை மூடிக்கொள்வேன். ‘சேவை புரிய ஏவப்பட்டுள்ளோர் முன்வந்து நில்லுங்கள்’ என இயம்பி என் கண்களை மூடிக்கொண்டேன்.

என் கண்களைத் திறந்தவுடன் ஒரு மாணவி என் முன் அக்கூட்டத்தில் முழங்காலில் நிற்பதைக் கண்டேன். கூட்டம் முடிந்த பின் அப்பெண் விவாகம் செய்துகொள்வதைக்கூட மறுத்துவிட்டு இறைவனுக்கு ஊழியம் செய்ய முன் வந்ததாகச் சொன்னாள்.

அந்தப் பெண்ணை பொதுக் காரியதரிசிக்கு தன் ஆசையை விளக்கி ஒரு கடிதம் எழுதக் கேட்டேன். அப்படியே எழுதிக் கொடுத்தனள். அதன் பயனாக சென்னை காரியாலயத்தில் இருந்து உத்தரவு அப்பெண்ணுக்கு வந்ததின்பேரில் திருப்பத்தூர் ஆசிரமத்திற்கு சென்றார்கள். அப்பக்கத்தில் உள்ள கிராமங்களிலெல்லாம் சுவிசேட எக்காளத்தை ஊதி

ஞர்கள். புரம் என்னும் ஓர் இந்துக் கிராமத்தில் சிலர் கிறிஸ்து பெருமானை ஏற்றுக்கொண்டதின் பயனுக ஒரு கிறிஸ்தவ சபையை நாட்டி கருங்கல்லில் ஒரு கோவிலேயும் கட்டி வைத்தார்கள். அந்தக் கிராமத்திலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் கிறிஸ்தவப் பள்ளிகளேயும் நாட்டிக் களித்தார்கள்.

அவ்வம்மையார் சுவிசேட சங்கத்தில் சம்பளம் வாங்காமலேயே ஊழியம் செய்து வந்தது போற்றற்பாலது. அவர்கள் இறைவனடி சேர்ந்தபின் அவர்களது சடலம் அவர்கள் கட்டின கோவிலுக்கருகில் சமாதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வம்மையார் யாராக இருக்கலாம்? யோசித்துப் பாருங்கள். இவர்கள்தான் குமாரி ஜெயமணி டெய்லர் அம்மையார்.

இவர்கள் மறைந்தும் இவர்களது புகழ் மணம் இன்னும் தமிழ் நாட்டில் கமழ்ந்துகொண்டிருக்கிறது.

ஆண்டவர் வேலேக்கு ஆள்வேண்டும்; ஆபரணம் அல்ல!

**'யாரை நான் அனுப்புவேன்; யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்'** *(ஏசாயா 6:8)*

**'சுவிசேடகனுடைய வேலேயைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'** *(2 தீமோத்தேயு 4:5)*

## 42

# பீரங்கிக்குண்டா?

அணுக்குண்டைவிட ஜெபமே வல்லமையான கருவி யாகும். பரமாணுக்குண்டைவிட பரமனின் பார்வையே வல்லமையானதாகும்.

பல்லாண்டுகளுக்குமுன் மேரி அரசி என்பவள் ஸ்காட்லாண்டு தேசத்தை ஆண்டு வந்த காலத்தில் தனது மதத்தை நிலை நாட்டத் தன் திறமை, அதிகாரம் முதலியவைகளை வீரியத் துடன் பயன்படுத்தி வந்த தருணத்தில் ஜான் நாக்ஸ் என்னும் பெயரையுடைய கிறிஸ்தவ சந்நியாசி ஒருவன் சீர்திருத்த (Protestant) சபையை அந்நாட்டில் நிலைநிறுத்த உழைத்து வந்தான்.

இவ்விருவருக்கும் பெரிய போராட்டம் வெகு காலம் நடந்து வந்தது. ஜான் நாக்ஸ் என்னும் சந்நியாசியே வெற்றியைப் பெற்றான்.

சீர்திருத்த உபதேசம் நன்கு பரம்பினதின் பயனாக அக் கொள்கை நாடெங்கும் பரவிவிட்டது. இதை அறிந்த மேரி அரசி புலம்பினாளாம்: 'நான் கஜானாவையும், பட்டாளத் தையும், செல்வாக்கையும் நம்பி ஏமாந்து விழுந்து போய் விட்டேன்; ஜான் நாக்ஸ் என்பவருக்குப் பணம், பட்டாளம் என்னும் செல்வாக்குகள் இல்லாவிடினும் ஜெப முறையில் தன் காரியத்தை நிலைநிறுத்திவிட்டார். நான் பீரங்கிக் குண்டு முன்னால் நிற்கப் பயப்படேன். ஆனால், ஜான் நாக்ஸ் என்பவரின் ஜெபத்திற்கு முன்னால் என்னால் நிற்க முடிய வில்லையே' என்பதே அவள் புலம்பல்.

கடந்த இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான் தேசத்தில் நாகசாகி என்னும் ஊரில் விழுந்த குண்டு பல்லாயிரம் மக்களைக் கொன்றதாம். அத்தருவாயில் கூன், குருடு, சப்பாணி, ஊமையான மக்கள் இன்னும் அந்த ஊரில் உள்ளன ராம்.

பாவம் அழிக்கும், பிரார்த்தனை அளிக்கும்,
குண்டு கொல்லும்; ஜெபம் வெல்லும்.

வெடிகுண்டு விழுந்தவுடன் தானே அழிந்துபோம். விண்ணப்பம் செய்யச் செய்ய வளர்ந்து பெருகும்.

மோசே என்னும் ஒரே மனிதன் செய்த ஜெபத்தினுல் அமெலேக்கியர் யுத்தம் அமர்ந்துபோனதை இத்துடன் நினைத்துப் பார்ப்போம்.

என்னில் ஜெப வல்லமை உண்டா?

**'கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்; கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்வார்'** *(சங்கீதம் 6:9)*

**'ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்'** *(ரோமர் 12:12)*

43

# நெல்லைக்கு நசரேயன் ஒளி

திருநெல்வேலி மாவட்டத்தில் நாடார் வகுப்பைச் சேர்ந்த மக்களில் முதலில் கிறிஸ்து சமயத்தைத் தழுவினவர் சின்னமுத்து நாடார் என்பவர். இவர் விஜய புரத்திற்கருகில் உள்ள காலன்குடி கிராமத்தில் 1772ல் பிறந்து, பெற்றோர் மறைந்தபின் அத்தையால் வளர்க்கப் பட்டவர். இவர் ஒரு நூதனமான உத்தம சீடன். தேவாரம், திருவாசகம், கைவல்லியம், வைசிய ஜோசிய சாஸ்திரங்கள் முதலியவைகளைக் கற்று சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து வந்தார். வயல் வரப்பையும் ஆடு மாடுகளையும் கவனிக்காமல் பக்தியில் நேரத்தைக் கழித்ததைக் கண்ட இவர் அத்தை இவரைக் கொள்ளிக் கட்டையினால் சுட்டுவிட்டாள். உடனே அவர் தன் பந்துக்களுடன் சேர்ந்து இராஜபாளயத்தை அணுகி அங்கோர் கடையில் வேலை பார்த்தார். இவர் பக்தி யைக் கண்டவர்கள், இவரைச் சுந்தரானந்தன் என்று அழைக்க ஆரம்பித்தனர்.

அவர் பழைய பேர் மறந்துபோயிற்று. அங்கும் அவர் சிவசிவா என்று சொல்லிக்கொண்டே இருந்ததால் வேலையை விட்டுத் தள்ளப்பட்டார். அதற்குப்பின் திண்டுக்கல் வழி யாக தஞ்சாவூர் வந்து அங்கு ஒரு கடையில் அமர்ந்தார். அக்காலத்தில் மறைத்திரு. சுவார்ட்சு முனிவரது உபதேசி மார்கள் இவரை அணுகி கிறிஸ்து பெருமானை எடுத்துக் காட்டினதின் பயனாக அவரே பெருமான் என்பதை உணர்ந்து தஞ்சாவூர் ஆலயத்தில் 1795ம் ஆண்டில் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்து மதத்தைத் தழுவினபின் தன் சொந்த ஊராகிய விஜயபுரம் வந்து அங்கிருந்த அம்மான் குடும்பத் தைக் கிறிஸ்து மதத்துக்குக் கொண்டு வந்துவிட்டார். நெல்லை நாட்டில் முதல் முதல் கிறிஸ்து சமயத்தைத் தழுவின முதல் நாடார் குடும்பம் இதுவேதான்.

இப்பெரியார் ஒரே ஆண்டில் ஆயிரம் நாடார்களை ஞானஸ்நானத்துக்குக் கொண்டு வந்ததாக இவர் சேவையைப் புகழ்ந்து உயர் மறைத்திரு. கால்ட்வெல் பேராயரவர்கள் எழுதியிருக்கிறார். அதன்பின் 10 ஆண்டுகளுக்குள் 16,000 நாடார்கள் தங்கள் குடும்பங்களுடன் கிறிஸ்து மதத்தைத் தழுவி உள்ளதாக நெல்லைச் சரித்திரம் சாதிக்கின்றது. அக் கிறிஸ்தவர்களும் இப்பெரியாரும் பட்டபாடுகளையும், சிந்தனைகளையும் எடுத்துக்கூற பக்கங்கள் இடம் கொடா.

இந்த இன்னல்களை ஒழிக்க சாத்தான்குளத்தின் அருகில் இருந்த பனந்தோப்பை விலைக்கு வாங்கி குடிசைகள் பலவற்றைக் கட்டி அவர்களை அதில் குடியேற்றிவிட்டார். நெல்லை நாட்டில் அது முதல் கிறிஸ்தவக் கிராமமாதலால் அதற்கு முதலூர் என்று பேரிடப்பட்டது. இவர் ஊக்கத்தைக் கண்ட இந்துக்கள் இவருக்கு நஞ்சிட்டதின் பயனாக குளோரிந்தாள் இறந்த ஆண்டாகிய 1806ல் இத்திருமண்டலத்தின் முதல் இரத்தச்சாட்சியாக விண்ணேகினர்.

'கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்... மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடி வருவார்கள்' *(மீகா 4:1)*

'சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்கு நாள் பெருகின' *(அப்போஸ்தலர் 16:5)*

# 44

# மீன் பிடிப்பவரின் கண்கள் தூண்டிலில்தான்

1905ம் ஆண்டு நான் புதுக்கோட்டைக் கல்லூரியில் படித்த காலத்தில் இயேசு பெருமானையும், அவரது போதனை வாழ்க்கையைப்பற்றியும், அவரை ஏற்றுக்கொள்ளும் ஆசையையும், அதற்குள்ள தடைகளையும்பற்றி அக்காலத்தில் கல்கத்தா நகரில் வாரந்தோறும் ஆங்கிலத்தில் வெளிவந்த 'எபிப்பனி' என்னும் பத்திரிகையில் ஒழுங்காக எழுதி வந்தேன்.

அச்சமயத்தில் திருச்சினுப்பள்ளி கிறிஸ்தவக் கல்லூரிக்குப் பிரதமராய் இருந்த பாக்கென்ஹாம் வால்ஷ் (Packenham Walsh) என்னும் ஐரோப்பிய குரு என் கட்டுரைகளைப் படித்த பின் எனக்கு எழுதினதுமன்றி என்னைப் பார்த்துப் பேசவும் விரும்பினர்.

அக்காலத்தில் திருச்சினுப்பள்ளிக்கும் புதுக்கோட்டைக்கும் ரயில் மார்க்கமும் பஸ் வசதிகளும் இல்லை. என்னைப் பார்த்துப் பேச விரும்பி 32 மைல் சைக்கிள் வண்டியில் புதுக்கோட்டை வந்து என்னை அழைத்துப் பல மணி நேரம் பேசி என் சந்தேகங்களை நிவிர்த்தி செய்து ஜெபித்து, ஆசீர்வதித்து புதுக்கோட்டையில் இருந்த ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த மிஷனரி பெக்ஸல் துரை (Bexcel) வீட்டில் இரவைக் கழித்து மறுநாள் காலையில் 32 மைல் சைக்கிள்மூலம் திருச்சினுப்பள்ளி வந்து சேர்ந்தார்.

ஒரு மீனைப் பிடிக்க, ஓர் ஆத்துமாவை இயேசு பெருமான் பக்கம் திருப்ப ஒரு மிஷனரி 64 மைல் சைக்கிளில் பிரயாணம் செய்தார் என்றல் அது நூதனம்தானே? அந்த ஆர்வத்தை அளக்கமுடியுமோ?

மீன் பிடிப்பவர்களது கண்கள் தூண்டிலின்மேல் இருப்பது சகஜம். கருமமே கண்ணுயினேருக்கு மெய் வருத்தம் தெரியாது என்பது நமது மொழிச் சொல்.

'என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது. எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்'
(ஏசாயா 26:9)

'தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஓர் ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்' (யாக்கோபு 5:20)

# 45

# சாமுவேல் சாயர் துரை

போர்ச்சுக்கல் நாட்டைச் சார்ந்த சாயர் என்னும் ஒரு பெரு வியாபாரி பாளையங்கோட்டையில் இருந்தார். அவர் ஆங்கில அரசாங்கத்தாருக்கும் மலையாள மன்னனுக்கும் இடையே தூது செல்பவராக இருந்தமையால் செல்வாக்குடையவராக வாழ்ந்தார். அவர் பக்தி மிகுந்த நற்குண சாலி. ஐரோப்பிய குருமார்களது நட்பைப் பெற்றவர். திருச்சபைக்குத் திரண்ட பொருளுதவி செய்து வந்தார். ஆங்கிலத்திலும்—தமிழிலும் ஆராதனையும் நடத்திவந்தார். பள்ளி உபாத்திமார் பலரின் சம்பளங்களைத் தானே கொடுத்து வந்தார். சாயர் துரை குருவாக அபிஷேகம் பெறாவிடினும் அதைவிடப் பன்மடங்கு அதிகமாக தேவ ஊழியர்களுடன் சேர்ந்து முழுமனதுடன் உழைத்து வந்தார். பாளையங்கோட்டை மிஷனுக்குப் பொக்கிஷதாரராகவும் பணியாற்றி முன்பணம்போட்டு ஊழியம் பின்னடையாது பார்த்து வந்தார்.

அக்காலத்தில் புதிய கிறிஸ்தவர்களுக்குத் துன்பங்கள் அதிகம். அப்படிப்பட்டவர்களைத் தனியாகக் குடியேற்ற வென்று தூத்துக்குடிக்குத் தென்மேற்கில் 1810 ஏக்கருள்ள விசாலமான பெரிய பூமியை விலைக்கு வாங்கினார். தனிக் கிறிஸ்தவக் கிராமமாக அமைத்துக் கொடுத்தார். அது இன்னாளிலும் சாயர்புரம் என அவர் பெயராலேயே வழங்கி வருகின்றது. 'சாயர் என்பார் அக்காலத்தில் நிலம் வாங்கிக் கிறிஸ்தவர்களுக்கு வழங்கியிராவிடில் இப்பகுதியில் சுவிசேட ஒளி அணைந்துபோயிருக்கும்' எனக் கனம் போப்பையர் 1845ம் ஆண்டில் குறித்துள்ளார்; பிஷப் கால்டுவெல் அவர்களும் சாயர் துரையின் பக்தி, பரோபகார சிந்தையைப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

திருநெல்வேலி அத்தியட்சாதீனம் என்னும் இளம் பயிருக்குப் பாத்தி கட்டி நீர் பாய்ச்சி வளர்த்து வந்த பக்தரில் இவரும் ஒருவர். இப்பெரியார் 1815ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் நாளில் இறைவனடி சேர்ந்தார். இவரது சமாதியைப் பாளையங்கோட்டை பழைய பட்டாளாக் கல்லறை வளைவில் காணலாம்.

(1960 ஜனுவரி நற்போதகத்தில் தந்தையவர்கள் எழுதிய விரிவான கட்டுரையை மிகவும் சிறிதாகச் சுருக்கியுள்ளேன்.)

# 46

# பேராய மண்டலத்தின் பெருவளர்ச்சி

நெல்லையில் குளோரிந்தாள் அம்மையார் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவிப் பணியாற்றின தருணம் (1778). முதல் சபையில் 14 பேர் இருந்தார்கள்.

முதல் ஞானஸ்நானப் புத்தகத்தின்படி (The First Register of Baptism of the Diocese—1780) சபையில் 40 பேர் இருந்தார்கள். குரு சுவார்ட்சு முதல் கோவிலைப் பிரதிஷ்டை பண்ணின தருணம் (1785) சபையில் 160 பேர் இருந்தார்கள்.

அதன்பின் (1791) குரு சேனிகே காலத்தில் வைத்திருந்த புத்தகத்தின்படி சபையில் 283 பேர் இருந்தார்கள்.

1796ம் ஆண்டு முதல் 1806ம் ஆண்டுவரை ஆயிரக் கணக்கான மக்கள் (Mass movement) கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவினர். அவர்களுக்குக் குருக்கள், கற்பகம் சத்தியநாதன், ஜெரிக்கே, ஜெனிக்கே முதலியோர் ஞானஸ்நானம் கொடுத்தனர்.

குரு கற்பகம் சத்தியநாதன் திருநெல்வேலித் திருச்சபையைக் கடைசியாக விட்டு வந்த தருணம் (1805) பாளையங்கோட்டையில் 35 திருச்சபைகளும் அவைகளில் சுமார் 5000 அங்கத்தினரும் இருந்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 1829ம் ஆண்டில் 6000 கிறிஸ்தவர்களும், அதன்பின் பத்து ஆண்டுகளுக்குள் 30,000 கிறிஸ்தவர்களும், பிஷப் டெல்டிரி குறிப்பின்படி (Bishop's Charge) 1858ம் ஆண்டில் 60,000 கிறிஸ்தவர்களிருந்தார்கள். அத்துடன் 531 சபைகளும், 306 பள்ளிக்கூடங்களுமிருந்தன.

*1869*ம் ஆண்டில் சென்னை ஜெல் அத்தியட்சர் (Bishop Frederick Gell) பாளையங்கோட்டையில் ஒரே தினத்தில் 22 டீக்கன்மார்களுக்கும், 10 குருமார்களுக்கும் குருப்பட்டம் அளித்தார். அது திருச்சபையின் வளர்ச்சிக்கு அடையாள மன்றோ!

தற்பொழுது (1974) திருநெல்வேலி சீர்திருத்த சபையில் மட்டும் சுமார் இரண்டு இலட்சம் கிறிஸ்தவர்கள் இருக்கி ருர்கள். கிறிஸ்தவக் கிராமங்கள் மட்டும் 1157 உள்ளன. நூற்றுக்கணக்கான ஆலயங்களும், கல்வி ஸ்தாபனங்களும் நிரம்பியுள்ளன.

கடவுளுக்குச் சித்தமானல் திருநெல்வேலித் திருச்சபை ஆரம்பத்தின் இரண்டாம் நூற்ருண்டு உற்சவம் 1980ம் ஆண்டு கொண்டாடப்படும். மகாகனம் நீல் அத்தியட்சரவர்களின் ஆலோசனைப்படி கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை இப்பொழுது இருப்பதைவிடக் கூட ஒரு மடங்கு இருக்கவேண்டும்.

அப்படியானல் சுவிசேட ஊழியமும் இருமடங்கு அதிகப்பட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு மிஷனரியாக மாறவேண்டும்.

'உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு' *(ஏசாயா 54:2,3)*

'சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான். கர்த்தராகிய நான் ஏற்ற காலத்தில் இதைத் தீவிரமாக நடப் பிப்பேன்' *(ஏசாயா 60:22)*

'தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று' *(அப்போஸ்தலர் 12:24)*

## 47

# பஞ்சவர்ணக் கிளிஞ்சில்!

பல்லாண்டுகளுக்குமுன் பாம்பன் என்னும் ஊரில் கூட்டங்கள் நடத்தச் சென்றிருந்த தருணம் திரு. ஐசக் என்னும் பெரியார் வீட்டில் தங்கி அவ்வூரிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு மூன்று நாள் கூட்டங்கள் நடத்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்தருணம் மாலை வேளையில் சமுத்திரக் கரையைச் சுற்றிக் கொண்டிருந்த நேரத்தில் தண்ணீரின் ஆழத்தில் கண்களைக் கவரவல்ல, பஞ்சவர்ணக் கிளிஞ்சில்கள் பல கிடந்ததைக் கண்டு தண்ணீரில் இறங்கி அவைகள் பலவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டேன். என் மனதிலுள்ள சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

இவைகளைச் சென்னைக்குக் கொண்டுபோய் கண்ணாடி அலமாரியில் வைத்து பலருக்குக் காட்டவேண்டும் என்னும் பெருமை என் உள்ளத்தில் உலவினது. அவைகளைக் கொண்டு வந்து என் தலைமாட்டிலுள்ள ஜன்னலில் வைத்துவிட்டுத் தூங்கிவிட்டேன். தூங்கும் முன்னும் எழுந்த பின்னும் அக் கிளிஞ்சில்களின் அழகு என் உள்ளத்தில் நிரம்பி இருந்தது. காலையில் அதை எடுத்துப் பார்த்தேன், என் உள்ளம் உடைந்தது.

அக்கிளிஞ்சில்கள் கருமை நிறத்தை அடைந்ததுமல்லாமல், அதிலிருந்து ஒருவகையான நாற்றமும் வீசினது. அதை நண்பர் ஐசக் அவர்களுக்குச் சொன்னேன். அவர்கள் புன்னகையுடன், 'ஐயா, நீங்கள் மட்டுமல்ல, என் வீட்டிற்கு வந்த பலரது மனதை இக்கிளிஞ்சில்கள் மயக்கியுள்ளன. இவைகள் உப்புத் தண்ணீருக்குள் இருக்கும் வரையில்தான் அவைகளுக்கு அழகும், ஜோதியும், பெருமையும் உண்டு. உப்புத் தண்ணீரிலிருந்து வெளியிலே வந்துவிட்டால் அவைகளின் நாற்றம் சகிக்கமுடியாது' என்றார். உடனே அக்கிளிஞ்சில்களை ஜன்னல் வழியாக வீசி எறிந்துவிட்டேன்.

நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் வரைதான் நமக்கு அழகும், பெருமையும், மதிப்பும் உள்ளன. அவரைவிட்டு விலகின பின் நாம் படும் வேதனைக்கு அளவே இராது. 'ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதிய சிருஷ்டியாம்.' எபேசியர் நிருபத்தில் கிறிஸ்துவுக்குள் என்னும் பதம் சுமார் இருபத்து இரண்டு இடங்களில் வருகின்றன. கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவர்கள் திருச்சபைத் தூண்களாக மாறியுள்ளதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

விளக்கின் எண்ணெய் திரிக்குள்ளும், திரி எண்ணெய்க் குள்ளும் இருந்தால்தான் விளக்கு பிரகாசமாக எரியும். அது போல் நாம் பகவானுக்குள்ளும் பகவான் நமக்குள்ளும் இருக்கக்கூடிய பதவிக்கு நாம் வந்தால்தான் பிரகாசமுள்ள வர்களாக இருப்போம்.

**'செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்ற வனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்'**

*(பிரசங்கி 10:1)*

**'என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப் பேன் . . . என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது'**

*(யோவான் 15:4a,5b)*

# 48

# செல்லக்குட்டி!

ஒருநாள் காலை இரங்கூனில் என் வேலை நிலையத்திற்குப் போகும் தருணம். கோழி முட்டை ஒன்றின்மேல் எறும்புகள் பல ஊர்ந்துகொண்டிருந்ததைப் பார்த்து அந்த முட்டையை எடுத்து ஜன்னல் வழியாக வெளியே எறிந்துவிட்டேன்.

அடுத்த நிமிடமே அப்பக்கமாகச் சென்ற தருணம் கோழிக் குஞ்சின் சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தபோது நான் எறிந்த முட்டை உடைந்து அதில் இருந்து ஒரு கோழிக் குஞ்சு வெளியே வந்திருந்ததைப் பார்த்தேன். குப்பையில் கிடந்த அதை எடுத்து அதின்மேல் ஊர்ந்துகொண்டிருந்த எறும்புகளை ஊதிவிட்டு அந்தக் கோழிக் குஞ்சை என் மனைவி யிடம் கொடுத்தேன். அது வளர்ந்த பின் என் மடியிலும், என் மனைவியார் மடியிலும் உட்கார்ந்து இரை தின்னும். சாப்பாட்டு மேஜையில் நின்று சாதங்களைப் பொறுக்கித் தின்னும். வேலையில் இருந்து வீட்டுக்குள் வரும் தருணம் அக் கோழிக் குஞ்சைத் தூக்கிக் கொஞ்சிக்கொண்டுதான் படியில் ஏறி வருவேன்.

எங்கள் வீட்டில் கோழிகள் பல இருந்தாலும் இது ஒன்று தான் செல்லக் கோழியாக வளர்ந்து வந்தது. அதற்குச் 'செல்லக்குட்டி' என்று பெயர். நான் மாத்திரம் அந்தக் கோழிக் குஞ்சை எடுத்திராவிடில் காக்கா அதைத் தூக்கிக் கொண்டுபோய்த் தின்றிருக்கும். குப்பையிலே இருந்த கோழிக் குஞ்சு மெத்தையிலே வளர்ந்தது.

இதே முறையில்தான் ஒன்றுக்கும் உதவாத சாதாரண மக்களை இறைவன் எடுத்து உபயோகப்படுத்தி வருகின்றான். குயவன் தன் கையில் உள்ள களிமண்ணை கனத்துக்குரிய பாத்திரமாக வனைந்து வருவதுபோல் அவர் கையில் உள்ள நம்மையும் உருவாக்கி வருகின்றார்.

'நான் அவர் அருகே செல்லப் பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமூகத்தில் களிகூர்ந்தேன்' *(நீதிமொழிகள் 8:30)*

'அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும் . . . கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும் . . . ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்'

*(1 கொரிந்தியர் 15:42b,43,44a)*

# 49

# பண்ணைவிளையும் பணப் பையும்

காலஞ்சென்ற அருள்திரு. தாமஸ் வாக்கர் என்னும் பெரியார், அருள்திரு. ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்கள், கார் மைக்கல் காருண்ய அம்மையார் முதலிய தொண்டர்களது அரிய சேவையை ருசி பார்த்த புண்ணிய பூமியாகும், பண்ணைவிளை. இக்கிராமத்திற்கு எழுப்புதல் கூட்டம் நடத்த நான் சென்றிருந்த தருணத்தில் எனது பல்லாண்டு நண்பரான பால் எட்வர்ட் தேவதாசன் என்னும் பெரியார், அங்கு குருவாகப் பணியாற்றி வந்ததைக் கண்டு களித்தேன். அவர் எனக்குச் சொன்ன ஒரு புனித அற்புதத்தை எடுத்துரைப்பேன்.

அங்கிருந்த ஒரு கிறிஸ்தவர் தனது நண்பரிடமிருந்து எண்பது ரூபாய்கள் கைமாற்றாக வாங்கியிருந்தார். மூன்று மாதங்களுக்குப் பின்பு அவ்விருவரது சாகுபடி கணக்குகளைச் சரிபார்த்து முடிவு கட்டின சமயத்தில் இத்தொகை கணக்கில் சேர்க்கப்பட்டு அக் கடன் தீர்ந்துவிட்டது.

மாதங்கள் பல சென்றபின் 'நான் ரொக்கமாக பணம் கொடுத்தேனே, அவர் ரொக்கமாகத் திரும்ப அதைக் கொடுக்கவில்லையே' என்று நினைத்தார்போலும். ஆகையால் 80 ரூபாய் ரொக்கமாகக் கொடுத்தவர் வாங்கினவரிடம் சென்று அக்கடன் தொகையை திரும்பக் கேட்டார். சாகுபடி கணக்குகளை பட்டுவாடா செய்த தருணம் அப்பணம் திரும்ப அவருக்கு வந்து சேர்ந்துவிட்டதாக அவர் சொல்லியும், அவர் விளக்கியும் இவர் அதைப் புரிந்துகொள்ளாத தன்மையால் இவ்விருவருக்குள்ளும் இருவர் குடும்பத்தாருக்குள்ளும் பகையும் சமாதானக் குறைவும் பல மாதங்களாக விஷத்தைப்போல் வளர்ந்து வந்தன.

கடனை வாங்கின நண்பர் மற்றவரை அருள்திரு. ஈசாக்கு ஆபிரகாம் என்ற குருத்துவரது சமாதி என்னும் கல்லறைக்கு அழைத்துச் சென்று அதன் நடுவில் 80 ரூபாய்கள்

கொண்ட பணப் பையை வைத்துவிட்டு 'உமக்கு தைரியம் இருந்தால் இதை எடுத்துக்கொண்டு போகலாம்' என்று சொல்லிவிட்டார். மற்ற நண்பரும் பணப் பையை எடுக்கத் தைரியமற்றவராய் அவர் பின் சென்றுவிட்டார்.

இச்செய்தி அக்கிராமத்தில் பரவவே அநேகர் வந்து அப் பையைப் பார்த்துவிட்டுச் சென்றனர். ஒரு பகல் ஒரு இரவு முழுவதும் அந்தப் பை அங்கேயே இருந்தது. திருடர்கள்கூட நள்ளிரவில் அச்சமாதியின்மேல் ஏறி அப்பையை எடுத்துச் செல்லத் துணிந்தார் இல்லை. பிறகு அச்சபையின் குருத்துவர் இவ்விருவரையும் அங்கு அழைத்துச் சென்று ஜெபம் செய்த பின் அப் பையை எடுத்து அதை வைத்தவர் கையில் கொடுத்து விஷயங்களை விளக்கினபின் அவ்விருவரும் கைகுலுக்கி நண்பராயினர். பின்பு அங்கேயே முழங்காலில் நின்று இறைவனின் மன்னிப்பைப்பெற்று ஏகினர்களாம்.

**'பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்'**

***(நீதிமொழிகள் 12:22)***

**'சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலும் இருங்கள்'** ***(யாக்கோபு 3:14)***

# 50

# பழுது அல்ல, புதிது!

ஒரு குருவானவர் பல்லாண்டுகளாக ஒரு சிறந்த பேனுவை உபயோகப்படுத்தினபின் பலவிதத்திலும், அவருக்குத் திருப்தியைக் கொடுத்து வந்த அப்பேனு கெட்டுப்போய்விட்டது. அதன் பேரிலுள்ள பாசத்தினுல் அதை எவரிடமும் பழுது பார்க்கக் கொடுக்காமல் அதைச் செய்தவர்களிடமே கொண்டுபோக வேண்டுமென்று வைத்திருந்தார். சந்தர்ப்பம் வாய்த்தபோது அப்பேனுக் கம்பெனிக்குச் சென்று அதன் உபயோகத்தைச் சொல்லி அதைப் பழுதுபார்த்துத் தருமாறு பணிவுடன் கேட்டார். அவர்களோ அப்பேனுவைத் திறந்து பார்த்து அருகிலுள்ள அழுக்குக் கூடையில் அதைப் போட்டு விட்டார்கள்!

இக்காரியம் குருவுக்கு விளங்கவேயில்லே. உள்ளத்திலுள்ள வருத்தத்தைக் காட்டாமல், அச்செய்கையின் காரணத்தைப் பண்புடன் வினவினுர். அதற்கு அவர்கள்: 'ஐயா, எங்கள் பேனுவை வெகுகாலமாக உபயோகித்தவர்களேத் திருப்தி செய்ய அதைப் பழுதுபார்க்காமல் புதிய முறையில் செய்யப் பட்டுள்ள பேனு ஒன்றை அவர்களுக்கு இனுமாகக் கொடுப்பது எங்கள் வழக்கம்' என்றியம்பி ஒரு நல்ல பேனுவை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். குருத்துவரோ பழைய பேனுவைவிட இது சிறந்த முறையில் இருப்பதைக் கண்டு உள்ளம் பூரித்தார்.

அவ்வாறே கெட்டுப்போன பழைய இருதயங்களேப் பழுது பார்க்கிற பட்டறை ஆண்டவரிடம் இல்லே. இருதயத்தை உண்டுபண்ணினவரிடத்தில் கெட்டுப்போன நம் இருதயங்களேக் கொண்டுபோனுல் அவர் புது இருதயம் தருவார்.

**'ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்,**
*(பிரசங்கி 8:5)*

**'இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்ருர்'**
*(வெளிப்படுத்தின விசேஷம் 21:5)*

## 51

# திவான் கட்டிய மாளிகை!

ஜமீன் பதவியிலுள்ள சிற்றரசர் ஒருவர், தம் தேக சுகத்தின் நிமித்தமாக ஆங்கில நாட்டிற்குப் புறப்பட்டார். போகுமுன் தம் திவானை அழைத்துப் பின்வருமாறு கட்டளை கொடுத்தார்.

'திவான் அவர்களே, என் சுகத்தைப் பேணிக்கொள்ள நான் ஆங்கில நாட்டுக்குப் போகிறேன். அங்கிருந்து ஆறு மாதத்திற்குள் நான் வருமுன் தென்பாகத்திலுள்ள தென்னந் தோப்பில் ஒரு சிறிய புதிய அரண்மனை ஒன்றைக் கட்டி முடித்துவிடுங்கள். அதற்குச் செலவாகும் முப்பதினுயிரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். நான் வந்தபின் நானும், ராணியும், பிள்ளைகளும் அப்புதிய அரண்மனையில் குடியேறி இனிமையாக வாழவேண்டும்' என்று சொல்லி—

அந்த அரண்மனையின் கட்டிட அமைப்பு ஒழுங்கைச் சித்திர முறையில் வரைந்த வரைபடம் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.

திவான் ஊக்கத்துடன் அப்பணியில் ஈடுபட்டார். பிரயாசங்கள் பலவற்றைப் பொறுமையாகச் சகித்து, அந்த அரண்மனையைத் துரிதமாகக் கட்டி முடித்துவிட்டார். அரண்மனையின் அழகும், நிறமும் பார்ப்போர் கண்களைப் பறிக்கத்தக்கதாக அமைந்திருந்தன.

ஆறு மாதங்களுக்குப்பின் அரசன் திரும்பி வந்தவுடன் அரண்மனையைப் பார்த்து வியந்தார். அதற்குக் கிரகப் பிரவேசத்திற்கு ஒழுங்கு செய்ய திவான் அரசரிடம் கேட்டார். அதற்கு அரசர்:

'திவான் அவர்களே! நாளை மாலை உமது மனைவியை அழைத்துக்கொண்டு இங்கே வாரும். நானும் அரசியுடன் வந்து சேருகிறேன். அவர்கள் இருவரும் கூடி ஒழுங்கு செய்யட்டும்' என்றார்.

அவ்விதமே மறுநாள் மாலையில் நால்வரும் கூடினர். உடனே அரசி அவர்களைப் பார்த்து: 'திவான் அவர்களே! பல்லாண்டு களாக எங்கள் சமஸ்தானத்திற்கு நீர் திவானாகப் பணியாற்றி வந்தீர். நீர் ஓய்வு எடுக்கும் காலம் நெருங்கிவிட்டது. எங்கள் சமஸ்தானத்தில் உபகாரச் சம்பளம் கொடுக்கும் முறை இல்லை. எனவே இந்தப் பங்களாவையும், அதைச் சுற்றியுள்ள தோட்டத்தையும் உங்களுக்கு இனாமாகக் கொடுக் கிறோம். நாங்கள் இருவரும் கையெழுத்துப்போட்ட பட்டா இதோ இருக்கிறது. இன்றுமுதல் இது உமக்குச் சொந்தம். நீங்கள் குடியேறிப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வாருங்கள். இறைவனது ஆசீர்வாதமும், எங்கள் வாழ்த்துத லும் உங்களுக்கு உள்ளன' என்றியம்பிவிட்டு எழுந்து போய் விட்டனர்.

திவான் அம்மாளது உள்ளத்திலுள்ள உவகைக்கு அள வில்லை. திவான் எழுந்து அறைக்குள் சென்று தலையிலே அடித்துக்கொண்டு அழுதார்.

'கமலா, நான் அசடன்தான்டி! என் கதையைக் கேள்: யானை மண்ணை அள்ளி முதுகில் போட்டுக்கொள்வதைப்போல் நானும் என் பின் வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டேன். அரண்மனையை கட்ட உளுத்துப்போன காட்டு மரத்தைவாங்கி அதை இழைத்து வார்னிஷ் கொடுத்து உத்திரம் போட்டிருக் கிறேன். மண் சுவர்களை வைத்து சுண்ணும்பைப் பூசி, இக் கட்டிடத்தை நிர்மாணித்தேன். தேக்கு மரத்திற்குப் பதிலா கப் பழைய காட்டு மரங்களைக்கொண்டு ஜன்னல் கதவுகளையும் நாட்டியிருக்கிறேன். இக்கட்டிடத்தை மினுக்குவது வெந்த செங்கல் சுவருமல்ல; புதிய மலையாளத் தேக்கு மரமுமல்ல. கோபால் வார்னிசும், பிரான்ஸ் நாட்டின் வர்ணமும், ஜெர்மன் தேசத்துக் கண்ணாடிகளுமே. பொய்க் கணக்கு எழுதி ஐயாயிரம் ரூபாய்க்குமேலேயே அழுத்திவிட்டேன். நான் அசடன்தான். இந்தப் பங்களா எனக்கென்று அறிந் திருப்பேனாகில், எவ்வளவு உறுதியாகக் கட்டியிருப்பேன். அதற்கு அதிகத் தொகை செலவாயிருந்தாலும் அதை அரசர் மகிழ்ச்சியோடு கொடுத்திருப்பாரே. இந்தக் கட்டிடம் இரண்டு மழைக்கு நிற்காதே!' என்று தன் நாணயக் குறைவை நினைத்துப் புலம்பினார்.



75610

நண்பரே! இவ்வுலகத்தில் நமது வாழ்க்கை என்னும் கட்டிடத்தை எப்படிக் கட்டிவருகிறோம்? நாம் எதை விதைக்கின்றோமோ அதையே அறுப்போம். 'மனம்போல்தான் மாங்கல்யம்' என்பது நம் நாட்டுச் சொல். நம் வாழ்க்கையைச் சண்டை, சச்சரவு, பகை, பொய், திருட்டு, மாசு முதலிய சரக்கைக்கொண்டு கட்டி வருகிறோமா? அல்லது நீதி, பொறுமை, சாந்தம், அடக்கம் முதலிய இலட்சணங்கள் கொண்டு முக மலர்ச்சியுடன் கட்டிவருகிறோமா? நமது வாழ்க்கைக்கும், நமது உயர்வு தாழ்வுக்கும் நாமே காரணமாவோம் தேவனுடைய இராஜ்யம் வெளியிலே அல்ல, நம் உள்ளத்தில் தான் இருக்கிறது.

'ஆமான் . . . ஆயத்தம்பண்ணின தூக்குமரத்தில் ஆமானையே தூக்கிப்போட்டார்கள்' *(எஸ்தர் 7:10)*

'பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்' *(மத்தேயு 18:18)*

'நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்' *(எபேசியர் 2:22)*

52

# கிறிஸ்து இல்லாத ஆலயம்!

தென் ஆப்பிரிக்காவில் டிரான்ஸ்வால் (Transwal) என்னும் நகரிலுள்ள கத்தீட்ரல் ஆலயத்தில் தீனபந்து என்னும் கீர்த்தி பெற்ற மறைத்திரு. சார்லி அந்திரேயா என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் செய்யப்போகும் பிரசங் கத்தைக் கேட்க, காந்தியவர்கள் தம் நண்பருடன் அவ்வாலயத்தில் வீற்றிருந்தார்.

ஆலயத்தின் பாதுகாப்பாளர் காந்தியடிகளை அணுகி:

'ஐயா, ஆசியாக் கண்டத்து வாசிகள் ஆராதனைக்கு வரும் ஆலயம் இதுவல்ல. அவர்கள் ஆங்கிலேயருடன் உட்கார்ந்து ஆராதிக்கும் வழக்கமும் இங்கு இல்லை. அவர்களுக்கென தனி ஆலயம் உள்ளது. ஆகையால் தயவுசெய்து மரியாதை யாக வெளியே போய்விடுங்கள். ஆசியா வாசிகளுக்கு இங்கு இடமில்லை' என்றான்.

அதற்குக் காந்தியடிகள் தம் நண்பனைப் பார்த்து:

'நண்பரே, இவர் சொல்வது புதிராக இருக்கிறது. கிறிஸ்துநாதர் இந்த ஆலயத்தில் இல்லையாம். எனவே நமக்கு இங்கு என்ன வேலை, வாரும் போகலாம்' என்றார்.

உடனே அவ்வாலய பாதுகாப்போன் சற்று சினந்து:

'இந்த ஆலயத்தில் கிறிஸ்து இல்லை யென்பது நீர் சொல்லி இப்பரிசுத்தக் கட்டடத்தைக் கேவலப்படுத்தலாமா? இது கத்தீட்ரல் ஆலயம் என்பது உமக்குத் தெரியாதா?' என்றான்.

உடனே காந்தியடிகள் புன்னகையுடன் அவனைப் பார்த்து:

'நண்பரே, சற்றுமுன் நீர் என்ன சொன்னீர்? இவ் வாலயத்தில் ஆசியா வாசிகளுக்கு இடமில்லை என்று சொன்னீரே; இயேசுகிறிஸ்து ஆசியாக் கண்டத்தில் பிறந் தவர். ஆகையால் அவர் ஆசியா வாசிதானே. அவர்

ஆங்கில நாட்டை அறிந்தவர் அல்லவே. எனவே இக் கோவிலில் இயேசுநாதர் இல்லையென்பதை நீர் சொன்னதைத் தான் நானும் சொன்னேன்' என்று முக மலர்ச்சியுடன் சொல்லிவிட்டு நண்பருடன் எழுந்து போய்விட்டார்!

'பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே; அவர்களோடே இருக்கவும் விரும்பாதே' *(நீதிமொழிகள் 24:1)*

'யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை'
*(ரோமர் 10:12)*

53

# ஒரு மனம், இரு குணங்கள்!

பல்லாண்டுகளுக்குமுன் ஒரு விளக்கு வாங்குவதற்காக சென்னையிலிருக்கும் விளக்கு மாளிகைக்குச் சென்றிருந்தேன். நான் நின்ற அறையில் மூன்று அடி தூரத்தில் சுவரில் மாட்டியிருந்த ஒரு கண்ணாடி விளக்குக் கீழே விழுந்து உடைந்துவிட்டது. நான் அந்தத் துண்டுகளைப் பார்க்கப் போனேன். உடனே அங்கு வியாபாரம் பண்ண நிற்கும் ஒருவன் ஓடிவந்து 'ஐயா, இங்கே நீங்கள் நிற்காதீர்கள். இந்தக் கடை முதலாளி பெரிய கோபி. நீங்கள்தான் தள்ளி விட்டீர்கள் என்று உங்களை அடித்து ரூ. 50 பறித்துத் துரத்திவிடுவான்; உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடிவிடுங்கள்' என்றான். நான் பயத்துடன் வெளியே வந்து விட்டேன். அதே வியாபாரிப் பையன் தான் அந்த விளக்கைத் தள்ளி உடைத்துவிட்டதாகச் சொல்லி, எனக்கு அடியையும் அவமானத்தையும் வாங்கிக் கொடுத்திருக்கக்கூடுமல்லவா?

* * *

இரங்கூன் கப்பலடி மரத்தினால் கட்டப்பட்டிருக்கும். பல்லாண்டுகளுக்குமுன் சென்னைக்குக் கப்பல் ஏறுவதற்கு வெயில் நேரத்தில் என் இரு கரங்களிலும், தோள்களிலும் சாமான்களை வைத்துக்கொண்டு கப்பலுக்கு நடந்துவந்த தருணம் சுமார் ஐந்து வயதுள்ள எனது அருமை மகளை என் வேஷ்டியைப் பிடித்துக்கொண்டு நடந்து வரச் சொன்னேன். அவள் வரும்பொழுது, 'அப்பா, கால் சுடுகிறது; அப்பா, கால் சுடுகிறது' என்று பரிதாபமாகச் சொல்லிக்கொண்டே வந்தாள். 'சிறிது தூரம்தான், வா' என்று சொன்னேன். என் பின்னால் வந்தவர் அவளைத் தூக்கிக்கொண்டு என் பின்னாலேயே வந்து நாங்கள் கப்பலில் தங்குமிடத்தில் விட்டார். என் மனமுவந்த நன்றியை அவருக்கு அளித்தேன். மறுநாள் நாங்கள் நடு சமுத்திரத்தில் இருக்கும்பொழுது கப்பலின் மேல் தட்டில் அவரைப் பார்த்தேன். 'அடடா, அவர் ஒரு நாட்டுக் கோட்டைச்

செட்டி முதலாளி' என்று அறிந்து அவர் தாழ்மையைப் போற்றிப் பாராட்டினேன். அதே முதலாளி கப்பலடியில் என்னைப் பார்த்து, 'ஐயா, உனக்கு புத்தி இல்லையா? அந்தப் பிள்ளையை வெயிலில் நடக்கவைக்கலாமா? உனக்குச் சாமான்கள் பெரிதா? பிள்ளை பெரிதா? என்று முரட்டுத் தனமாகப் பலவாறு ஏசியிருக்கலாமல்லவா?'

* * *

நான் இரங்கூனில் இருந்த காலத்தில் நேரிட்ட கலகத்தில் பர்மாக்காரர்கள் இந்தியர்களைக் கண்ட இடங்களிலெல்லாம் வாழை மரத்தை வெட்டுவதுபோல் வெட்டிக் கொலை செய்து வந்தார்கள். நாங்கள் இரங்கூனுக்கு வெளியில் ஒரு தோட்டத்தில் தனி வீட்டில் குடியிருந்தபடியால் எங்கள் உயிருக்கும் ஆபத்துதான். பன்னிரண்டு வயதுள்ள எங்கள் ஒரே மகன் பத்து மைல் தூரத்திலுள்ள இன்சேன் என்னும் ஊரில் அகப்பட்டுக்கொண்டான். அவனைப்பற்றி எங்களுக்குச் சொல்லமுடியாத கவலையுண்டு. ஒற்றைக் குதிரை பூட்டிய பீட்டன் என்னும் வண்டியில் வந்த ஐரோப்பியர்கள் இருவர் அவனைக் காலின்கீழ் முழங்காலிட்டுப் படுக்கச் சொல்லி அவனைக் கம்பிளியினால் மூடி, வண்டியை வேகமாக ஓட்டிக் கொண்டு வந்து என் வீட்டில் விட்டுச் சென்றார்கள். அவ் வழியில் வரும் இந்தியர்களைக் கொல்லக் காத்திருந்த பர்மாக் காரர்கள் அவனை ஒரு புல் மூட்டை என்று நினைத்திருக் கலாம்.

அதே துரைகள் என் மகனை அந்த ஊரில் பார்த்தவுடன், 'இந்த இந்தியா தேசத்துப் பையன் ஏன் முட்டாள்தனமாக நிற்கிறான்? அவன் வெட்டப்பட்டுச் சாகட்டும்' என்று நினைத்திருந்தால் அவனை அங்கேயே விட்டுவிட்டு வந்திருக் கலாமே!

நண்பர்களே! இவ்விரு குணங்களில் எந்தக் குணம் நம்மைப் பற்றியுள்ளது?

'உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற் குணம் உத்தமமாயிருக்கிறது' (ரூத். 3:10)

'இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்' (லூக்கா 7:9)

## 54

# 'அதோ பார் இராவணன் கோட்டை'

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் என் அருமைத் தாயார் எங்களுக்குச் சொன்ன ஒரு காரியம்.

அக்காலத்தில் இராமேஸ்வரத்திற்குச் சென்ற பக்தர்களை அக்கோவிலின் குரு சமுத்திரக் கரைக்கு அழைத்துச் சென்று 'அதோ தெரிகிற இராவணன் கோட்டையைப் பாருங்கள்' என்று சொல்லுவாராம். அவர்கள் ஆர்வத்துடன் உற்றுப் பார்த்தும், ஒன்றும் தெரியாததால், 'மேகத்தைத்தவிர வேறொன்றும் காணவில்லையே' என்பார்கள். உடனே கோயில் குரு, 'பாவம் பண்ணினவர்களின் கண்களுக்கு ஒன்றும் தெரியாது; புண்ணிய ஆத்துமாக்கள் மட்டும்தான் அதைக் காணக்கூடும்' என்பார். உடனே அவர்கள் மதி மயங்கி தங்களைப் பாவிகள் என்று மற்றவர்கள் நினைத்துவிடக் கூடாதே என்று விரும்பி, 'ஆமாம், அதோ ஒரு கோபுரம் போல் ஒன்று தெரிகிறது. கோபுரத்தின் உச்சியில் ஒரு கலசம் தெரிகிறது' என்று சொல்லுவார்களாம்.

அத்தனையும் பொய் என்பது தெளிவு. மாய்மாலமும் கபடமுமேயன்றி உண்மையல்ல.

### இராப்போஜனம்

நமது சமுதாயத்தை ஆராய்ந்து பார்த்தால், வெளி வேஷமான பக்தியும், ஜெபமும், பாட்டும், பிரசங்கமும் வளர்ந்து வருவதைக் காண்கிறோமல்லவா?

யூதாஸ்காரியோத்தின் முத்தம் பொய் முத்தம்தானே? ஆண்டவரை அடித்து அவர் முன் வணங்கி நின்றதும் பொய் வணக்கந்தானே!

கடுங்கோபத்தையும் பகையையும் பெருமையையும் மனதில் வைத்துக்கொண்டு அன்பின் விருந்தாகிய, திரு விருந்தில் பங்கு பெறுவது பொய் பக்திதானே! சிவகாசியில்

ஓர் இரகசிய கிறிஸ்தவ மாது 'ஆண்டவருடைய மாம்சத்தையும், இரத்தத்தையும் வாங்குகிற வாய், பொய் சொல்லலாமா?' என்கிறார்கள்.

ஏழு அருவருப்புகளில் ஒன்று பொய் நாவு. அபத்தமான பொய் சாட்சி சொல்லும் வாயும், பொல்லாங்கான விஷயங்களைப் பேசும் நாவும், வெறுப்புடன் மற்றவர்களைச் சபிக்கும் வாயும் இராப்போஜனம் வாங்கத் தகுதியுடையவையாகா. அப்படிப்பட்டவர்கள் ஆக்கினைத் தீர்ப்பை அடையாமலிருப்பதற்காக இராப்போஜனம் சேராமலிருப்பது நலம் (1 கொ. 11:29). இராப்போஜனம் பிள்ளையார் கோவிலில் சுண்டல் வாங்குவதையும், அனுமார் கோவிலில் தேங்காய்த் துண்டு வாங்குவதையும் ஒத்ததல்ல. இராப்போஜனம் பரலோகப் பிரசாதமாகும். உன் பேரில் மற்றவர்களுக்குக் குறை உண்டென்று நீ அறிந்தால் அவர்களுடன் சமாதானம் ஆகும் வரையில், கோயிலுக்குப் போவதையும், காணிக்கை படைப்பதையும் நிறுத்தி வைப்பது நல்லது.

உடனே மனந்திரும்பு, தேவ எச்சரிப்பை அசட்டை செய்யாதே.

'கர்த்தர் ஒருவரே உயர்ந்திருப்பார், விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம்' (ஏசாயா 2:17,18)

'உன் சரீர முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்' (மத்தேயு 5:29)

# 55

# திட்டம் மாறியது!

ஆங்கில நாட்டின் ஏழாவது எட்வர்ட் மன்னன் வேல்சு இளவரசனுக இருந்த தருணம் இந்தியாவுக்கு வந்த சமயத்தில் அவருடைய வேலைக்காக ஒரு பெரிய திட்டத்தை இராஜப் பிரதிநிதியாக இருந்த வைசிராய் என்னும் பிரபு தயாரித்து அதை ஆங்கில நாட்டின் பிரதம மந்திரிக்கு அனுப்பியிருந்தார். இராணியின் உத்தரவைப் பெறுவதற்காக அத்திட்டத்தை அவர் இராணிக்குக் காட்டினுர். அத்திட்டத்தில் ஞாயிறு நாட்களில் அரசாங்க வேலையும், காட்டிற்கு வேட்டையாடப் போவதையும், பேட்டி காண்பதையும் அதில் குறித்து வைத்திருப்பதைக் கண்டு வியந்து தன் பேனுவினுல் அவைகளை அடித்துவிட்டு, இளவரசன் இந்தியாவில் இருக்கும் தருணத்தில் ஞாயிறு நாட்களில் காலை மாலை தேவாலய ஆராதனைக்குமட்டும் போவதைத்தவிர வேறு ஒரு வேலையும் செய்வதைத் தான் ஆமோதிக்கவில்லையென்று மந்திரியிடம் சொன்னுர்.

அதன் காரணத்தால் திட்டம் முழுவதும் மாற்றப்பட்டு, ஞாயிறு தினங்களில் காலை மாலை ஆலய ஆராதனைகள் மட்டும் ஒழுங்கு செய்யப்பட்டன.

இவ்வாறு வைராக்கியமான வைதீக ஆர்வம் இக்காலத்தில் குறைந்து வருவது பரிதாபமே. நாம் முன் எச்சரிப்புடன் நடந்துகொள்வோம். இதுவும் பெரிய மிஷனெரி ஊழியம் தானே!

'ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்கள்'

(யாத்திராகமம் 16:30)

'ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்' (லூக்கா 23:56)

# 56

# ஆக்கை தூணான விதம்

மகா அலெக்சாண்டர் ஒரு காலத்தில் தன் சிறிய பரிவாரத்துடன் ஒரு சிறு வாய்க்காலைக் கடக்கவேண்டியிருந்தது. அங்கு பாலம் இல்லை. மூன்று சிப்பாய்களை ஒரு பக்கத்திலும், அவர்களுக்கு நேராக மூன்று சிப்பாய்களை வாய்க்காலுக்குள் நிற்கச் சொல்லி அவர்கள் தோளில் மூன்று மரங்களை வைத்துப் பிடித்துக்கொள்ளச் சொல்லி அதன்மேல் பலகையைப் போட்டு அந்தக் குளிர் காலத்தில் அவன் குதிரைகளும், அவன் சிறு சேனையும் அம்பாலத்தின்மேல் ஏறிக் கடந்து சென்றன.

அலெக்சாண்டர் மறு கரைக்குச் சென்றதும் தன் நன்றியைத் தெரிவிக்க அந்த ஆறு சிப்பாய்களையும் அழைத்து வரச்சொன்னான். என்ன பரிதாபம், அந்த ஆறுபேரும் பனியில் மூடி இறந்துபோய் அவர்கள் சரீரம் விரைத்துப் போய் மரங்களை ஒக்க நின்றன. அந்த ஆறு பிணங்களையும் அலெக்சாண்டர் பார்த்து கண்ணீருடன் அவர்களது வீரியத்தையும், தேசாபிமானத்தையும், ராஜ பக்தியையும், சுயவெறுப்பையும் வியந்து பாராட்டினான்.

நண்பரே, தேவ ஊழியத்திற்கும் இவ்வாறான ஊக்கம் வேண்டுமென்பதை நான் சொல்லவேண்டிய அவசியமில்லை.

**'விசுவாசிக்கிறவன் பதறான்'** *(ஏசாயா 28:16)*

**'அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்'**
*(1 கொரிந்தியர் 13:7)*

57

# துரும்பு தூணான விதம்

மலையாளத்தில் ஒரு காட்டில் உள்ள மரங்களை ஏலத்துக்கு ஒரு விறகு வியாபாரி எடுத்து அவைகளை வெட்டி தன் கடையில் போட்டிருந்தான். ஒரு கிறிஸ்தவ தச்சன் விறகு வாங்கப்போன தருணத்தில் அங்கிருந்த ஒரு மரத்தை விலைக்குக் கேட்டான். அதற்கு வியாபாரி 'சற்றுப் பொறுத்திருங்கள், கோடாலிக்காரன் வந்தவுடன் அம்மரத்தை விறகாகப் பிளந்து கொடுக்கிறேன்' என்றான்.

அதற்கு அத்தச்சன் காத்திருக்க நேரம் இல்லை என்று சொல்லி வியாபாரி கேட்ட 50 ரூபாய்களைக் கொடுத்துவிட்டு அம்மரத்தை வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டான்.

அது ஒரு ரோஸ் மரம் (Rose Wood). அதன் விலை சுமார் 300 ரூபாய் இருக்கும். அதன் அருமை விறகு வியாபாரிக்குத் தெரியவில்லை. அத்தருணத்தில் கிறிஸ்தவர்கள் அங்கே ஒரு கோவில் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

தச்சன் அம்மரத்தைப் பலகைகளாக அறுத்து மூலஸ்தானம் என்னும் ஆல்டர் (altar) மேஜையும், அதன்மேல் ஓர் அழகிய சிலுவையும், பிஷப் உட்கார நாற்காலியும், வேதம் படிக்கும் மேஜையும், ராப்போஜனம் வாங்கும் கிராதியும் அந்த ரோஸ் பலகை மரத்தால் அழகாகச் செய்துவிட்டான். கோயில் அழகைவிட இப்பண்டங்களின் அழகுதான் கண்டோர் கண்ணையும் கருத்தையும் மலர வைத்தன.

வெந்நீர் அடுப்பில் வைத்து சில நிமிடங்களில் சாம்பலாகக் கூடிய அம்மரம் யுகாயுகமாக ஓர் ஆலயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நிலைமைக்கு வந்துள்ளது. குப்பையில் கிடந்த நம்மை இறைவன் தூக்கித் துடைத்துக் கழுவிச்

சுத்திகரித்து ராஜாக்களுக்கும் பிரபுக்களுக்கும் மத்தியில் விளங்க வைக்கிறார் அல்லவா? புழுதியில் கிடந்த ஓர் ஆணி ஒரு கடிகாரத்தை ஓட்டவல்ல ஸ்பிரிங்காக மாறுவதுபோல் நம்மை அவர் மாற்றவல்லவர்.

'அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்' *(ஏசாயா 28:16)*

'ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று' *(மத்தேயு 21:42)*

'நீங்களோ . . . தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் . . . இருக்கிறீர்கள்' *(1 பேதுரு 2:9)*

## 58

# பண்டிதை இராமாபாய்

**வ**ட இந்தியாவில் இராமாபாய் *(1858—1922)* என்னும் பெயரையுடைய ஒரு பிராமண மாது வாலிபப் பிராயத்திலேயே சமஸ்கிருதமென்னும் வடமொழியிலும் ஆதி நான்கு வேதங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தாள். கல்கத்தா புரோகிதர்கள் அவளுக்கு சரஸ்வதி, பண்டிதை என்னும் பட்டப் பெயர்களை அளித்தனர். அம்மாது விவாகஞ்செய்து முதல் குழந்தை பிறந்தவுடன் அந்தோ கணவனை இழந்தனள். அதன் பின்பு அவள் இங்கிலாந்து சென்று, அங்கு மாதர் முன்னேற்ற முறைகளைக் கற்றுணரச் சுற்றுப் பிரயாணம் செய்தாள்.

மதாபிமானத்தால் இலண்டனிலும் இராமர் கோவிலொன்றைக் கட்ட யத்தனித்திருந்த காலை, பாரதநாட்டிலில்லாத முறையில் இலண்டன் மக்கள் விதவைகளை மரியாதையாக நடத்துவதைக் கண்டாள். அன்றியும் அங்கிருந்த காலத்தில் இயேசு பெருமானின் வாழ்க்கையும் போதனையும் அவளை அதிகமாய்க் கவர்ந்ததின் பயனாக 1883ம் ஆண்டில் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். தம் குழந்தை மனோரமாவோடு தாமும் ஞானஸ்நானம் பெற்றனர். அதன்பின் இந்தியாவிலுள்ள இலட்சக் கணக்கான விதவைகளுக்கு அருமையான அரவணைப்பாகவும், அன்பு நிழலாகவும் விளங்கினர்.

இம்மாது எபிரேய பாஷையைக் கற்று பைபிளில் உள்ள பழைய ஏற்பாட்டை தம் சுயபாஷையான மராட்டிய மொழியில் மொழிபெயர்த்தனர். கிரேக்க பாஷையையும் படித்து புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்தனர்.

பம்பாய் மாகாணத்திலுள்ள மராட்டிய கிறிஸ்தவர்கள் இப்பொழுதும் இம்மொழிபெயர்ப்பையே போற்றிப் பாது காத்துப் படித்துப் பயனடைந்து வருகின்றனர்.

‘இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் யாவையும் அவைகளில் எழுதக் கடவாய்’ *(உபாகமம் 27:3)*

‘சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்’ *(மீகா 4:2)*

‘வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது?’ *(ரோமர் 4:3)*

59

# வரிவடிவம் இல்லா மொழியில் விவிலியம்

இந்தியாவில் எழுதப் படிக்கக்கூடாத பாஷைகள் பலவற்றில் பாமர மக்கள் மனப்பாடமாகப் பேசிவருகின்றுர்கள். அம்மொழிகளுக்கு எழுத்து இல்லாததால் புத்தகங்களும் இல்லே. வேத அறிவில்லாமல் மக்கள் மாண்டு வருகின்றனர். இதைச் சகியாத மிஷனரிகள் சிலர் ஆங்கில அல்லது ரோம எழுத்துக்களே அப்பாஷைகளில் நுழைத்து அம்மொழியின் ஒலிகளே அவ்வெழுத்துக்களில் அமைத்து அப்பாஷையை எழுதவும் படிக்கவும் கற்பித்தபின் அம்மொழியில் பைபிள் வெளிவந்தன.

'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?'

அந்தமான் தீவில் கார்நிக்கோபார் என்னும் மாகாண வாசிகள் அரைநிர்வாணிகளாகவும், அறிவற்றவர்களாகவும் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் பேசும் பாஷைக்கு எழுத்து மில்லே, புத்தகமுமில்லே. மறைத்திரு. ஜார்ஜ் உவைட் எட் என்னும் மிஷனரித் தொண்டர் அவர்கள் பாஷையை நன்கு பயின்று அதில் ஆங்கிலத்தில் அமைந்த ரோம எழுத்துக்களே நுழைத்து அதை வாசிக்க வல்ல பாஷையாக மாற்றினுர். இதற்காக அவர் பட்டபாடு கொஞ்சமல்ல. அதன் பின்பு அவர்கள் மொழியில் சுவிசேடத்தை வெளியிட்டார். இதனே அடியேன் நன்கு அறிவேன்.

இவ்வாருன முறையில் உலகில் வேறு எந்த ஒரு மத நூலும் வெளியிட்டதாகத் தெரியவில்லே. பைபிள் செல்லாத நாடுகள் இல்லே.

வேதமில்லாத வீடு வேதாளம் வசிக்கும் காடு.

'கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழு தரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது'

*(சங்கீதம் 12:6)*

'வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப் பட்டவர்கள் என்றுர்கள்' *(யோவான் 7:49)*

'உமது வார்த்தையின் உட்பொருள் உண்மையினின்று வழுவாதது' (கத்-பைபிள்) *(சங்கீதம் 119:60)*

# 60

# சங்கீத இங்கிதம்

கி.மு. 200ம் ஆண்டில் சங்கீதங்கள் ஒன்ருய்த் தொகுக்கப் பட்டன. நம் நாட்டில் நான்கு வேதங்கள் (ரிக், யஜுர், சாம, அதர்வ) எழுதப்பட்ட காலத்தில் திருமறையிலுள்ள சங்கீதங்களும் எழுதப்பட்டன. இப்பாடல்கள் எபிரேயரின் பக்தி வாழ்க்கையில் உற்பத்தியாஞலும், யூதக் கிறிஸ்தவ சபைகளின் பொது பக்திக் களஞ்சியமாயின. 'துதிகளின் புத்தகம்' என்று அழைக்கப்பட்ட இந்நூல் பிற்காலத்தில் பற்பல வாத்தியங்களோடு பாடப்பட்டபடியால் 'சங்கீதங்கள்' எனப் பெயர்பெற்றன.

சிறு பிராயத்தில் வீடுகளிலும், ஞாயிறு பள்ளிகளிலும், கல்விச் சாலேகளிலும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்க வேண்டிய பாடங்களில் ஒன்று நம் திருமறையிலுள்ள சிறப்புப் பெற்ற சில சங்கீதங்களாகும்.

கடவுளே நாம் துதித்து அவருக்குத் தோத்திரம் செலுத்தவும் அவர்பேரில் நாட்டமும் நம்பிக்கையும் ஏற்படவும் பயத்துடனும் நடுக்கத்துடனும் அவரைச் சேவித்து மனஸ்தாபத்துடன் அவர் கிருபாசனத்தண்டை கிட்டிச்சேரவும் இப்பாடல்கள் நம்மை ஏவுகின்றன. நாம் சங்கீதத்தை ஒழுங்காய் வாசித்து தியானம் செய்தால் நாளடைவில் நமதுள்ளம் புஷ்பத்தைப்போல மலர்ந்து கமழ வழியுண்டு.

இந்து ஆலய ஆராதனேயில் தேவாரம் பாடுவதுபோல் கிறிஸ்தவ ஆராதனேயில் சங்கீதப் புத்தகத்தின் ஒருசில அதிகாரங்களேப் பாடுவதும் நமது ஆலயங்களில் மாறி மாறி

வாசிப்பதும் பொருத்தமாகத்தானிருக்கின்றது. பூவின் மணத்திற்கு மதிப்பைக் கொடுப்பது பன்னீரின் வாசனை. ஆலய ஆராதனைக்கு அருமையைக் கொடுப்பது சங்கீத வசனங்கள்.

'துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்'
*(சங்கீதம் 18:3)*

'நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக் கடவோம்' *(வெளிப்படுத்தின விசேஷம் 19:7)*

# 61

# சங்கீதத்தில் இயேசு

அடியேன் இந்துவாயிருந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் வினியோகம் செய்யும் கைப்பிரதிகளை ஊக்கத்துடன் வாசித்து வந்த தருணம் கடைசியிலுள்ள இயேசுகிறிஸ்து என்னும் பதங்களைக் கண்டவுடன் கோபத்துடன் கிழித்து எறிந்து விடுவேன். இவ்விரு பதங்களும் என் இளம் உள்ளத்தில் வெறுப்பாகவே நின்றன.

இதனையறிந்த திருமதி பெக்சல் என்னும் ஒரு மாது, இயேசு கிறிஸ்து என்னும் பதங்களே வராத 'சங்கீதம்' என்னும் நூலைக் கொடுத்தார்கள். அதை ஆர்வத்துடன் படித்துவந்தேன். இறைவனைப்பற்றியும்—பக்தி பரவசமான நெறிகளைப்பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. எனவே, (கிறிஸ்தவர்களது நூலாகப் பாவிக்காத வகையில்) சங்கீதமென்னும் நூலைப் படித்துப் பயன்பெற்றேன்.

சங்கீத நூலில் இயேசுகிறிஸ்துவெனும் இரு வார்த்தைகளில்லாவிடினும் பெரும்பாலும் அப்புத்தகம் கிறிஸ்து பெருமானைப்பற்றியே பேசுகின்றது என்று பிற்காலத்தில் தெளிவாக அறிந்துகொண்டேன். நான்கு சுவிசேடங்களைவிட சங்கீத புத்தகத்தில்தான் கிறிஸ்து பெருமானைப்பற்றிய குறிப்புகள் நிறைந்திருக்கின்றன என்று நன்கு கற்றுணர்ந்தேன். சங்கீத நூலிலுள்ள வசனங்களில் நூற்றுப்பதினாறு வசனங்கள் புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

'என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்' எனும் வார்த்தையும், 'என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' எனும் வார்த்தையும் சங்கீதம், சுவிசேடம் என்ற இரு புத்தகங்களிலும் வருகின்றன.

அப்பனது ஜீவபலியான தியாகத்தைத் தீர்க்கதரிசன வாயிலாக பழைய ஏற்பாட்டிலும் அதிலடங்கியுள்ள சங்கீத ஆகமத்திலும் தியானித்து உணர்ந்தேன். பின்பு சங்கீதத்தோடு திருமறை முழுவதும் என் இதய கீதமாயிற்று.

'யார் இந்த மகிமையின் இராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்'
*(சங்கீதம் 24:8)*

'சங்கீதங்களில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது'
*(லூக்கா 24:44)*

# 62

# திருவாசகமும் தாவீதின் சங்கீதமும்

**பா**ர் புகழ் பக்த சிரோமணி மாணிக்கவாசகனென்னும் தேன் மொழி நூலே அடியேன் வாலிபப் பிராயத்திலிருந்தே பார்த்தும், படித்தும், படிக்கக் கேட்டும் வந்ததின் பயனுக அந்நூலின் பாக்கள் சிலவற்றை இந்நாளிலும் மனப்பாட மாகப் பாடவும் சொல்லவும் வல்லவனுயுள்ளேன். சிவனடியா ரான என் அருமைத் தகப்பனுர் திருவாசகக் கவிகளேப் பிரதி தினமும் பாடியும் அந்நூலுக்குப் பூஜை செய்தும் வருவர். அத்தருணம் அவர்கள் அருகில் நின்று அப்பூஜைக்கு உதவி புரிந்து வந்தவன் நான். எனதிள உள்ளமும் திருவாசகத்தி லூறி இருந்தது. இதை 'ஜெபமாலே' என்னலாம்.

திருவாசகம் என்னும் இந்நூல் காவியமல்ல, இறைவனே வணங்கும் வகையில் உள்ளத்தை உருக்க வல்ல பாக்களேக் கொண்டுள்ள பக்தி நூல். ஜி. யு. போப் என்னும் ஐரோப்பிய குருத்துவருக்கு திருவாசகம் முழுவதையும் கவிவாயிலாக ஆங்கில மொழியில் திருப்ப வல்ல ஆர்வத்தை அளித்தது, அந்நூலின் பக்திச் சுவைதானே?

இந்நிலேயில் திருமறையிலுள்ள சங்கீதமும் என் உள்ளத் தைக் கவர்ந்ததென்ருல் மிகையாகுமோ? சங்கீதமென்னும் ஆகமத்தை திருவாசகமென்னும் நூலுடன் ஒப்பிடலா மென்பது அடியேனது அபிப்பிராயம். இவ்விரு நூற்களிலும் தொண்டர்களுள்ளத்திலுள்ள ஆழ்ந்த பக்தியின் அனல் வீசு வதைக் காண்கின்ருேம்.

'பாரொடு விண்ணுய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்' —திருவாசகம்

'என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில்
உம்முடைய ஆறுதல்கள்
என் ஆத்துமாவைத் தேற்றுகிறது' —சங்கீதம் 94

இத்தகைய பொருளடங்கிய தியான மொழிகள் திருவாசகத்திலும் சங்கீத ஆகமத்திலும் மலிந்து கிடக்கின்றன.

'நான் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, கர்த்தாவே என் ஆத்துமாவை விடுவியும் என்று கெஞ்சினேன்'
*(சங்கீதம் 116:4)*

'வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை' *(மாற்கு 13:31)*

'ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள்போலவும் சங்கத் தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள்போலவும் இருக்கிறது' *(பிரசங்கி 12:11)*

63

# வாய்பாட்டை எழுதியது யார்?

மூடி பிரசங்கியாரிடமொருவன் வந்து, 'வேதத்தின் சில பாகங்கள் யாரால் எந்தச் சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டன வென்று தெரியாததால் அவைகளை நம்புவது நியாயமாகுமா?' என்ருன். அவர் ஒரு கணக்கன் (Accountant) என்பதை மூடிப் பிரசங்கியார் அறிந்து அக்கேள்வியை மறக்க வைக்க வேறு வகையில் பேசின பின்பு மெதுவாக வாய்பாட்டை எழுதியவன் பெயரும் ஊரும் காலமும் அவருக்குத் தெரியுமோவெனக் கேட்டார். அதற்கு அக்கணக்கன், 'ஐயா, இது என்ன கேள்வி? அவைகளைப்பற்றி நான் ஏன் அறியவேண்டும்? வாய் பாட்டை உபயோகித்தால் என் கணக்குகள் சரியாக வரு கின்றனவே. அது போதுமானதல்லவா?' என்ருன்.

அதற்கு மூடிப் பெரியார், வேதப் புத்தகங்கள் நமது வாழ்க்கைக்குச் சரியாக இருப்பதால்—ஆத்துமாவைத் தேற்றுவதால் அதை நம்புகிறேன்—சில பாகங்களின் மூலத்தை அறிய முடியாததால் என்ன நஷ்டம்? என்று கேட்டு நன்கு விளக்கிக் காட்டினர்.

'ரிஷி மூலம், நதி மூலம் அறியக்கூடாது' என்பார் நம் முன்னோர்!

**'ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிருர்'** *(யோபு 5:9)*

**'மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்'** *(மத்தேயு 10:17)*

64

# வில்லியம் கேரியின் விடாமுயற்சி

**வி**ல்லியம் கேரி ஆங்கில நாட்டில் எளிய குடியில் 1761ம் ஆண்டில் பிறந்து ஓய்வுநாள் பாடசாலையில் இயேசு பெருமானை அறிந்தார். கிறிஸ்துவின் அன்பைக் கேள்விப்படாத மக்களுக்கு அவரை அறிமுகப்படுத்துவான்கருதி வங்காளத்திற்கு வந்து தனது அரிய தொண்டை ஆற்ற ஆரம்பித்தார். பாஷைகள் பலவற்றை எளிதில் கற்கும் பண்பு அவரிடம் இருந்ததால் பல பாஷைகளைக் கற்று பரிசுத்த வேதாகமத்தை மொழிபெயர்த்துவிட்டார். மொத்தம் 34 பாஷைகளில் வேதாகமத்தை மொழிபெயர்த்து வெளியிட்ட வேத வீரனும் இவரே!

1812ம் ஆண்டில் இவர்கள் தயாரித்த கைப்பிரதியும் அச்சகமும் அந்தோ எதிர்பாராவண்ணம் நெருப்புக்கிரையாயின. உள்ளங்கள் பல உடைந்தன. இத்தொண்டுக்கு முடிவு வந்ததே என ஏங்கி நின்றோர் பலர். ஆயினும், கேரியின் மனம் சலிக்கவில்லை.

அடுத்த ஞாயிறு காலை கேரி என்னும் பெரியார் சற்றேனும் கவலைப்படாமல், 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தெய்வமென்று அறிந்துகொள்ளுங்கள்' (சங். 46:10) என்னும் வசனத்தின்பேரில் ஆர்வமுடன் ஒரு பிரசங்கம் ஆற்றினர். 'இஷ்டப்படி நம்மை நடத்த இறைவனுக்கு உரிமையுண்டு. அவருடைய சித்தத்திற்கு உடன்பட நமக்குக் கடமையுண்டு' என்பதே பிரசங்கக் கருப்பொருளாகும்.

அதன் பயனாகக் கடிதங்களும், காணிக்கைகளும், அச்சு இயந்திரங்களும் வந்து குவிந்தன. முன்பைக் காட்டிலும் மிகுந்த உற்சாகத்தோடு வேலைகளைத் தொடர்ந்து நடத்தினர். வங்காளம், சமஸ்கிருதம், இந்தி, பஞ்சாபி, மராத்தி, ஒரியா முதலிய பாஷைகளில் வேதத்தை மொழிபெயர்த்து வெளியிட்டார். அரை ஆண்டுக்குள் முன்பைவிடப் பெரிய அச்சகமாக வளர்ந்தது இறையருள்தானே?

இத்தொண்டர் மொழிபெயர்த்த சமஸ்கிருத வேதாகமம் நாராயணவாமன் திலக் பெரியாரது உளத்தைக் கிறிஸ்துவின் பக்கம் திருப்பினது. தமிழில் வித்துவான் கிருஷ்ண பிள்ளையைப்போன்று அவர் இயேசு பெருமான் பேரில் நூற்றுக்கணக்கான கவிகளை மராத்தி பாஷையில் எழுதி செவி இனிக்கச் செய்தார்.

'விசுவாசிக்கிறவன் பதறுன்' (ஏசாயா 28:16)

'கவலைப்படுகிறதினுலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?' (மத்தேயு 6:27)

# 65

# தள்ளுபடி ஆகமம்

அப்போகிரிப்பா என்னும் தள்ளுபடி ஆகமம்பற்றியும் நாம் அறிந்துகொள்ள வேண்டியதவசியம். திருமறை என்னும் பெரிய நூல் பல் நூற்றுண்டுகளாகப் பல பெரியார்களால் திரட்டி இணைக்கப்பட்டு வந்தது. 1535ம் ஆண்டில் தள்ளுபடி ஆகமத்தையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டார்கள். 1546ல் கூடின ரோமன் கத்தோலிக்க சங்கமும், 1870ல் கூடின வத்திக்கான் சங்கமும் இவ்விணைப்பை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டன.

அதன் பின்பு மார்ட்டின் லுத்தரெனும் மா சிறந்த வீரன் நடத்திய சீர்திருத்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த பெருந்தகையோர் பலர் வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு புத்தகத்தையும் ஆய்ந்தனர். பதினுன்கு புத்தகங்கள் கிறிஸ்தவ மூல உபதேசத்திற்குச் சற்றும் பொருந்தாக் கொள்கைகள் நிறைந்திருந்தன. அவை ஆதி எபிரேய வைதீக பிரபந்தத்திலும் இடம் பெறுதிருந்தன. அப் பதினுன்கு நூற்களும் பரிசுத்தாகமத்தில் சேர்க்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டன. அந்நூற்களுக்கே ‘அப்போகிரிப்பா’ என்று பெயர்—இது கிரேக்கப்பதம் ‘தள்ளுபடி செய்யப்பட்ட’ என்பது பொருள்.

தரங்கம்பாடியில் 1707ல் வந்திறங்கின முதல் சீர்திருத்த சபை மிஷனரியான சீகன் பால்க் அவர்களின் உடன் ஊழியன் சூல்சை என்னும் தொண்டரால் இப் புத்தகம் தமிழில் எழுதப்பட்டு 1728ம் ஆண்டில் அச்சுவாகனமேற்றப்பட்டது. அதன் பின்பு 1868ம் ஆண்டில் வில்லியம் கர்மென் பண்டிதர் இரண்டாம் பதிப்பாகப் புதுப்பித்தார். அது அரசாங்க வெளியீடாக வந்தது. சாமுவேல் பிள்ளை என்ற தமிழ் வித்துவான் குரு கர்மென் பண்டிதருக்கு இலக்கண முறையில் உதவி செய்தார்.

இப்புத்தகங்கள் இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. வருடங்கள் பல உருண்டோடின. எஸ். பி .சி. கே. சங்கத்

தாரின் வேண்டுகோளுக்கிணங்க திருநெல்வேலியில் திருப்பணியாற்றி வந்த மறைத்திரு. தாமஸ் வாக்கர் 1906ம் ஆண்டில் ஆரம்பித்து நல்ல தமிழ் மொழியில் எழுதி வந்தார்.

1912ம் ஆண்டில் அவர் சடுதியில் மரணமடைந்தார். அத்திருப்புதல் அத்துடன் நின்றது. அதன் பின்பு மறைத்திரு. ஏ. ஸி. கிலேற்றன், மறைத்திரு. G. P. ஜார்ஜ் என்னும் இரு குருத்துவரும் ஒருமனப்பட்டு மொழிபெயர்ப்பை முற்றுப்பெறச் செய்தனர்.

இம் முறையில் தள்ளுபடி ஆகமம் என்னும் பெயரில் இது தள்ளாடிக்கொண்டே வருகிறது.

'வேதம் வாழ்க மெய் வேதியர்
போதம் வாழ்க இப்புன் சொலார்
கீதம் வாழ்க கிறிஸ்துவின்
பாதம் வாழ்க பல்லூழியே' (மனோகரம்)

'கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது' (சங்கீதம் 18:30)

'அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புத்தகத்தைக் . . . கண்டேன்'
(வெளிப்படுத்தின விசேஷம் 5:1)

# 66

# கனவும் நனவும்

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்து சமயத்தைத் தழுவினவரும் இந்திய அரசாங்கத்தில் உயர் பதவியில் இருந்தவருமான திரு. லூயிஸ் சுப்பிரமணியம் என்பாரும் யானும் பல்லாண்டு நண்பர்கள். ஓரிரவு அவர் என்னை அணுகி எனதுள்ளத்தில் பாரம் ஏதேனுமிருந்து என்னை வதைக்கிறதாவெனக் கேட்டார். அதற்கு நான், 'அப்படியொன்றுமில்லை, என் சாட்சியை நீங்கள் கேட்டிருக்கலாமே' என்றேன்—உடனே அவர், 'சாட்சி கொடுப்பது எளிது; உங்கள் கரத்தை நெஞ்சில் வைத்துப் பரிசுத்த ஆவியின் உதவியால் அதைத் தடவிப் பாரும்' என்று சொல்லி ஒரு நிமிட நேரம் கொடுத்தார்.

கையும் களவுமாகக் கண்டுபிடிக்கப்பட்டேன். 'என் மகளின் விவாகம் எனக்கொரு பெரிய பாரம். நான் ஒரு ஏழைக் கன்வர்ட்டானபடியால் வரதட்சணை கொடுக்கப் பணமில்லை. ஓடியாடி மாப்பிள்ளை தேடவும் மக்களில்லை. தனியாக நின்று தவிக்கின்றேன்' என்றேன்.

உடனே அவர் சொன்னார்: 'உமது குடும்பத்தை நடத்த நீர் ஏற்றவரல்ல, உமது குடும்பத்திலிருந்து உம்மை நீர் விலக்கிக் கொண்டு உமது குடும்பக் காரியங்களை இயேசு பெருமான் வசம் விட்டு விடவேண்டும்' என்றார்.

இம் முறையை எனதுள்ளம் ஆமோதித்தது. இரவு ஒன்பது மணி இருக்கும். மரத்தடியில் மண்டியிட்டு ஜெபித்தோம். என்ன ஆச்சரியம்! அன்றே என் மனம் பஞ்சுபோலிருக்கக் கண்டேன். நாட்கள் பல நகர்ந்தன. கனவொன்று கண்டேன்.

'அதிகாலை இரண்டு மணி. வாலிபனொருவனை கனவில் கண்டு அவன் தோள்களில் கைகளைப் போட்டு சுமார் கால் மணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் என்னை முன் பார்த்ததேயில்லை எனவும், என் நட்பை நாடி வந்ததாகவும் விளக்கினர்.'

கனவு கலைந்தது. வாரங்கள் சில வளர்ந்தன. என் மகளின் விவாகத்தை முன்னிட்டு ஒரு வாலிபனை என் சகலை அழைத்து வந்தார்—கண் சிமிட்டாமல் அவ்வாலிபனைப் பார்த்தேன். கனவில் கண்ட வாலிபனேதான். உடனே அவ்வாலிபனை ஏற்றுக்கொண்டு *1939* ஜனுவரி 2ம் தேதி செங்கல்பட்டில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வரதட்சணைப் பேச்சே கிடையாது.

என் மருமகன் ஓர் இன்ஜினியர். சாதுவான குணசீலன்—காணூரானே உருவாக்கித்தந்த மணாளன். என் மகளும் அவர் குடும்பத்திற்கு ஈவாயினள்.

கனவு நனவாயிற்று.

கர்த்தர் அனைத்தையும் கவனித்துக்கொண்டார்.

'கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்'

*(சங்கீதம் 55:22)*

'என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது'

*(மத்தேயு 11:30)*

# 67

# நோயும் தாயும்

1913ம் ஆண்டு ஜூலை மாதம் நாகர்கோவிலுக்குப் பக்கமுள்ள நெய்யூரில் பெருங் கூட்டமான மக்களுக்குச் செய்தி கொடுத்துக்கொண்டிருந்தேன். பரிசுத்த ஆவியின் குளிர்ந்த நிழல் அங்கிருந்த மக்கள் உள்ளத்தில் படிந்தது.

ஆத்தும ஆதாயம் அதிகமாக நடந்துகொண்டிருக்கும் அவ்வேளையில் என் உள்ளத்தை உலுக்கும் ஒரு கடிதம் வந்தது.

இந்துவாயிருந்த எனதருமைத் தாயார் கொடிய ஜுரத்தினால் வாதைப்பட்டு மரணத்திற்குச் சமீபமாய் இருப்பதாகவும், என்னைப் பார்க்க விரும்பினதாகவும் என் தமக்கையினிடமிருந்து வந்த கடிதம் காட்டியது. யான் யாது செய்வது? தாயாரின் பாசம் ஒரு புறம்; பரமனின் நேசம் ஒருபுறம் என்னில் ஊசலாடின.

காலையும் மாலையும் நடக்கும் கூட்டங்களை நிறுத்திவிட்டுச் சென்னைக்குப் போகவும் மனமில்லை. போகாமலிருக்கவும் துணிவில்லை.

அப்பனோடு ஜெபத்தில் நெருங்கினேன். இரு தினங்களுக்குப் பின்பு கடிதம் ஒன்று வந்தது.

'நீண்ட வெண் உடை தரித்துள்ள பெரியார் ஒருவர் தம் கரத்திலிருந்த வெள்ளிக் கிண்ணத்திலிருந்து இலேகியம் போன்ற மருந்தில் சிறிதளவு எடுத்து என் தாயாரின் வாயில் போட்டு சடுதியில் மறைந்ததாகக் கனவொன்று கண்டு விழிக்க வியாதி பறந்துவிட்டதாக' எழுதி இருந்தார்கள்.

அதன் பின்பு அவர்கள் முகம் பிரகாசமாக இருந்ததாகவும், கனவில் தோன்றியவர் நம் தம்பி பால் வணங்கும் இயேசு கிறிஸ்துவே என்று என் தாயார் அடிக்கடி சொல்வதாகவும் என் தமக்கை எனக்கு எழுதி இருந்தார்கள்.

அதன் பின்பு என் பணி நெய்யூரில் மட்டுமல்ல, பக்கத்துக் கிராமங்கள் பலவற்றிலும் சிறக்க நடந்தேறியது. எங்கள் குடும்பத்திற்குப் புதையலைப்போல் கிடைத்த முதல் பரம தரிசனம் இதுவே. இந்து வேதாந்தியாயிருந்த என் தாயாரின் மனம் மாறியது. இயேசுவை நேசிக்க ஆரம்பித்தார்கள்.

'துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் அவன் பயப்படான்; அவன் இருதயம் இறைவனை நம்பித் திடனாயிருக்கும்' (*சங்கீதம் 112:7*)

'சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது' (*ரோமர் 8:28*)

68

# தண்ணீர் அபிஷேகம்

இரங்கூன் அரசாங்கத்தில் இருபத்தைந்தாண்டுகள் பணி புரிந்து வந்த தருணம் நடைபெற்ற யுத்தத்தினிடையில் உயிரைக் காப்பாற்ற ஊரைவிட்டு (1940) சகலத்தையும் இழந்தவர்களாக என் மனைவி மகள் ஒருபுறம், என் ஒரே மகன் ஒருபுறம், நான் ஒருபுறம்; ஒருவரையொருவர் எங்கே இருக்கிறோம் என்றுகூடத் தெரியாமல் சிதறடிக்கப்பட்டோம். சில மாதங்களுக்குப் பின்பு இறைவனருளால் சென்னையில் எதிர் பாராவண்ணம் சந்தித்தோம். சட்டி முதல் துடைப்பம் வரை வாங்கி புதுக்குடித்தனம் ஆரம்பித்தோம்.

இச்சூழ்நிலையில் இறைவனுக்கு உழைக்க வாய்ப்பு கிடைக்க வேண்டுமே எனப் பிரார்த்தித்தும், காத்துமிருந்தேன்.

கனவொன்று கண்டேன்:

'என் நண்பர் மூவர் என்னைத் தண்ணீர் குழாய்க்கு அழைத்துச் சென்று அங்கிருந்த கல்லொன்றில் என்னை உட்கார வைத்து தண்ணீரை மண்குடங்களில் பிடித்து மாறி மாறி என் தலையில் ஊற்றிக்கொண்டிருந்தனர்.'

இக்கனவின் பொருள் யாது? அது தெரியும் வரை தூக்கமேது?

மூன்று நாட்களுக்குப் பின்பு, நெல்லை ஆதீன ஆர்ச் டீக்கன் மறைத்திரு. அப்பாசாமி அவர்களிடமிருந்து வந்த கடிதம் ஒன்று கனவின் பொருளைக் காட்டினது. அத்தியட்சாதீனம் முழுவதும் சென்று எழுப்புதல் கூட்டங்கள் நடத்திவர அழைப்புப் பெற்றிருந்தேன். மூன்றாண்டுகள் அவ்வாதீனம் முழுமையும் சுற்றி சொற்பொழிவாற்றினேன். உடைந்து மீண்டும் கட்டப்பட்ட குடும்பங்கள் பல; உடைந்து மீண்டும் ஒன்றுபட்ட உள்ளங்கள் பல.

மதுரை, திருச்சி, கோவை, சென்னை முதலிய ஆதீனங்களுக்கும் அடியேனை அழைத்து ஊழியம் நடப்பித்தனர்.

சுமார் பத்து ஆண்டுகள் ஆண்டவர் மகிமையாய் உபயோகித்தார். சிறிய பெரிய சபைகள், கூட்டங்களிலெல்லாம் இயேசுவின் எக்காளம் ஊதினேன். மலை நாடுகளிலும் தேயிலைத் தோட்டங்களிலும் அழைத்துச் சென்று அரிய பெரிய காரியங்களை ஆற்றினர்.

மானைப்போன்ற கால்களையும் கழுகுக்கேற்ற இறக்கைகளையும் கொடுத்து இழுத்தடித்து உபயோகிப்பதற்கே இறைவன் எனக்குத் தண்ணீர் அபிஷேகம் செய்திருக்கிறர் என்று அறிந்துகொண்டேன்.

'புது எண்ணெயால் அபிஷேகம்பண்ணப்படுகிறேன்'

*(சங்கீதம் 92:10)*

'சுவிசேடத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினர்' *(லூக்கா 4:18)*

## 69

# மரண சாசனம்

1963ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் தேதி எனது அடுத்த தெருவில் திருமதி பொன்னம்மாள் டேவிட் என்னும் விருத்தாப்பிய மாது ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாயினர். அம் மரண வீட்டில், அங்கிருந்தோர் வேண்டுகோளுக்கிணங்கி கிறிஸ்தவ மரணத்தின் இனிமை, மகிமை முதலியவைகளை விளக்கிப் பேசினேன். இறுதியில், 'நானும் விருத்தாப்பியன். என் கால்களில் யோர்தான் நதியின் அலை மோதுகின்றது. எக்காள சத்தத்திற்குக் காத்திருக்கிறேன். பரம கானானி லிருந்து படகொன்று எனக்கு வரும், அதிலுட்கார்ந்து பாடின வண்ணமாகவே பரம பதவியை அடையக் காத்திருக் கிறேன்' எனப் பொழிந்து திரும்பினேன்.

மறுநாள் மாலை ஓர் ஏழைக் கிழவியம்மாள் நடுத்தெருவில் என்னைக் கண்டு, 'மரண வீட்டில் உங்கள் பிரசங்கம் நன்றாய் இருந்தது. எனினும் அது பயனற்றுப் போய்விட்டது. உமது மரணத்தைப்பற்றி நீர் ஏன் பேசவேண்டும்? ஆத்தும ஆதாயத் துறையிலுள்ள கஷ்டங்களுக்குத் தப்பியோடப் பார்க்கிறீர் களா?' என்று பண்புடனும் பரிவுடனும் கேட்டனர்.

குனிந்த தலை நிமிராமல் கேட்டு என்னகம் திரும்பினேன். அன்றிரவு பரமனிடம் மன்னிப்புக்கேட்டு இனி எனது மரணத் தைப்பற்றிப் பேசக்கூடாதெனும் தீர்மானத்துடன் நித்தி ரைக்குச் சென்றேன்.

கனவொன்று கண்டேன்:

வானத்தில் வெண்மேகத்தின் நடுவில் இயேசுவைக் கண் டேன். உடல் சிலிர்த்தது, உளம் பூரித்தது. அவர் கரத்தை நீட்டி இரண்டு பெரிய புஷ்பங்களை எனக்குக் கொடுத்தார். அவைகளை வாங்கி என் கண்களில் ஒத்திக்கொண்டு, 'ஆண்ட வரே, இப் புஷ்பங்களை நான் எடுத்துக்கொள்ளலாமா?' எனக் கேட்டேன். அதற்கவர், 'இவைகளை வைத்துக்கொள்.

நீ இருக்குமிடத்தில் சுகமாயிரு. உனக்குப் பிரியமாயிருக்கும் தருணம் என்னுடன் சேர்ந்துகொள்' என்ருர். உடனே விழுந்து கும்பிட்டெழுந்தேன். கண்டேனில்லை கர்த்தரை. கனவு கலைந்தது.

காலைத் தியானம் முடிந்தபின் என் மனைவியாருக்கிதை எடுத்துரைத்தேன்.

இதன் பொருள் யாது? எசேக்கியேலைப்போல் ஏசு இரட்சகர் ஆயுளைக் கூட்டித் தந்துள்ளார் என்று அறிந்து ஆண்டவருக்கு துதி செலுத்தினேம்.

**'உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ உன் நாட்களோடே பதினைந்து வருடம் கூட்டுவேன்'** *(ஏசாயா 38:5)*

**'அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்'** *(1 கொரிந்தியர் 15:54)*

## 70

# நான் ஏற்றுக்கொள்ளப்பட்டவன்!

என் திருமண நாளின்போது மங்கள வீட்டில் ஒரே சண்டை. பரிசுத்த திருமண வாசலில் தெய்வ மணமில்லை. பந்துக்கள் பகைக்குள்ளாயினர். மனமுடைந்து போனேன். புதிதாக மதமாற்றமான எனக்கு இது விளங்காததால் என் மனைவியுடன் (1917) இரங்கூன் சென்றுவிட்டேன்.

இந்நிலையில் பக்தி, தியானம், வேத வாசிப்பு அனைத்தும் என்னை விட்டு அகன்றே போயின. ஆலய ஆராதனையில் அசட்டை. இதையறிந்த என் மனைவியார் என்னுள்ளத்தை மீண்டும் இயேசு பெருமான் பக்கம் திருப்ப எடுத்த பிரயத்தனங்களெல்லாம் வீணாயின. வணங்காக் கழுத்தென்றால் என் கழுத்தேதான்.

ஒரு மாலை என் மனைவியார் உலாவப் போவதாகப் பாவித்து தந்திரமாக என்னை அமெரிக்கன் ஆலயமொன்றுக்கு அழைத்துச் சென்றார். உலகறிந்த பெரியார் அன்று பிரசங்கித்தார். கோவில் நிறைய பக்தர்கள். நல்ல வாத்தியங்கள், இனிய பாடல்கள். கருமேகத்தினூடே கதிரவன் காந்தி செல்ல வல்லதோ?

வாரங்கள் வளர்ந்தன.

ஒருநாள் எஸ். பி. ஜி. ஆலயத்திற்கு என் மனைவியார் போகப் புறப்பட்டனர். அவ்வூரில் ஒரு தமிழ் மாது தனியே செல்வது மதியல்ல. எனவே அடியேனும் கூடச் சென்று சீனப் பொம்மையைப்போல ஆலயத்தில் வீற்றிருந்தேன். பாட்டும் பிரார்த்தனைகளும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன வல்ல.

பின்னர் மறைத்திரு. டி. பி. துரைராஜ் அவர்கள், ‘ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்’ என்னும் திருமொழியில் பிரசங்கம் செய்தார். ரூத்து—ஓர்பாள், பேதுரு—யூதாஸ், லீதியாள்—சப்பீராள், சிலுவை

யில் தொங்கிய இரு கள்வர், கன்னிகைகள், கற்பாறையில் வீடு கட்டினோர் முதலியோரைப்பற்றி விளக்கிக்காட்டி, அங்குள்ளோரை, 'நீ கைவிடப்பட்டவனா ஏற்றுக்கொள்ளப் பட்டவனா?' என்று கேட்டார்.

எனதுள்ளம் அசைந்தது.

'ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?' என்னும் சத்தம் புறப் பட்டது. என் கண்கள் கலங்கின. அழுதவண்ணமாக வெளியே வந்துவிட்டேன். என் மனைவி என் பின்னாலேயே வந்து, 'ஏன் அழுகிறீர்கள்? கோவில் வாசலில் நின்று நீங்கள் அழுவது மதியல்ல, வாருங்கள் வீட்டிற்குப் போவோம்' என்றார். உடனே கண் கலங்கினவண்ணமாக, 'கமலா, இந்தப் பிரசங்கம் என்னுடன் பேசினது. நான் ஏற்றுக்கொள் ளப்பட்டவன்' என்றேன்.

மனைவிக்கு மகிழ்ச்சி.

அன்று மாலையே முன்போல குடும்ப ஜெபத்தை ஆரம்பித் தோம். மங்கி எரிகிற திரியை அணைக்காத ஈசன் என் உள் விளக்கைத் தூண்டிவிட்டார். அன்று முதல் இன்று வரை சுடருடன் தமிழ் கிறிஸ்தவ உலகம் அறியுமாறு எரிந்துகொண்டிருப்பது கண்கூடு. அப்பனுடைய திராட்சத் தோட்டத்தில் இறுதி மூச்சுவரை பணிபுரிவேன்.

'கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக் கிறதுமாயிருக்கிறது' *(சங்கீதம் 19:8)*

'இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான் மற்றவன் கைவிடப்படுவான்' *(லூக்கா 17:36)*

# 71

# நீலகிரி மெயில் பெண்

பல்லாண்டுகளுக்குமுன் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர் முதலியவிடங்களில் கூட்டங்கள் நடத்திவிட்டுத் திருப்பூர் நிலையத்தில் நீலகிரி மெயில் வண்டியில் இரண்டாம் வகுப்பு ஏறி வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். வண்டியில் இடமில்லாத தால் மூலை ஒன்றில் உட்கார்ந்திருந்தேன். ஈரோட்டை வண்டி விட்டபின் முப்பது வயதுள்ள ஒரு மாது என்னிடம் வந்து, 'ஐயா, பெரியவரே! நீர் இப்படி உட்கார்ந்து வருவது எனக்கு வருத்தம். என் படுக்கையைக் கொடுக்கிறேன். அதில் சாய்ந்தவண்ணமாக தூக்கிக்கொண்டே வாருங்கள்; உங்கள் சாமான்களை நான் பார்த்துக்கொள்கிறேன்' என்றாள். இது எனக்கு விளங்கவில்லை. எனினும் களைப்பு மிகுதியால் கண்களை மூடி அயர்ந்துவிட்டேன்.

ஆவடி வந்ததும் அந்த அம்மா எனக்குக் காப்பிப்பானம் கொடுத்தார்கள். இந்த உபசாரம் எதற்காக என்று விளங்க வில்லை. எனினும் நன்றியுடன் அதைச் சாப்பிட்டேன். பிறகு அந்த அம்மாள், பெரியவரே! நீர் தந்தை பால் கடம்பவனம் என்பதை நான் அறிவேன். நீங்கள் நீலகிரியில் நடத்தின கூட்டத்தில் நான் இயேசு பெருமானுக்கு என்னை ஒப்புக் கொடுத்துவிட்டேன். அன்றே என் மனதிலுள்ள கஷ்டங் களும், கவலைகளும் பறந்து போய்விட்டன. என் நன்றியைத் தெரிவிக்க எனக்குச் சந்தர்ப்பம் கிட்டியதே என்றாள்.

நான் பேசிக்கொண்டே வரும் தருணம் அவர்கள் விலாசத் தையும், பெயரையும் கேட்டேன்.

'பெரியவரே, நீங்கள் கடிதம் எழுதினால் அந்நியனிடத்தி லிருந்து ஒரு பெண்ணுக்குக் கடிதம் வருவதை என் வீட்டார் விரும்பமாட்டார்கள். எனக்கு அது அவமானமாக இருக்கும். என் பெயரையும் நீங்கள் அறியாதிருந்தால் நலம். என்னை நீலகிரி மெயில் பெண் என்று நினைத்து எனக்காக அடிக்கடி ஜெபித்து வாருங்கள். நான் கிறிஸ்துவுக்கு என்னை ஒப்புக்

கொடுத்ததை என் வீட்டார் இன்னும் அறியவில்லை. சின்னாள் கழித்துச் சொல்லப்போகிறேன்' எனக் கனிவுடன் மொழிந்தாள்.

மௌனமாக அவர்களுக்காக ஜெபித்தேன். சென்னை இரயில் நிலையத்தில் என்னை ஒரு டாக்சியில் ஏற்றி என்னிடத்தில் விடைபெறும் தருணம் என் கையில் ஒரு சிறு தொகையைக் காணிக்கையாகக் கொடுத்தாள்.

இயேசு பெருமானின் வழிகள் அற்புதமானவைகள். இவ்வித இரகசியக் கிறிஸ்தவர்கள் பலரை என் நீண்ட பிரயாணத்தில் கண்டு களித்துள்ளேன்.

ஒரு வைதீக இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த என்னை என் தாயின் கர்ப்பத்திலிருந்த தருணத்திலேயே என் மேல் கண் வைத்துக்கொண்டவராக என்னைத் தாங்கி எடுத்தும், நடத்தியும், பரிசுத்தப்படுத்தியும், ஆசீர்வதித்தும் வருகின்றார்.

**'உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்'**

*(நீதிமொழிகள் 3:6)*

**'நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து'**

*(லூக்கா 22:32)*

# 72

# தேவ சமூகத்தில் பார்த்துக் கொள்ளப்படும் . . .

**ப**ல ஆண்டுகளுக்குமுன் நான் கல்லூரியில் படித்து வந்த காலத்தில் இயேசு பெருமானது ஜோதி என் உள்ளத்தில் வீசினதின் பயனுக—இயேசு பெருமான் எனக்காகத் தன்னை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார் என்னும் உண்மை என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டதின் பயனுகக் கிறிஸ்து சமயத்தைத் தழுவத் துணிந்துவிட்டேன்.

அதை அறிந்த என் தாயார், சகோதரிகள் பிரதிதினமும் அழுது புத்தி சொன்னுர்கள். என்னை என் பந்துக்கள் அடித்து அறையில் பூட்டி என் சலுகைகளை எல்லாம் பிடுங்கிக் கொண்டார்கள்.

ஓர் இரவு துணிவு பிறந்ததின் பயனுக என் வீட்டின் நிலை வாசற்படியில் இருந்து முழங்காலில் நின்று அழுதேன். உள்ளே தூங்கும் என் தாயார், சகோதரிகளை ஆண்டவர் வசம் ஒப்புவித்துவிட்டு கட்டின வேட்டி, ஒரு சேட், கையில் பரிசுத்த வேதாகமத்துடன் அழுதவண்ணமாக வீட்டை விட்டு சென்னை வந்து சேர்ந்து கிறிஸ்து மதத்தைத் தழுவி விட்டேன். அன்று என் பையில் 5 அணுக்கள் மாத்திரம் இருந்தன.

பல்லாண்டுகளுக்குப்பின் நான் திருவனந்தபுரம் சென்று அங்குள்ள கோவிலில் ஈராண்டுகள் எழுப்புதல் கூட்டம் நடத்தி வந்தேன். அந்த சமஸ்தானத்தின் வருமானவரி இலாக்காவுக்கு அதிபதியாய் இருந்த திருவாளர் குணமணி, M.A., M.L. அவர்கள் அக்கூட்டத்தில் இருந்து தன் வீட்டிற்கு அழைத்துச் சென்ருர். அவர் மனைவியார் மாசிறந்த மாதரசி என்பதைக் கண்டுகளித்தேன். அவர்கள் வீட்டைவிட்டு நான் புறப்படும் தருணம் இருபதுகெஜம் உள்ள ஒரு பெரிய மல்துணி மடிப்பை எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள்.

என்ன ஆச்சரியம்! இறைவனுக்குத் துதி. இதுவும் அன்றி கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளாக வேளா வேளைகளில் சில பக்தர்கள் வேஷ்டியும், ஜிப்பாவுக்குத் துணியும், படுக்கை விரிப்பும், கைக்குட்டை, துவால் முதலியவைகளை எனக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். கட்டின வேட்டியுடன் கர்த்தரை ஏற்றுக்கொண்ட அபாத்திரனாகிய எனக்கு வேட்டி, உடுப்பு முதலியவைகள் குறைவுபடாமல் கர்த்தர் பார்த்துக் கொண்டு வருகிறார்.

இச்செய்தியை எழுதிக்கொண்டிருந்த தருணத்தில் ஒரு டாக்டரம்மாள் என் அறைக்கு வந்து என் படுக்கைக்கும் என் உடலுக்கும் வேண்டிய துணியையும் ஆகாரத்திற்கு வேண்டிய பண்டங்களையும் ஜெபத்துடன் கொடுத்துவிட்டுப் போனார்கள். இப்பேர்ப்பட்ட இறைவனை ஏற்றித் துதிக்காமல் இருக்க மனம் வருமா? அவர் நாமம் வாழ்க.

'இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்' *(சங்கீதம் 128:4)*

'என் பெயரின் பொருட்டு, வீடுகளையாவது சகோதரரையாவது . . . விட்டுவிட்டவன் எவனும் இன்னும் மிகுதியானவற்றைப் பெறுவான் . . . மெய் வாழ்வையும் பெற்றுக்கொள்வான்'
*(மத்தேயு 19:29)*

'ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்' *(மத்தேயு 6:31,32)*

# 73

# கர்த்தர் பார்த்துக்கொள்வார்

**ப**ல்லாண்டுகளுக்கு முன்பு, நான் சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியில் படித்துக்கொண்டிருந்த தருணம் ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் பிராட்வே சட்டக் கல்லூரியின் முன் ரட்சண்ய சேனைக்காரர் நல்ல கூட்டங்கள் நடத்துவார்கள்.

அதற்கு நான் ஒழுங்காகப் போவதுண்டு. ஒரு சனிக்கிழமை மாலையில் கூட்டத்திற்குப்பின் மழை பெய்ய ஆரம்பித்தது. மூடியிருந்த ஒரு கடை ஓரமாக மழைக்கு ஒதுங்க வந்து உட்கார்ந்தேன்.

ஒருவர் ஒரு பெரிய கூடையுடன் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். அந்த ஆளை நான் கூலிக்காரர் என்று நினைத்தேன். அவர் என்னுடன் பேசி நான் திருவல்லிக்கேணி போகவேண்டியவன் என்பதைக் கண்டுகொண்டார்.

என் கையில் டிராம் வண்டிக்குக் காசு இல்லை; குடையும் இல்லை. சுமார் ஒரு மைல் தூரம் நான் நடந்துபோக வேண்டியவன். இதை நான் அவருக்குச் சொல்லவேயில்லை. திருவல்லிக்கேணி டிராம் வண்டி வந்தவுடன் அந்த வண்டியில் ஏற என்னைத் துரிதப்படுத்தினர். 'இப்போது அவசரம் இல்லை; நான் பிறகு போகிறேன்' என்று சொன்னேன். சற்று நேரத்திற்குப்பின் என் கையில் நாலு அணு கொடுத்து 'அடுத்த வண்டியில் போங்கள்' என்றுர்.

'நீங்கள் யார் ஐயா, எனக்கு ஏன் இந்தக் காசைக் கொடுத்தீர்கள்' என்று வியப்புடன் கேட்டேன். அவர் அதற்கு தான் ரட்சண்ய சேனையைச் சேர்ந்த கிறிஸ்தவனென்றும், தான் எந்நேரமும் ஜெபித்துக்கொண்டிருப்பதாகவும், அந்த வேளையில் எனக்கு அந்த நாலு அணு கொடுக்க அவருக்குப் பலத்த ஏவுதல் இருந்ததாகவும் சொல்லி அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ளக் கேட்டார். அதன் பின் என்

நன்றியைத் தெரிவிக்க நானும் ஒரு கிறிஸ்தவன் என்பதையும் அந்தச் சூழ்நிலையையும் அவருக்கு விளக்கினேன். பிறகு டிராம் வண்டி வந்தவுடன் அவர் என்னை அந்த வண்டியில் ஏற்றிவிட்டுப் போய்விட்டார்.

என்ன ஆச்சரியம்! நான் சுமார் ஒரு மைல் தூரம் கையில் குடை இல்லாமல் மழையில் நனைந்துகொண்டு போகாதபடி கர்த்தர் பார்த்துக்கொண்டார்.

'நான் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடவில்லை யென்றுரைத்த பரி. பேதுருவின் ஆர்வத்தைக் கொண்டவனுகை பல்லாண்டாகச் சொந்த அனுபவத்தில் கண்டவைகளை அடியேன் சொல்லாதிருப்பது எப்படி?'

'கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்'
*(ஆதி. 22:14)*

'கர்த்தாவே, நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மை செய்யும்' *(சங்கீதம் 125:4)*

'கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்'
*(லூக்கா 13:34)*

## 74

# 'நான் களைத்துப் போயிருக்கிறேன்'

**ப**ல்லாண்டுகளுக்குமுன் மைலாப்பூருக்கு அருகில் இருந்த ஒரு கிறிஸ்தவக் குடும்பத்திற்கு அன்பையும் ஐக்கியத்தையும் கொடுக்கவும், வாங்கவும் சென்றிருந்தேன். மாலையில் திரும்புங்கால் பஸ் வண்டியில் இடம் இல்லாமல் போய் விட்டது. என்னை என் அகம் கொண்டுபோய் சேர்க்கும்படி உலாவி ஜெபித்துக்கொண்டிருந்தேன். உடனே வந்து கொண்டிருந்த காலி டாக்ஸியைப் பார்த்து கையைத்தட்டி டாக்ஸி டாக்ஸி என்று கத்தினேன். அவன் மதியாது வேகமாய்ப் போய்விட்டான். அவன் வெகு தூரத்தில் அந்த வண்டியை நிறுத்திப் பின் பக்கமாக ஓட்டிக்கொண்டே வந்து, என் முன் நிறுத்தி, 'ஐயா நான் ஒருநாளெல்லாம் வண்டி ஓட்டி களைத்துவிட்டேன். ஓய்வு எடுக்கப் போய்க்கொண் டிருந்த தருணத்தில் உங்களைப் பார்த்து பரிதபித்து வந்திருக் கிறேன். எங்கே போகவேண்டும் என்று சொல்லுங்கள்' என்றான். ஐயா, நீர் களைத்திருக்கிறீரே, நான் புரசவாக்கம் போகவேண்டும் என்றேன். அவர் விரும்பியவண்ணம் வண்டியில் ஏறிவிட்டேன்.

புரசவாக்கத்தில் என் வீட்டுக்கு முன்வந்து நின்று மூன்று ரூபாய்போல் வந்த கட்டணத்தை வாங்காமல் உள்ளே வாருங்கள் என்று சொல்லி அழைத்துச்சென்று, 'ஐயா நீங்கள் கடம்பவனம் ஐயா தானே' என்றான். அதற்கு நான் எப்படி நீர் என்னை அறிந்துகொண்டீர் என்று வினவ, தான் பலதரம் என் பிரசங்கங்களைக் கேட்டுள்ளதாகவும், அத்தருணங்களில் எல்லாம் தன் மனச்சாட்சி தன்னைக் கண்டிப்பதாகவும், அதன் பயனாக தான் மாறியிருப்பதாகவும் சொல்லிவிட்டு, திடீரென்று முழங்காலில் நின்று தன்னையும் தன் குடும்பத் தையும் ஆசீர்வதிக்கக் கேட்டான். நான் அசந்துபோய் என் வழக்கத்தின்படியே என் மௌன தியானத்தில் இருந்தபின் அவர் குடும்பத்திற்கும் அவர் வேலைக்கும் ஜெபித்து அவர்

நெற்றியில் சிலுவை போட்டு, எம்பெருமான் நாமத்தினுல் அவரை ஆசீர்வதித்து அனுப்பினேன். அவர் அந்த டாக்சி கட்டணத்தை வாங்காமல் வண்டியில் ஏறும் முன் அவரைப் பார்த்து, 'ஐயா, வேலை செய்கிறவன் கூலிக்குப் பாத்திரன் என்று வேதம் விளக்குகிறது. இந்த வண்டி உமக்குச் சொந்தமில்லாமல் இருக்கலாம். அதற்கு நீர் வாடகை கொடுக்க வேண்டியிருக்கும். என்னை நீர் சந்தோஷப்படுத்தவேண்டும் என்று நினைத்தால் இக்கட்டணத்தை வாங்கிக்கொள்ளும்' என்று கொடுத்தேன். அவர் முகமலர்ச்சியுடன் அப்பணத்தை வாங்கி முத்தியிட்டபின் பறந்து போய்விட்டார்.

தேவனுடைய பிள்ளைகள் கஷ்டப்படாமலும், அவர்களை ஏந்தி சுமந்து வருகிருர் என்னும் வாக்குத்தத்தம் எவ்வளவு உண்மையானது.

'கரத்தில் ஒன்றும் கொண்டு வந்தேனில்லை

பரத்தின் சிலுவை ஒன்றையே பற்றியுள்ளேன்'

**'நான் உங்களைத் தாங்குவேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்'** *(ஏசாயா 46:4)*

**'தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனே அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிருர்கள்'** *(மாற்கு 3:35)*

# 75

## 'காக்கை எச்சம்'

1967ம் ஆண்டில் 'திருநெல்வேலி அத்தியட்சாதீன ஆரம்பம்' என்னும் புத்தகத்தை தெய்வ நடத்துதலால் எனது விருத்தாப்பிய காலத்தில் எழுதி முடித்தேன். அதை அச்சிட்டு வெளியிட எண்ணூற்றைம்பது ரூபாய் வேண்டியிருந்தது. எனக்கு வந்துகொண்டிருந்த காணிக்கைகளையெல்லாம் சிறிதுசிறிதாகச் சேர்த்து அச்சாபீசுக்குக் கொடுத்து வந்தேன். அத்தருணத்தில் புரசவாக்கத்து வங்கியில் முன்னூறு ரூபாய் எடுத்து என் சட்டையின் மேல் பையில் போட்டுக்கொண்டு அரைக்கண் பார்வையுடன் ரஸ்தாவில் வந்துகொண்டிருந்தேன். ஒரு சந்து திரும்பினவுடன் ஒருவன் என்னை அணுகி என் சட்டையின் முதுகுப் பாகத்தில் காகம் எச்சம் இட்டிருப்பதால் அழுக்குத் தொங்குகிறது என்றான். நான் அவனைப் பார்த்து தயவுசெய்து அதைத் துடைத்து விடும் என்று சொல்லித் திரும்பினேன். அதற்கு அவன் அதைத் துடைத்துவிட்டதாகவும் ஆபீசுக்கு அவசரமாகப் போவதாகவும் கூறிச் சென்றுவிட்டான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு என் சட்டைப்பையில் இருந்த ரூபாய் முன்னூறும் இல்லாமல் போனதைக் கண்டேன். 'காக்கை எச்சம்' என்று சொன்னவன் நான் பணம் வாங்கினதையும், மேல் சட்டைப்பையில் போட்டதையும் பார்த்துக் கொண்டே என் பின்னே வந்திருக்கவேண்டும். நான் அதிர்ச்சியுடன் வீட்டிற்கு வந்து 'ஆண்டவரே, அவன் அப்பணத்தைப் பாவவழியில் செலவழிக்காமல், குடும்ப உணவுக்கும், உடைக்கும் செலவழிக்கவும், இத்தீய செய்கையை இன்றுடன் ஒழித்துவிட அவனுக்கு நல் மனச்சாட்சியையும் கொடுக்கவேண்டும்' என்றும் ஜெபித்தேன். இந்த நஷ்டத்தை என் மனைவி மக்களுக்குச் சொன்னதுமில்லை. ஒருவருக்கும் எழுதினதுமில்லை.

என்ன ஆச்சரியம்! அடுத்த மாதம் பாளையங்கோட்டையி லிருக்கும் பெல் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் (Bell industrial Estate) அதிபரான திருவாளர் செல்லத்துரையவர்களிட மிருந்து நான் எதிர்பாராவண்ணம் ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் என் புத்தக அச்சுச் செலவுக்கென ரூபாய் முன்னூறுக்கு ஒரு செக்கு அனுப்பியிருந்தார். இது விந்தை யினும் விந்தையன்றோ? என் மனமுவந்த நன்றியை அப்பெரியாருக்குத் தெரிவித்தேன்.

ஈசாக்கைப் பலியிடப்போகும் சமயத்தில் 'கர்த்தர் பார்த் துக்கொள்வார்' என்னும் வசனத்தைப்போல் கடந்த 68 ஆண்டுகளாக என் சேவைக்கு வேண்டியவைகளைக் கர்த்தர் பார்த்துக்கொண்டு வருவதை என் அபாத்திர உள்ளம் அறிந்து அவரைத் துதிக்கின்றது.

'உன்னுசை யன்றி ஓராசை மற்றுண்டோ

என்னுசை யிங்கேதினி?'

'கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்'

*(நீதிமொழிகள் 16:20)*

'விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்' *(மாற்கு 9:23)*

## 76

# ஆண்டவருக்குக் கொடுத்த மோதிரம்

காலஞ்சென்ற ஜான் கேசரி ஐயரவர்கள் நாகர்கோயில் பெரிய சபைக்குக் குருவாக இருந்த காலத்தில் 1912ம் ஆண்டு முதல், மூன்று நான்கு ஆண்டுகளாக நான் நாகர் கோயில் சென்று, அங்கும் சுற்றியிருந்த கிறிஸ்தவக் கிராமங் களிலும் சுதேசமிஷன் சம்பந்தமாகக் கூட்டங்கள் நடத்தி வந்தேன். அந்த முறையும் நாகர்கோவிலிலுள்ள கிறிஸ்தவத் தெருக்களில் மாலேதோறும் கூட்டங்கள் நடைபெறும். விசுவாசிகளான மக்கள் தெருவிலும் திண்ணைகளிலும் உட்கார்ந்து அப்பனுடைய செய்தியை ஆர்வத்துடன் கேட்டனர். காணிக்கைப் பையில் பலர் நகைகளைப் போடுவார்கள்.. ஒருநாள் 250 ரூபாய் விலையுள்ள தங்கச் சங்கிலி ஒன்று காணிக்கைப் பையில் இருந்தது. நான் தெருவில் போகும்போது சிலர் என்னை அழைத்து நகை களையும், தங்க நாணயங்களையும் சுதேச மிஷனுக்கென்று கொடுப்பார்கள். அக்காலத்தில் 1 பவுன் தங்க நாணயத்தின் மதிப்பு 15 ரூபாய்தான் ஆகும்.

சமீபத்தில் விவாகம் செய்துகொண்ட தம்பதிகள் நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்தனர். அம் மணப்பெண் ஒரு தங்க மோதிரத்தை ஆண்டவருக்குக் காணிக்கையாக என்னிடம் கொடுத்து ஆசீர்வாதம் பெற்று ஏகினள். இப்படிக் காணிக்கையாக வந்த நகைகளையெல்லாம் குருவானவர் எழுதிக்கொடுத்த ஜாபிதாவின்படியே, சென்னை சுதேச மிஷன் சங்கத் தலைவரிடம் கொடுத்துவிட்டு, இந்த ஒரு மோதிரத்தை மட்டும் விலைகொடுத்து வாங்கி, என் விரலில் அணிந்து கொண்டேன்.

1915ம் ஆண்டில், என் விவாக நிச்சயத்தன்று, எனக்கு நியமித்திருந்த பெண்ணின் விரலில் அந்த மோதிரத்தைப் போட்டுவிட்டேன். விவாகமான அடுத்த வருடம் அந்த மோதிரம் மறுபடியும் என் விரலுக்கு வந்துவிட்டது.

சுமார் முப்பது ஆண்டுகளுக்குப்பின், கோயம்புத்தூரில் நடைபெற்ற தாய்மார் கூட்டத்தில், இம் மோதிரத்தின் சரித்திரத்தைக் கூறினேன். என்ன ஆச்சரியம்! என் சொற்பொழிவு முடிந்தவுடன் ஒரு தாய் எழுந்து வந்து ஆனந்தக் கண்ணீருடன் சொன்ன செய்தியாவது:

அருமைச் சகோதரிகளே, இன்று என் மனதிலுள்ள ஆனந்தத்தை எப்படித் தெரிவிப்பேன்! எனக்குத் திருமணம் ஆனவுடன் நானும் என் கணவரும் இப்பெரியாரிடம் சென்று இம் மோதிரத்தைக் காணிக்கையாக அவர் கையில் கொடுத்த மணப்பெண் நான்தான். அக்காலத்தில் எங்கள் வசம் பதினொரு மோதிரங்கள் இருந்தன. பத்து மோதிரங்கள் போன வகையை நான் அறியேன். ஆனால் ஆண்டவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்த மோதிரமோ அவருக்குச் சாட்சியாகப் பிரகாசித்துக்கொண்டு இருப்பதை நான் கண்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறி உட்கார்ந்தாள். அந்த மணப்பெண் அக் கூட்டத்தில் இருப்பதை நான் அறிந்தவனேயல்ல.

நண்பர்களே, நாம் சம்பாதித்த ரூபாய்கள் எத்தனை? உண்ட விருந்துகள் எத்தனை? கண்ட காட்சிகள் எத்தனை? எல்லாம் மாய்கையாக மறைந்துவிட்டன. இறைவனுடைய சேவைக்கென்று நாம் செலவிடும் நேரமும், கொடுக்கும் பொருளும், நமக்கும், நமது பிள்ளைகளுக்கும், நமது பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் என்றும் குறையாத, அழியாத ஆசீர்வாதங்களாகத் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும் அல்லவா?

'உத்தம இதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்' *(1 நாளாகமம் 29:9)*

'நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக' *(கலாத்தியர் 6:9)*

77

# இறைவன் என்னை அழைத்த விதம்

அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் விக்கிரக ஆராதனையின் பேரில் வெறுப்பு வந்ததின் பயனாக மார்க்க ஆராய்ச்சியில் நான் இறங்கினேன்.

கிறிஸ்து சமயத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டிருந்தபடியால் 1904ம் ஆண்டில் கிறிஸ்தவர்கள் எப்படி கடவுளை பூஜை செய்கிறார்கள் என்பதை அறிவான் கருதிப் புதுக்கோட்டையிலிருந்த லுத்தரன் சபை கூரைக்கோவிலுக்கு ஓர் ஓய்வுநாள் காலையில் சென்று அதன் முன் வாசலில் ஒருவரும் அறியாவண்ணம் ஒளிந்துகொண்டிருந்தேன்.

அவ்வாலயத்தில் விக்கிரகம், தேங்காய், பழம், புஷ்பம் முதலியவைகளைக் கண்டேனில்லை. அங்கு வந்த பக்தர்கள் கண்களை மூடிக்கொண்டு யாரோ ஒருவரிடம் தமிழ் மொழியில் பேசினார்கள். அது ஜெபம் என்பதை அறிந்தேன். விக்கிரக ஆராதனை செய்யக்கூடாது என்ற சைவ சித்தர்களைப் போலவே இக்குழுவினரும் காணப்படுகிறார்களே. இக்கோவிலுக்குள் சென்று இவர்களுடன் அந்த இறைவனை வணங்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டாதாவென ஏங்கி நின்றேன். அத்தருணத்தில் கூரையிலிருந்து ஒரு சத்தம் கேட்டதுபோலிருந்தது. அது கூரையிலிருந்து உண்டான சத்தமன்று. பெக்சல் என்னும் பெயரையுடைய ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஆதியாகமம் 24:31ம் வசனத்தை ஆதாரமாகக்கொண்டு, 'கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும்; நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடு ஆயத்தம்பண்ணியிருக்கிறேன், வாரும்' என்னும் பொருளின் பேரில் தமிழில் பிரசங்கித்து 'ஒருவனுக்கு சந்தோஷமும், சமாதானமும் வேண்டுமானால் அவன் கிறிஸ்துவின் வழியாகத்தான் அப்பதவிக்குச் செல்லக்கூடும்' எனக் கூறி முடித்தார்.

நான் வெளியில் ஒளிந்துகொண்டிருந்ததை அவர் அறிந்தவரேயல்ல. வேர்த்ததே என் உடல். ஆடினதே என் ஆக்கை.

ஓடிவிட்டேன் அவ்விடத்தை விட்டு. இது தெய்வ அழைப் பாகக் காணப்பட்டதால் அன்றே கழுத்திலிருந்த ருத்திராட் சத்தைக் கழற்றிவிட்டதுமல்லாமல் விபூதி பூசுவதையும் விட்டுவிட்டேன்.

அன்றிலிருந்தே இரகசியக் கிறிஸ்தவனாக மாறிவிட்டேன். அதின் பயனாக வந்த துன்பங்கள், நிந்தைகளை ஈராண்டு களாகச் சகித்து 1908ம் ஆண்டு ஏப்ரல் 5ம் தேதி சென்னை சென்று சீயோன் ஆலயத்தில் கிறிஸ்து மதத்தை மனப்பூர்வமாக பலர்முன் தழுவினேன். அத்தினத்தில் என் வசம் ஒரு வேட்டியும், ஒரு சட்டையும், கையில் ஐந்தணுக்கள் மாத்திரமுமே இருந்தன. கடந்த ஏழு பத்து ஆண்டுகளாக அவர் என்னைத் தூக்கி, கழுவி, துடைத்து இராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும் முன் வைத்து நல்ல இல்லறத்தையும், இனிய குடும்ப வாழ்க்கையையும், அரசாங்கத்தில் சிறந்த உத்தி யோகத்தையும், அரசாங்கப் பட்டங்களையும், பதக்கங்களை யும், பத்திரங்களையும் பெறச்செய்து என்னையும், என் மக்கள், பேரப்பிள்ளைகளையும் நான் ஜெபித்து வந்த அளவிற்கு மேலாக ஆசீர்வதித்து உயர்த்தியிருப்பதைத் துதிக்க நாவுகள் பல எனக்கு வேண்டும். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

'நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்?'

*(ஆதியாகமம் 12:2)*

'அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன்'

*(ஏசாயா 51:2)*

'ஜீவ மார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்'

*(அப்போஸ்தலர் 2:28)*

## 78

# என் பணியைச் சிறப்பித்தார்

**நா**ன் தூத்துக்குடியில் இருந்த தருணம் அருகில் உள்ள சண்முகபுரம்தேவாலயத்தில் ஒரு ஞாயிறு காலையில் பிரசங்கம் செய்ய எனக்கு அழைப்பு வந்தது. அன்று 46ம் சங்கீதத்தின் சிறப்பைப்பற்றி பேச எனக்கு ஏவுதல் கிடைத்தது.

அதிகாலையில் அங்குசென்று ஆராதனை நடத்துகிறவரிடம் 46ம் சங்கீதத்தை மாறி மாறி வாசிக்கச் செய்ய நினைத் திருந்தேன். அன்று காலை இரண்டு பஸ் வண்டிகளிலும் இடம் கிடைக்கவில்லை. மூன்ருவது பஸ் ஏறி நின்றவாறே பிரயாணம் செய்து சண்முகபுரம் வந்ததும் ஆராதனை நடத்தப்பட்டு வருவதை அறிந்து உள்ளே உட்கார்ந்துகொண்டேன். என்ன ஆச்சரியம்! அந்த ஆராதனையை நடத்துகிறவர் 46ம் சங்கீதத்தை மாறி மாறி வாசிக்கச் செய்தார். அதன்பின் அச்சங்கீதத்தின் அழகைக் குறித்தும், பெருமையைக் குறித்தும் பிரசங்கித்தேன். எனது பணி சிறப்பாய் இருக்கும் வகையை கர்த்தர் பார்த்துக்கொண்டார்.

### என் பணி பதம்பெறச் செய்தார்

செங்கல்பட்டிற்கும் சென்னைக்கும் இடையில் சுமார் 30 மைல் இருக்கும். நான் செங்கல்பட்டில் பல்லாண்டு களுக்குமுன் வசித்து வந்த காலத்தில் சென்னையில் உள்ள சீமோன் ஆலயத்தில் ஞாயிறு காலை ஆராதனை ஒன்றில் பிரசங்கம் செய்ய எனக்கு அழைப்பு வந்தது. அன்று தற்பரீட்சை என்னும் பொருளின்பேரில் பிரசங்கம் செய்ய நினைத்து சீக்கிரத்தில் அங்கு சென்று கின்னரம்வாசிப்பவரைப் பார்த்து, 'ஆராய்ந்து பாரும் கர்த்தரே' என்னும் ஞானப் பாட்டைப் பாடவைக்கவேண்டும் என்று நினைத்தேன். அன்று இரயில் வண்டி தாமதமாக வந்தது. நான் அந்த வண்டியில் ஏறி துரிதமாக எழும்பூரில் இருந்து சீயோன் ஆலயத்திற்குப் போனேன்.

ஆராதனை ஆரம்பம் ஆகி நடந்துகொண்டிருந்தது. நான் பக்கத்தில் இருக்கும் கதவு வழியாகச்சென்று என் இடத்தில் அமர்ந்துவிட்டேன். நான் பிரமிப்பு அடையும் வகையில் 'ஆராய்ந்து பாரும் கர்த்தரே?' என்னும் ஞானப்பாட்டை சபையார் பாடினார்கள். அதன் தொடர்ச்சியாக தற்பரீட்சை என்னும் பொருளை விளக்கிக்காட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது!

பரிசுத்த ஆவியின் அருளை நினைத்துப் பாருங்கள். என் பணி பதம் அடையும் வகையைக் கர்த்தர் பார்த்துக் கொண்டார்.

'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்' *(சங்கீதம் 46:10)*

'தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்' *(சங்கீதம் 139:25)*

'கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாய் இருக்கிறான்' *(1 கொரிந்தியர் 6:17)*

## 79
# கேட்கப்பட்டது

பல்லாண்டுகளாக நான் சென்னையில் ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் ஒவ்வொரு தமிழ் கிறிஸ்தவக் கோவிலிலும் பிரசங்கம் பண்ணி வந்தேன்.

பிரசங்க வேளையில் அணிந்துகொள்ளக்கூடிய கேசக், சர்பிளிஸ் என்னும் கோவில் உடுப்புகளை இரு குருமார்கள் எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தனர். அந்த உடுப்பு களைக் கோவிலுக்கு எடுத்துச்செல்ல ஒரு சிறு கைப்பெட்டியின் தேவையை உணர்ந்து கடைக்குச் சென்றேன். அங்கு இருபது ரூபாய் விலையுள்ள ஓர் அழகிய சிறு பெட்டியின்மேல் என் எண்ணம் சார்ந்தது. ஆனால், கையில் காசில்லை. அக்காலை யில் என் வீட்டில் அப்பெட்டிக்கு வேண்டிய பணத்தை எம் பெருமானிடம் ஜெபவாயிலாகக் கேட்டேன்.

பல்லாண்டுகளாக என்னையும் என் பணியையும் அறிந்த டாக்டர் மிஸ். ஆனி பிச்சமுத்து அம்மாள் வட இந்தியாவில் டெல்லிக்கு அருகிலுள்ள ஒரு பெரிய வைத்தியசாலையில் பணி புரிந்து வந்தார்கள். நான் ஜெபம்பண்ணின இரண்டொரு தினங்களுக்குப்பின் அவ்வம்மையாரிடமிருந்து ரூபாய் இருபது மணியார்டர் மூலம் வந்தது. அந்த மணியார்டர் கூப்பனில் 'இக்காலையில் இப்பணத்தை உங்களுக்கு அனுப்ப எனக்குப் பலத்த ஏவுதல் கிடைத்தது. அதைப் பெற்றுக்கொள்ளுங் கள்' என ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்கள். அந்தத் தேதி யையும் அவர்கள் எழுதின கடிதத்தையும் கவனிக்குங்கால் நான் சென்னையில் ஜெபம்பண்ணின அதே காலையில் அத் தொகையை எனக்கு அனுப்ப அந்த அம்மாவுக்கு ஏவுதல் கிடைத்ததென்று அறிந்து இறைவனைத் துதித்தேன். அம்மாது ஓய்வெடுத்து தற்பொழுது மதுரையிலிருக்கின்றார்கள்.

திருச்சி பிஷப் அவர்கள் அபிஷேக ஆராதனைக்குத் தஞ்சா வூருக்கும் வேதநாயக சாஸ்திரியார் நூற்றாண்டு விழாவிலும் கலந்துகொள்ள அடியேனுக்கழைப்பு வந்தது. என் வேலை களுக்கிடையில் அதையும் ஏற்றுக்கொள்ள ஏவுதல் கிடைத்த தின் பயனாக, நான் புறப்படும் முதல் நாளில் எனக்குக்

கைக்குட்டை ஒன்றேனுமில்லையென்பதைக் கண்டேன். அழுக்கும் கிழிந்துமுள்ள குட்டைகளை உபயோகப்படுத்த என் மனமிடங்கொடுக்கவில்லை. அப்போது அடியேன் 46ம் சங்கீதத்தின் சிறப்பை ஆராய்ச்சி வாயிலாக எழுதிக்கொண்டிருப்பதால் புதுக்குட்டை வாங்கவோ, தைத்துக்கொள்ளவோ எனக்கவகாசமில்லை. இரண்டு குட்டைகளாவது அதி அவசரத் தேவையாயிருந்தது. இறைவனிடம் வேண்டிக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்தேன்.

ஆ! என்ன ஆச்சரியம்! நான் தஞ்சாவூருக்குப் புறப்படும் முந்தின தினம் எண்பது மைல் தூரத்திலிருந்த வேலூர் திருமதி டெய்சி பொன்னுசாமி அம்மாள் அவர்கள் இரவு ஒன்பது மணிபோல் வந்து கதவைத் தட்டினர். யாரோ ஜெபத்திற்கு வந்திருக்கிறார்களென வெண்ணி ஓடித் திறந்தேன். உடனே அம்மாது முகமலர்ச்சியுடன், 'ஐயா, நீங்கள் தஞ்சாவூருக்குப் போகிறபடியால் உங்களுக்குக் கைக்குட்டை வேண்டுமென்று எனக்கோருணர்ச்சி உண்டானது. உடனே அதைத் தயாரித்தேன். ஆனால் வெல்லூரிலிருந்து அதை உங்களுக்கு எப்படி அனுப்புவது என்று திகைத்து நின்றேன். நான் நினையாவண்ணம் சென்னைக்கு ஒரு பயணம் வாய்த்தது. நாளை அதிகாலை ஐந்து மணிக்கு நான் மறுபடியும் வெல்லூர் போகிறேன்' என மொழிந்து பன்னிரண்டு மல் கைக்குட்டைகளைக் கொடுத்தனர். என் பிரயாண தேவைக்கு வேண்டிய கைக்குட்டையின் அவசியத்தை இவ்வம்மையாருக்குத் தெரியப்படுத்தினது யார்?

அடியேனது உடல் சிலிர்த்தது. உள்ளத்தை உயர்த்தி அப்பனைத் துதித்தோம்.

நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட 65 ஆண்டுகளாக எனக்குத் தேவையானவைகளை இறைவன் கவனித்துக் கொள்கிறார்.

**'கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்'**

*(சங்கீதம் 139:1)*

**'நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்'** *(மாற்கு 11:24)*

## 80

# ஆண்டவருக்குத் தெரியும்

நெல்லை நாட்டில் நான் மூன்றுண்டுகள்போல் அழைப்பின் பேரில் எழுப்புதல் கூட்டங்கள் நடத்திக்கொண்டு வந்த தருணம். அக்கூட்டங்களில் உற்சாகத்துடன் பாடக்கூடிய பாடல்கள் சிலவற்றை நான்கு பக்கங்களில் அச்சடித்துக் கொள்ள நினைத்து ஓர் அச்சு நிலையத்தில் அதைக் கொடுத்தேன். அதற்கு முன்பணமாக அத்தருணத்தில் ஆர்ச் டீக்கனுயிருந்த டாக்டர் அப்பாசாமி அவர்கள் நான் எதிர்பாரா வண்ணம் ரூ. 10 கொடுத்தார்கள். அதற்குமேல் நான் அதை ரூ. 25 கொடுத்து அத்தாள்களைப் பெறவேண்டியவன். நான் அதை ஒருவருக்கும் சொல்லாமல் இறைவனிடம் மட்டும் ஜெபவாயிலாக இத்தேவையைப் பகிர்ந்து வந்தேன். உடனே நான் இடையன்குளம் வந்து அங்கு ஒரு வாரம்போல் கூட்டங்கள் நடத்தி வந்தேன். ஆவியின் அருள் அக்கூட்டங்களில் பொழிந்து வந்த வகையை நான் எழுதாமலிருந்தால் நலம். இந்நாள் அங்கிருந்த ஞானமணி என்னும் பெரியார் அக்கூட்டங்கள் முடிந்தபின் ஒரு மாலை தேனீர் சிற்றுண்டிக்காக என்னை அழைத்திருந்தார். அங்கு வந்திருந்த சுமார் 40 பேர்களுக்கு முன் 'இரட்சிப்புக்குப்பின் என்ன' என்னும் பொருளைப்பற்றி கோவிலில் பேசினதை இங்கு தொடர்ந்து பேசினேன். பலர் எழுந்து சிறந்த சாட்சிகளையும் பகர்ந்தனர். முடிவில் அப்பெரியார் என்முன் வந்து ரூ. 25 காணிக்கை கொடுக்க ஏவப்பட்டுள்ளோம், அப்பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தாம்பாளம் ஒன்றில் வைத்துக் கொடுத்தார்கள். என் ஊழியத்திற்குத் தேவையானவைகளை அவர் பல்லாண்டுகளாகப் பார்த்துக்கொண்டு வரும் விதத்தை அறிந்து வியந்தேன்.

இரட்சண்ய சேனையை நாட்டி நடத்தின வில்லியம் பூத் என்பவர் 'கடவுளைக் கடவுளாக மதியுங்கள்' என்றும், அவரை நாம் வேண்டிய அளவிற்கு இன்னும் உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை என்றும் அடிக்கடி சொல்லுவாராம். அது எவ்வளவு உண்மை. அவருடைய இலவசமான கிருபையை நாம் பெற்றுக் களிப்போம், சுகிப்போம்.

**'கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது'** *(சங்கீதம் 25:14)*

**'உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறுர்'** *(மத்தேயு 6:8)*

81

# கடவுள் கவனித்துக்கொள்வார்

**சா**து சுந்தர்சிங் என்னும் பெரியார் சென்னையில் தோன்றின காலத்திற்கு முன் ஓர் ஆங்கிலத் தொண்டர் தமிழ் நாட்டில் சுவிசேட நட்சத்திரமாக விளங்கினர்.

அவர் ஐ. சி. எஸ். பதவி பெற்று ஒரு மாவட்டத்திற்குக் கலெக்டராக இருந்தபின் இயேசு பெருமானின் அழைப்பை ஏற்று அவ்வுயர்ந்த பதவியை விட்டுவிட்டு சுவிசேடகனுக மாறினர். அவர் பிரசங்கம் செய்தால் மக்களுடைய உள்ளங்கள் அதிர்ச்சி அடையும். ஆயிரக்கணக்கான மக்கள் முன் நின்று ஆங்கிலத்தில் கிறிஸ்து பெருமானின் சிறப்பை வீரியத்துடன் எடுத்துக்காட்டுவார்.

இரட்சண்ய சேனைக்கு அதிபராயிருந்த காலஞ் சென்ற ஜெனரல் பூத் டக்கர், M.A., I.C.S. என்னும் பெயரை யுடையவர்தான் அவர்.

இத்தொண்டர் பக்கீர் சிங் என்னும் பெயருடன் தலையில் முண்டாசும் இடுப்பில் மல் வேட்டியும் சாதாரண சட்டைக்கு மேல் அங்கவஸ்திரமும் அணிந்து வெறுங்காலுடன் வருவார். இப் பெரியார் சென்னை மூர் மார்க்கெட்டுக்கு அருகில் உள்ள விக்டோரியா மண்டபத்தில் சொற்பொழிவாற்றப் போவதாகவும் அதற்கு இரண்டு அணு கட்டணம் என்றும் கேள்விப் பட்டேன். அந்த இயக்கத்தைச்சேர்ந்த வேமெருரு ஆங்கிலேயர் என்னைக் கட்டணம் இல்லாமல் அக்கூட்டத்திற்குக் கொண்டு போவதாகச் சொல்லி வாசலில் காத்திருக்க விரும் பினர். என் கையில் இரண்டு அணு இல்லை. அருமையான பாட்டுடன் கூட்டம் ஆரம்பமானது. என் உள்ளம் அங்கு போகத் துள்ளிக்கொண்டிருந்த சமயத்தில் எனக்கு இறக்கை உண்டா எனத் தடவிப் பார்த்தேன் என்றால் மிகை ஆகாது. மேலே போகக்கூடாத நிலையில் மனம் உடைந்தவனுக வீட்டிற்குத் திரும்பிவிட்டேன்.

சுமார் இருபது கெஜம் வந்தபின் மூர் மார்க்கெட் வாசலடியில் இரண்டு அணு வெள்ளி நாணயம் கீழே கிடந்ததை எடுத்துக்கொண்டு போய் கட்டணத்தை கட்டி மேலே போய்விட்டேன். உடனே என் நண்பர் ஐடி வந்து 'ஐயா எனக்குக் கடினமான வேலையைக் கொடுத்துவிட்டார்கள், கீழே வர முடியவில்லை. எனினும் ஆண்டவர் உங்களை மேலே கொண்டு வரச்சொல்லி அவரைக் கெஞ்சி நின்றேன். நீங்கள் வந்து விட்டீர்கள்' என்று சொல்லி என்னை அழைத்துப் போய் முதல் வரிசையில் உட்கார வைத்தார்.

இலையைத் தவிர வேறொன்றும் இல்லை என்னும் பொருளின் பேரில் பொழிந்தாரே பூத் டக்கர். அத் தூதின் விளக்கம் இன்றும் என் மனதில் உள்ளது. இப்பெரும் பாக்கியத்தை நான் அடையும் வகையைக் கர்த்தர் பார்த்துக்கொண்டார்.

'கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு; அவர் உன்னை ஆதரிப்பார்' *(சங்கீதம் 55:22)*

'அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது' *(அப்போஸ்தலர் 4:35)*

# 82
# யாவர் இம் மூவர்?

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் பர்மாவில் யுத்தம் நடந்த காலத்தில் இரங்கூன் அத்தியட்சாதீன அலுவலகத்தை டெல்லிப் பட்டணத்திற்குக் கொண்டு வந்து விட்டார்கள். அதற்கு உதவிபுரிய எனக்கு வந்த அழைப்பின்பேரில் டெல்லி பட்டணத்திற்குச் சென்ற தருணத்தில் திரு. வில்லி ஆதிசேஷய்யா, அவர் மனைவி சகுந்தலா அம்மாளையும் அங்கு கண்டேன். அவர்கள் இருவரும் சிசுக்களாக இருந்த காலத்தி லேயே நான் நன்கு அறிந்துள்ளமையால் ஓர் இரவு உணவு அருந்த அவர் அகத்திற்குச் சென்றேன். உணவு அருந்திய பின் டாங்கா என்னும் ஒற்றைக் குதிரை வண்டியில் ஏறி; இரவில் டெல்லி வந்துகொண்டிருந்த தருணம் நள்ளிரவில் குதிரை நடுவழியில் படுத்துவிட்டது. வண்டி ஓட்டிக்கு ஆங்கிலம் தெரியாது. எனக்கும் இந்துஸ்தானி நன்ருகப் பேச வராது. 'குதிரை தூங்கும் நேரம் வந்துவிட்டது. நீங்கள் நடந்து போங்கள்' என்று உரைத்துவிட்டானே வண்டிக் காரன்.

அந்த நள்ளிரவு நேரத்தில் அங்கு மனுஷ சஞ்சாரம் இல்லை. நடுக்காட்டில் திக்கு முக்கு தெரியாமல் விடப்பட்டிருந்தேன். டெல்லிப் பட்டணத்திற்குப் பாதையும் தெரியாது. ஒரு குறுக்குப் பாதையைக் காட்டி அதில் நடந்து போகச் சொன்னுன். நான் ஆங்கிலத்தில் என்ன சொல்லியும் அவ னுக்கு விளங்கவில்லை. இச் சூழ்நிலையில் என் இதயத்தை ஏறெடுத்து இறைவனிடம் புலம்பினேன். 'அப்பனே இந் நகருக்கு நான் வியாபாரத்திற்காக வந்தவனல்ல. உமது பணியை ஆற்ற நீர்தான் அழைத்து வந்தீர். இப்புதிய ஊரில் இந்த நள்ளிரவில் நான் தங்கியிருக்கும் இல்லத்திற்கு என்னை அழைத்துப்போக உமது தயவு தேவை' என பலவாறு புலம்பின பின் கண்களைத் திறந்தேன்.

தூரத்தில் நின்ற மூவரில் ஒருவர் ஓடிவந்து, 'ஐயா நீங்கள் எந்த ஊர்' என்று வினவினர். அதற்கு, 'நான் தமிழன் என்பதை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்' என்றேன். அதற்கவர்

என் முக ஜாடையிலும் என் பேச்சிலும் நான் தமிழன் என்பதை அறிந்துகொண்டதாகச் சொன்னூர். உடனே நான் தஞ்சாவூர் டவுனில் இருந்து வந்தவன் என்றேன். அவர் என்னைக் கட்டியணைத்து 'நானும் தஞ்சாவூரான்தான். என் ஊர்க்காரரர் ஒருவர் இச்சூழ்நிலையில் தவிப்பதைப் பார்க்க என் மனம் சகிக்கவில்லை. நீங்கள் போகும் இடத்திற்கு நாங்கள் உம்மை அழைத்துச் செல்வோம்' என்று மூவரும் என்னை அழைத்துச் சென்றூர்கள். டெல்லிப் பட்டணம் அரை மைல் தூரம் இருக்கும். நடந்து வருகையில் அவர்கள் சொன்ன விஷயங்கள் என் உள்ளத்தை உலுக்கின.

'ஐயா, இப்பக்கத்தில் திருடர்கள் நடமாட்டம் உண்டு. உள்ளூர்பாஷை தெரியாத நீங்கள் அக்குறுக்குப் பாதையில் சென்றிருந்தால் திருடர்கள் உங்களைக் கொன்று சாக்கடையில் தள்ளியிருப்பார்கள். இந்நேரத்தில் நாங்கள் மூவரும் இங்கு வரக் காரணமே இல்லை. இந்த ஆபத்து வேளையில் உங்களுக்கு உதவிபுரியத்தான் கடவுள் எங்களை அனுப்பியுள்ளார்' என்று பேசிக்கொண்டே வந்தபின் நான் தங்கும் வீட்டிற்கு வந்து மெல்லிய குரலில் சுசீலாவைக் கூப்பிட்டேன். சில விஞடிகளுக்குப்பின் அவள் எழுந்து விளக்கைப்போட்டு கதவைத் திறந்து மனக்குழப்பத்துடன் 'மாமா, மாமா, இந்த இரவில் அமாவாசை இருட்டில் நீங்கள் எப்படி வந்தீர்கள்' எனக் கேட்டாள் விழிகள் கலங்க. நான் உடனே 'சுசீலா இந்த மூவர் என்னை அழைத்துக்கொண்டு வந்தார்கள்' என்றியம்பி அவர்களைச் சுசீலாவுக்கு அறிமுகப்படுத்தத் திரும்பினேன்.

என்ன ஆச்சரியம்! கண்டேனில்லை அம்மூவரையும். வெளி விளக்கைப் போட்டு அத்தெருவெல்லாம் தேடிப் பார்த்தேன். அவர்களைக் காணவில்லை. நான் பிறகு உள்ளே வந்தவுடன் அம்மூவர் என் பின் நின்றதைக் கதவைத் திறந்தவுடன் சுசீலா பார்த்ததாகச் சொன்ஞள். இதைப் படிக்கும் பக்தரே அம் மூவர் யாவர் என்பதை யூகித்துச் சொல்லும் பார்ப்போம்.

'தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது: இதோ மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றூர்கள்' *(ஆதியாகமம் 18:2)*

'தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்' *(மத்தேயு 4:11)*

83

# மரணத்திற்குத் தப்புதல்

நான் இரங்கூனில் இருந்த காலத்தில் ஒரு மாலை என் படுக்கையில் படுத்தவண்ணம் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். 'சீக்கிரம் எழுந்து வெளியே போ' என்று ஒரு சத்தம் என் காதுக்கு எட்டியது. அங்கு என் மனைவியும், பிள்ளைகளும் இல்லாததால் அச்சத்தத்தை மதியாது தொடர்ந்து படிக்கத் துவங்கினேன். யாரோ ஒருவர் என் தோளில் அடித்து 'உடனே வெளியிலே போ' என்று சொன்னதாக உணர்ந்தேன்.

அந்த அடியை வாங்கினவுடன் நான் எழுந்ததும், என் முதுகின் கீழ், நடுக் கட்டிலில் கண்டன் கருவளை என்னும் ஒரு விஷப் பாம்பு நெளிந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்து முனுசாமி என்னும் என் வேலைக்காரன் அதை விறகுக் கட்டையால் அடித்துக் கொன்றான்.

ஒருவரும் இல்லாத அறையில் என் தோளில் அடித்த கரம் சுகம் அளிக்கும் கரமாகத்தானே இருக்கவேண்டும்.

**'கர்த்தர் உன்னைக் காக்கிறவர்'** *(சங்கீதம் 121:5)*

**'நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்'** *(சங்கீதம் 23:4)*

**'தேவதூதர்கள் அவருக்கு ஊழியம் செய்தார்கள்'** *(மாற்கு 1:13)*

84

# தாலியை என்ன செய்வது?

IA 10-35

மனைவி இறந்த பின்பு, மனைவிக்குப் புருஷன் கட்டியிருந்த தாலியை என்ன பண்ணுவது? எனது வழக்கம் யாது தெரியுமா? என் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறுகிறேன்:

'ஐம்பத்தெட்டு ஆண்டுகளுக்குமுன் கனேன் கிளார்க் ஐயரவர்களின் தாயார் என் கையிலிருந்த தாலியை வாங்கி கோயிலைத் திறந்து ஆல்ட்டர் மேஜையில் அத்தாலியை வைத்து, ஜெபித்து, ஆசீர்வதித்து, திரும்ப அதை என் கையில் கொடுத்து என்னைத் திருமணத்திற்கு அனுப்பினார்கள். என் மனைவி 54 ஆண்டுகள் 40 நாட்கள் எனக்குப் பலவிதத்திலும் ஆசீர்வாதமாக இருந்ததற்காக இறைவனுக்கு நன்றியைத் தெரிவிக்க சீயோன் ஆலய கோயில் காணிக்கையில் தாலியைப் போட்டுவிட்டேன். அதே தாலி, அதே கோயிலில் அதே ஆல்ட்டரில், ஸ்தோத்திரக் காணிக்கையாக அமர்ந்திருப்பது நியாயந்தானே! குருவைத்தவிர வேறே யாருக்கும் இது தெரியாது. ஆராதனைக்குப்பின் அதை ஏலம் போட்டார்கள். ஏலத்தின் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு இராப்போஜன இரசம் வைப்பதற்கு ஒரு நல்ல பாத்திரம் வாங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்.'

தாலி யாருக்குச் சொந்தம் என்பதை இப்பொழுது புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்

'கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்' *(யோபு 1:21)*

'தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்'
*(2 கொரிந்தியர் 9:7)*

# 85

# ஒரு நூதன ஆராதனை!

அமெரிக்காவிலுள்ள ஒரு கிராம சபையில் இருந்து மாற்றப்பட்ட குருவுக்கும், அவருக்குப் பதிலாக வந்துள்ள குருவுக்கும் சனிக்கிழமை மாலையொன்றில் மரியாதை செய்து வாழ்த்துதல் கடிதங்கள் வாசித்தார்கள். புதியதாக வந்துள்ள குருவுக்குக் கொடுத்த கடிதத்தில் 'எங்கள் சபை குளிரும், அனலும் இல்லாமல் செத்துக் கிடக்கிறது, நீர் அதற்குப் புத்துயிர் கொடுக்கவேண்டும்' என்று கண்டிருந்தது.

மறுநாள் ஞாயிறு. காலையில் புது குரு செய்த பிரசங்கத்தில் 'அருமை தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் சபை செத்துக்கிடப்பதாகவும், அதற்கு புத்துயிர் கொடுக்க என்னை எதிர்பார்ப்பதாகவும் எனக்கு அறிவித்தீர்கள். செத்த சபைக்கு உயிர் கொடுப்பது என்னால் கூடிய காரியமல்ல, அச்சபையை வைத்திருப்பதும் மதியல்ல. எனவே, திங்கட்கிழமையாகிய நாளை மாலையில், செத்த சபையை நாம் தூக்கிக்கொண்டுபோய் அடக்கம் செய்துவிடலாம். உங்கள் பழைய நண்பராகிய சபைக்கு உங்கள் நன்றியைக் காட்ட, நாளை மாலை ஆராதனைக்கு திரண்டு வாருங்கள்' என அழைத்தார்.

மறுநாள் அந்த நூதன ஆராதனையைக் காண மக்கள் பெருங் கூட்டமாக வந்திருந்தார்கள்! அத்தருணத்தில் சவப்பெட்டி ஒன்றைத் துணியினால் மூடி, கோயில் முன் வாசலில் வைத்திருந்தார் குரு. சவச் சடங்கு செய்யும் முறையில் பாட்டு, ஜெபங்கள், பிரசங்கம் முதலியவை நடந்தன. அதன்பின் குரு:

'அருமை மக்களே, இந்தச் செத்த சபையின் சடலம் இந்தப் பெட்டிக்குள் இருக்கிறது. அதன் முகத்தை மட்டும் தான் நீங்கள் பார்க்கலாம். அச்சபையின் பேரிலுள்ள அன்பைக் காட்டுவதற்கு நீங்கள் ஒருவர்பின் ஒருவராக வந்து

பெட்டியை மூடுமுன் துரிதமாகப் பார்த்துவிட்டுப் போங்கள்' என்று சொல்லி மூடியிருந்த துணியை எடுத்துவிட்டார்.

பலர் ஒருவர்பின் ஒருவராகச் சென்று அப்பெட்டியைக் குனிந்து பார்த்தவுடன் திடுக்குற்று தத்தம் இருக்கையை அடைந்தார்கள். காரணம், அச்சவப் பெட்டியின் தலைப் பக்கத்தில் ஒவ்வொருவரும் கண்டது அவரவரின் முகமே! அந்தச் சவப் பெட்டியின் தலைமாட்டில் ஒரு முகம் பார்க்கும் கண்ணடியை குரு வைத்திருந்தார். அதைப் பார்த்தவர்களெல்லாம் தாங்கள் அப்பெட்டியில் படுத்திருந்த பாவனையைக் கண்டு வேறுபட்ட முகத்துடன் சென்றார்கள்.

அந்த வரிசை முடிந்தவுடன் குருவானவர் எழுந்து 'அருமை மக்களே! நாம் அனைவரும் நமது உடல் மூடிய சடலத்தையும், நமது முகத்தையும் அப்பெட்டிக்குள் பார்த்தோம். அப் பெட்டிக்குள் கிடப்பது செத்த சபையல்ல. நாம்தான்! சபை செத்துப்போகவில்லை. சபையைப்பற்றி மகாத்மா பவுல் அவர்கள் சொல்லியுள்ள பல இடங்களில், அது வரம் பெற்றது என்பதைக் காட்ட கறையும் திரையும் இல்லாத சபை என்று விளக்கியுள்ளார். எனவே சபை சாகவில்லை. நாம்தான் செத்திருக்கிறோம். நமக்குத்தான் அனலும், ஆர்வமும், புத்துயிரும் தேவை. அதைப் பெறுகின்ற முறையைக் காட்டியுள்ள வேதத்தைப் பின்பற்றினால், நமக்கு உயிரும் சபைக்குப் புத்துயிரும் கிடைக்கும். சபை என்றால் கட்டடம் அல்லவே! அது மாந்தராகிய நம்மைத் தான் குறிக்கும். நீங்களும், நானும் ஏகோபித்து உழைத்து அப்பாக்கியத்தைப் பெறுவோமாக' எனக் கூறி முடித்தார்.

'நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்த வனாய் இருக்கிறாய்' *(வெளிப்படுத்தல் 3:1)*

'நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்' *(தானியேல் 5:27)*

## 86

# ஒரு நூதன பாவ அறிக்கை!

பல்லாண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்தவ ஆசிரமத்தில் தந்தை பால் கடம்பவனம் அவர்கள், பெருங் கூட்டமான மக்கள் முன் எழுப்புதல் கூட்டம் நடத்தின சமயத்தில், ஒரு மாலையில் பாவ அறிக்கையைப்பற்றித் தெளிவாக விளக்கினுர். அது உள்ளங்களைக் கலக்கினதின் பயனுக சிலர் அழவும் சிலர் பிணங்கவும் ஆரம்பித்தார்கள். உடனே அந்த ஆசிரமத்தின் அதிபதியான பெரியண்ணன் செல்வரத்தினம் அவர்கள் எழுந்து 'நீங்கள் எல்லோரும் வீட்டிற்குப் போனவுடன் உங்கள் பாவங்களைத் தெளிவாகக் காட்டி ஆண்டவருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். அதில் உங்கள் விலாசம், தேதி, முழுப் பெயரும் இருக்கவேண்டும். செய்த பாவங்களை அணு அணுவாகக் காட்டியுள்ள அக்கடிதத்தை ஒருவருக்கும் காட்டாமலும் ஒருவர் கையிலும் சிக்காமலும் ஒளித்து வைத்து நாளை கூட்டத்திற்குக் கொண்டுவாருங்கள்' என்ருர்.

மறுநாள் மாலை தந்தையார் பாவ மன்னிப்பைப்பற்றி விளக்கின சமயத்தில் பெரியண்ணன் அக்கூட்டத்திற்குள் நுழைந்து ஆண்டவருக்கு எழுதின சுமார் 50 கடிதங்களைக் கொண்டுவந்து தாம்பாளத்தில் வைத்து, அவைகள் காற்றில் பறந்துபோகாமல் அதின்மேல் பரிசுத்த வேதாகமத்தை வைத்து அத்தாம்பாளத்தைத் தந்தையார் கையில் கொடுத்தார்.

அவர் அதை மூலஸ்தானத்திற்குக் கொண்டுபோய் மௌனமாக ஜெபித்தபின் அந்தத் தாம்பாளத்தைத் தலைக்குமேல் தூக்கி திரியேக தெய்வத்தை அழைத்து இயேசு பெருமானின் பலியான இரத்தத்தின் வல்லமையால் அக்கடிதத்தில் உள்ள பாவங்களை மன்னிக்கும்படி உரத்த சத்தமாகப் பரிந்து பேசி, ஜெபம் பண்ணின பின்பு அக்கூட்டத்தையும் முடித்து விட்டார். அதன் பின்பு பெரியண்ணன் அங்கிருந்தவர்களைப்

பத்து நிமிடம்போல் இருக்கச் சொல்லி அத்தாம்பாளத்தைக் கோயில் முன் வாசலில் கொண்டுவந்து பூமியில் கொட்டி விட்டு, பெரியண்ணனும் தந்தையாருமாக அக்கடிதங்கள் அனைத்தையும் எழுதினவர்கள் முன்பாக நெருப்புக் கொளுத்தி எரித்துவிட்டார்கள்.

அடடா, என்ன ஆனந்தம்! அக்கடிதத்தை எழுதினவர்கள் தங்கள் கடிதத்தை ஒருவரும் பார்க்காததையும், அது சுட்டு எரிக்கப்பட்டதையும் பார்த்து தங்கள் பாவங்களைப் பரிசுத்த ஆவியானவர் அக்கினியில் போட்டுவிட்டபடியால், 'இனி அந்தப் பாவங்களைச் செய்யவும் மாட்டோம், அதைப்பற்றிப் பேசவும் மாட்டோம்' என்று களிப்புடன் சொல்லிக்கொண்டு போனார்கள்.

'நீங்கள் மனம் திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்' *(எசேக்கியேல் 18:30)*

'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்' *(ரோமர் 5:8)*

'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' *(1 யோவான் 1:9)*

# 87

# ஓர் அளவுகோல்!

**வ**ருடப் பிறப்பு ஒரு வைதீகப் பண்டிகையல்ல. நாட்களை வகுத்துக் கொடுக்கும் முதல் நாள். அந்நாளையும் பாராட்டி இயேசு பெருமானை வாழ்த்துகிறோம்.

சற்றுத் திரும்பிப் பார்த்தால் பல ஆண்டுகள் என்னும் படியில் ஏறி வந்திருக்கிறோம். ஆனால் பக்தியில் வளர்ந்து வந்திருக்கிறோமா?

ரஸ்தாவை அளவுகோல்கொண்டு அளந்து பார்ப்பதுபோல் நமது வாழ்க்கையையும் அளந்து பார்க்கும் நன்னாளே புத்தாண்டு ஆகும். 'நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறீர்கள்.'

ஆவி என்னும் கெஜக்கோல், சர்தை சபைக்குச் சொல்லிய வண்ணம். 'நீ உயிர் உள்ளவன் என்று பெயர் பெற்றிருந்தும் நீ செத்தவனாய் இருக்கிறாய்' என்று உன் சபையைப் பார்த்துச் சொல்லுகிறதா? வருடப் பிறப்பின் கொண்டாட்டம் உண்பதிலும் உடுப்பதிலும் வாழ்த்துதலிலும் மட்டுமல்ல! கடந்த ஆண்டை நிறுத்துப் பார்த்து புத்தாண்டில் எப்படி நடந்துகொள்ளப் போகிறோம் என்று தீர்மானித்துக்கொள்வதுதான் வருடப் பிறப்பின் கொண்டாட்டமாகும். வீடு கட்டுகிறவன், அந்தச் சுவர் பூமிக்கு அது செங்குத்தா என்பதைப் பார்க்க ஓர் ஈயக்குண்டு என்னும் தூக்கு நூலால் அளந்து பார்த்து, அதைச் சரியாக வைக்கிறான். அவ்வாறு அச்சுவர் அமைக்கப்படாவிடில் மேன் மாடியினுடைய கனத்தை அச்சுவர் தாங்காது. நமது வார்த்தையையும், வாழ்க்கையையும் அளந்து பார்க்கும் கருவிதான் புத்தாண்டு நன்னாள். பிறரைப் பார்த்து நகைக்கிறோமேயொழிய நம்மை நாமே அளந்து பார்ப்பதே இல்லை. ஒரு தாய் கடைக்காரனிடம் சென்று, 'நான் பத்துப்பலம் சர்க்கரைக்குப் பணம் கொடுத்தனுப்பினேனே, இந்த டப்பாவை நிறுத்துப்பாரும். அதில் அந்த அளவு சர்க்கரை இருக்கிறதா?' என்றாள். அதற்

குக் கடைக்காரன், 'அதைவிட பாதையில் எவ்வளவு சர்க்கரை தின்றிருக்கிறுன் என்றறிய உங்கள் மகனை நிறுத்துப் பார்க்கவேண்டும்' என்றுன். நம்மை நாமே அளந்து பார்க்கிறேமா?

சில வர்க்கத்தைச் சேர்ந்த குரங்கு, தனக்குக் கோபம் வந்தால் தன் தொடையையும் காலையும் கடித்துக்கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். கோபக்குணமுள்ள குரங்கின் உடம்பெல்லாம் புண். அவ்வாறே நாம் கோபத்துடன் மற்றவர்களைக் கடிந்துகொள்ளும்பொழுது, நமது சுயமரியாதையைக் கடித்துச் சின்னப்படுத்துகிறேம். இவ்வுலகில் உத்தமனுக வாழ்வது ஒருவிதத்தில் எளிதல்ல, மற்ருெரு விதத்தில் பக்தர்களுக்கு மிகவும் எளிதாகும். எனவே மற்றவர்களுடைய சொல்லையும், வாழ்க்கையையும் அளந்து பார்க்க நமது கையில் கெஜக்கோல் வேண்டாம். நீ எந்த அளவில் மற்றவனை அளந்து பார்க்கிருயோ, அந்த அளவில் நீ அளக்கப்படுவாய்! 'நல்ல துவக்கம் அரைப் பந்தயம்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அத்துவக்கத்தை முழுப் பந்தயமாக்கிக்கொள்ளவேண்டும். வருந்தினுல் வராதது ஒன்றுமில்லை. இப்பந்தய ஓட்டத்தில் வெற்றிபெற இவ்வாண்டைச் சல்லடையாகப் பாவித்துப் பதரையும் உமியையும் ஒதுக்கி வைத்து அதிலுள்ள மணியை நமது வாழ்வில் கலந்து இறையருள் பெற்றுக் களிப்போமாக.

**'நாங்கள் ஞான இதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குத் தந்தருளும்'** *(சங்கீதம் 90:12)*

**'நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும்'**

*(எபிரேயர் 10:25)*

# 88

# பக்தியின் அளவு!

உலகத்திலுள்ளவைகள் எல்லாம் அளந்து நிதானிக்கப் பட்டவைகள். நாம் நடக்கும் தூரம் மைலாகவும், நாம் கடக்கும் நேரம் மணியாகவும், தானியங்கள் படியாகவும், துணிகள் கெஜமாகவும், மீட்டராகவும், தண்ணீர் கேலனுக வும், நமது நெஞ்சின் துடிப்பு நாடியாகவும், நமது ஆக்கையின் உஷ்ணம் டிகிரியாகவும் அளக்கப்பட்டுள்ளன. மலையின் உயர மும், ஆழியின் ஆழமும், காற்றின் வேகமும்கூட அளக்கப் பட்டுள்ளன. 'ஆற்றில் கொட்டினுலும் அளந்து கொட்டு' என்பதும் நமது சொல். நமது பக்தியும் அதன் அடிப்படை யான விசுவாசமும் அளக்கப்பட்டுள்ளதா?

ஒரு தருணத்தில் இறைவன் ஒரு படகில் நித்திரையில் இருந்த சமயத்தில் புயற் காற்றின் வேகத்தில் சிக்கிய சீடர் கள் அவரை எழுப்பி, 'நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா?' என்றவுடன், 'அவர் காற்றையும் கடலையும் அதட்டி, ஏன் உங்களுக்குப் பயம்? விசுவாசம் இல்லாமல் போயிற்றே!' என்றூர். இது விசுவாசமற்ற தன்மையைக் காட்டு கிறது (மா. 4:40).

மற்ருெரு தினத்தில் பேதுரு, இறைவனுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே தண்ணீரில் நடந்துபோனுன். குனிந்து தண்ணீரின் அலையைக் கண்டவுடன், அவர் அங்கியைப் பிடித்து, 'ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்' என்ருன். உடனே இறைவன் அவனைப் பிடித்து, 'அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?' என்ருர். இது அற்ப விசுவாசத்தைக் காட்டுகின்றது (மத். 14:31). அற்ப விசுவாசம், விசுவாச மற்ற நிலையைவிட மோசமானது. 'அற்ப விசுவாசம் ஆபத்தை உண்டாக்கும்' என்று ஒரு மொழியும் உள்ளது. அற்ப அறி வுள்ளவன் இரயில் வண்டியையும், ஆகாயவிமானத்தையும் ஓட்ட வல்லவனு? அற்ப விசுவாசம் மோசமான நிலை என்று சாது சுந்தர்சிங் ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கியுள்ளார்:

மற்ருெரு தினத்தில் இறைவன் ஒரு கானனிய ஸ்திரீயைப் பார்த்து, 'பிள்ளைகளுடைய ஆகாரத்தை நாய்க்குட்டிகளுக்குப் போடலாமா?' என்ருர். அதற்கு அவள், 'மெய்தான், மேஜையிலிருந்து விழும் ஆகாரத்தின் துண்டுகளை நாய்கள் தின்னுமே' என்று தன்னைத் தாழ்த்திப் பேசினுள். அதற்கு இறைவன், மாதே, உன் விசுவாசம் பெரிது என்ருர் (மத். 15:28). அவள் தன்னை நாய்க்குச் சமானமாகத் தாழ்த்தியது போற்றத்தக்கது. மகா வித்துவான் கிருஷ்ணபிள்ளை வரைந்துள்ள 'சத்தாய் நிஷ்களமாய்' என்னும் தேவாரத்தின் (இரட்சணிய மனோகரம், பக். 54) 3ஆம் வரியில் 'எத்தால் நாயடியேன்' எனத் தாழ்மையாக விளக்கியுள்ளார். நமது கீர்த்தனைப் புத்தகத்தில் இத்தேவாரம் முதலில் வருகிறது. அதில் 3ஆம் வரியில் எத்தால் நாயடியேன் என்னும் வார்த்தையை, எத்தால் நானடியேன் என்று திருத்தி இருக்கிருர்கள். இத்திருத்தம் தாழ்மைக்குப் பொருந்துமா? சந்தர்ப்பத்துக்கு விரோதமானது அல்லவா? இக்கட்டுரையை வாசிப்பவர்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்: விசுவாசம் அற்றுப் போனதற்குக் காரணம் பயம். அற்ப விசுவாசத்திற்குக் காரணம் சந்தேகம். முழு விசுவாசத்திற்குக் காரணம் தாழ்மை.

'என் பக்தி வைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது'

(சங்கீதம் 119:139)

'ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்' (1 தெசலோனிக்கேயர் 5:11)

# 89
# 'வெறுமையாக வந்தேன்!'

மலேயா நாட்டில் பல்லாண்டுகளாகக் குருத்துவப் பணியாற்றி வந்த ஒரு குருத் தொண்டர் இரங்கூனுக்கு வந்திருந்த தருணம் காலட்சேபங்கள் சில நடத்தி வந்தார். அவரைச் சந்தித்த மற்றொரு தொண்டர் அவரை நோக்கி, 'சுவாமிகளே, நீங்கள் பல்லாண்டாகக் கிறிஸ்தவ சபையில் குருவாகப் பணியாற்றியவர்கள். உங்கள் காலட்சேபத்துக்கு நான் ஒழுங்காக வந்தேன். என் மனதில் ஒரு பெரிய சந்தேகம் உள்ளது.

நீங்கள் செய்த ஜெபத்தில், ''நாம் வெறுமையாக வந்தோம், எம்மை வெறுமையாக அனுப்பாமல் நிரப்பி அனுப்பும்'' என்றீர்களே. இது எனக்கு விளங்கவில்லை. நீங்களோ பல்லாண்டுகளாகக் குருவாக இருந்தும் இன்னும் வெறுமையாகத்தான் இருக்கிறீர்களா? முதிர் வயதில் தாங்கள் இவ்வாறு சொல்லும்போது, குழந்தைப் பருவத்தின் இதயத்தையுடைய என் நிலைமை என்ன? நான் வெறுமையாக இருப்பதாக நினைக்கவில்லையே! இறைவனுகிய இயேசு பெருமான் என் உள்ளத்தை நிரப்பியிருக்கிறாரே! நீங்களே அவ்வாறு ஜெபிக்கும்பொழுது நான் ஒருக்கால் என் கிறிஸ்தவ வாழ்க்கையைப்பற்றித் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறேனோ என்னும் சந்தேகம் என்னைப் பிடித்துவிட்டது' எனப் பணிவுடன் கூறினர்.

கண்களை மூடிய பாவனையில் இருந்த சுவாமிகள், 'தம்பி, நான் குருவானபடியால் சபையாருக்காக அந்த ஜெபத்தைச் செய்தேன்' என்றார்.

அதற்குத் தொண்டர் குறுக்கிட்டுக் கேட்டார்:

'என் சந்தேகம் பெரிதாகிவிட்டதே! சபையார் முன் தாங்கள் மட்டும் நிரப்பப்பட்டிருப்பதாக சொல்லுவதைவிட, ஒரு தாழ்ந்த படிக்கு இறங்கலாமா? என்னைப்போன்ற

மௌட்டீகர்கள் அச்சபையில் இருக்கலாமே! சாது சுந்தர்சிங் அவர்களை நான் நேரில் அறிந்தும், அளவளாவியும் வந்திருக்கிறேன். வெறுமையாக இருப்பதாக அந்த மகான் வாயில் வராதே. நான் அறிந்த பெரியார்கள் பலர் உள்ளத்தில் பக்தியின் அனலும், வாழ்க்கையின் சிறப்பும் பிரகாசித்து வருவதை நான் பார்த்திருக்கிறேன். தாம் வெறுமையாக இருப்பதுபோன்ற எண்ணம் இவர்கட்கு இல்லவே இல்லை. என் பாத்திரம் நிரம்பி வழிகிறது என்றே உரைக்கிறார்கள்' என்றார் உள்ளங் கனிந்துருகும் உணர்ச்சியுடன்.

கண்ணை மூடிய குருத்துவர் மூன்று நிமிடங்கள்வரை வாய் திறக்கவே இல்லை. பின்பு அவர் தொண்டரின் கரம் பற்றிக் கூறினார்:

'தம்பி, நான் என் குற்றத்தை உணர்கிறேன். இனி அந்த ஜெபத்தை நான் செய்யவேமாட்டேன். இந்தப் போதனையைப் பெறத்தான் ஆண்டவர் என்னை இங்கே கொண்டு வந்தார். அவருக்குத் துதி; உங்களுக்கு நன்றி' என்றார்.

'என் பாத்திரம் நிரம்பி வழிகிறது' *(சங்கீதம் 23:5)*

'எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக' *(ரோமர் 15:13)*

# 90

# பெய்யெனப் பெய்யும் மழை!

பல்லாண்டுகளுக்குமுன் காலஞ்சென்ற மறைத்திரு. மதுர நாயகம் குருத்துவரும் நானும் மெஞ்ஞானபுரத்தில் இருந்து குறுக்குப் பாதையில் ஒற்றை மாட்டு வண்டியின் உதவியால் முதலூருக்கு வந்தோம்.

அத்தருணத்தில் கடாட்சபுரம் வந்ததும் கிணற்றடியில் சில மாதர்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்தார்கள். இது கிறிஸ்தவ கிராமமாக இருக்குமோ என நான் சந்தேகித்தேன். அதற்கு அவர் கொடுத்த விநோதமான பதில் இதுவேதான்.

இவ்வூருக்கு வேப்பங்காடு எனப் பெயர். தமிழ் கிறிஸ்தவ முதல் நூற்றுண்டில் இங்கு நடந்த அற்புதம் இதுவே. இங்கு யேசுவடியான் நாடார் என்னும் ஒரு கிறிஸ்தவ பக்தன், தன் வயலில் நூறு கத்தரிக்கண்கள் வைத்திருந்தார். மழை இல்லாமல் அந்தக் கத்தரிக்கண்கள் வாடி வந்தன. உடனே அவர், தன் மனைவி ராஜத்தையும், இன்பம் என்னும் பெயருடைய மகளையும் பெரிய கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து அச்செடிகளுக்கு ஊற்றச் சொன்னார். அங்கிருந்து சில குடங்கள் கொண்டுவந்தபின் சலித்துப் போயினர். இப்பக்தன் அவ்விருவரையும் வீட்டுக்கு அனுப்பி விட்டார்.

அக்காலங்களில் நெல்லை நாட்டில் வயல் ஓரங்களில் ஜெப மேடைகள் இருக்குமாம். அதில் ஜெபம் செய்துவிட்டுத்தான் வயல் வேலையில் இறங்குவார்களாம். நாடார் அவர்கள் அங்குள்ள மேடையில் முழங்காலில் நின்று பின்வருமாறு ஜெபித்தார்: 'ஜீவத் தண்ணீர் நானே என்று சொன்ன தெய்வமே, இந்தக் கிராமத்தில் உள்ள நஞ்செய், புஞ்செய் நிலங்கள் எல்லாம் தண்ணீரற்றுத் தவிக்கின்றனவே. நீர் மழை அனுப்பும்வரை, பாம்பு என்னைத் தீண்டினாலும், நரி என்னைக் கொன்று தின்றாலும், நான் முழங்காலில் இருந்து

எழுந்திருக்கப்போவதில்லை' என்று சொல்லி ஜெபித்தார். வழியில் போகிறவர்கள் 'அடே அப்படித்தான் ஜெபத்திலே கிடப்பார். நாம் போகலாம் வாடா' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

மாலை சரியாய் 5 மணி இருக்கும். எங்கிருந்து கருமேகங்கள் வந்தனவோ, இறைவன்தான் அறிவான். நல்ல மழை ஒரு மணி நேரம் பொழிந்தது. வயல் வரப்பெல்லாம் தண்ணீர். நாடார் எழுந்திருக்கவே இல்லை. மழை நின்றதும் வீட்டிற்கு வந்தார். ராஜம் ஓடிவந்து, 'மழை வந்தால் ஓரிடத்தில் ஒதுங்கி நிற்கக்கூடாதா? இப்படி தொப்பக்கட்டையாக நனைந்து வரலாமா?' என்று ஒரு வேஷ்டியைக் கொடுத்தாள். இன்பம் என்னும் மகள் தலையைத் துவட்ட வந்தாள்.

நாடார் அவர்களைப் பார்த்து, 'என்னைத் தொடாதீர்கள்' என்று நடந்த அற்புதங்களைச் சொல்லி, இறைவனுக்குத் துதி செலுத்தினபின், உடையை மாற்றிக்கொண்டார். இப்பெரியாரின் மூன்றும், நாலாம் தலைமுறை குடும்பத்தார் இன்னும் வேப்பங்காட்டில் இருக்கிறார்கள் என்று குரு மதுர நாயகம் விளக்கினார்.

அற்புதத்தின் காலம் இன்னும் முடியவில்லை. ஜெபமே ஜெபம்.

> 'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு
> எல்லோர்க்கும் பெய்யும் மழை'

என்பது நம் நாட்டின் நன்மொழி.

'சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அன்றைய தினமே கர்த்தர் இடி முழக்கங்களையும் மழையையும் கட்டளையிட்டார்' *(1 சாமுவேல் 12:18)*

உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் பரமபிதா . . . நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்' *(மத்தேயு 5:44,45)*

'ஒரு வயலின்மேல் மழை பெய்தது, மழை பெய்யாத மற்ற வயல் காய்ந்துபோயிற்று' *(ஆமோஸ் 4:7)*

## 91

# கண்டும் காணாதவர்கள்!

தென் அமெரிக்காவில் அமேசான் என்னும் நீளமும் அகலமுமான நதி ஒன்று உண்டு. நதியின் முகத்துவாரம் 15 மைலுக்குமேல் அகலமாக இருக்குமாம். சமுத்திரக்கரை ஓரத்தில் ஒரு கப்பல் நின்றுகொண்டிருந்தது. எதிரில் ஒரு கப்பல் வந்துகொண்டிருந்தது. நின்றுகொண்டிருந்த கப்பலின் சொந்தக்காரன் எதிர் கப்பலில் உள்ளவனுக்குப் பின்வரும் செய்தியை அனுப்பினான்:

'ஐயா, குடிதண்ணீர் எங்களுக்கு இல்லை, இயந்திரம் கெட்டுப்போய்விட்டது, சமீபத்தில் வந்து எங்களுக்கு வேண்டிய அளவுக்கு குடிதண்ணீர் கொடுத்துவிட்டுப் போங்கள்' என்றான். அதற்கு அவர் 'ஐயா, நீங்கள் உப்புத் தண்ணீரில் மிதக்கவில்லை. அமேசான் நதியின் முகத்து வாரத்தில் இருக்கிறீர்கள். வாளியை கீழேவிட்டு வேண்டிய தண்ணீர் எடுத்துக்கொள்ளுங்கள்' என்றான்.

அவன் வெட்கப்பட்டு அவ்வாறே வேண்டிய குடி தண்ணீரை எடுத்துக்கொண்டான்.

*　　*　　*

கல்கத்தாவில் ஒரு பாலத்தின் ஓரத்தில் ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்துகொண்டு 'தம்படி, மகாராஜா' என்று பிச்சை கேட்பான். அப்பாலத்தை விசாலமாகக் கட்ட அவன் உட்கார்ந்த இடத்தில் வெட்டும்போது அவனுக்குக் கீழ் சுமார் மூன்று அடி ஆழத்தில் விலையுயர்ந்த நகைகள், தங்கம் முதலியவைகள் உள்ள ஒரு பெரிய அண்டா இருந்தது.

அதைச் சற்றும் அறியாமல் அதின்மேல் உட்கார்ந்து கொண்டு அவன் தம்படிக் காசுப் பிச்சைக் கேட்டான். நண்பரே நம்மில் அநேகர் இந்நிலையில்தான் இருக்கிறோம்.

ஆண்டவரை ஐசுவரியவான் என்று சொல்லுகிறோம். அதை நம்புகிறோமா? அவர் தயாள குணம் உடையவர்,

மன்னிக்கும் மனமுடையவர், இரக்கம் காட்டும் இறைவன் என்றெல்லாம் சொல்லுகிறோம். இவைகளை நம்பியும் அவைகளைப் பெற்றும் அனுபவித்து வருகிறோமா? நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று யோவான் தெளிவாக விளம்பியிருக்கிறார்.

அதை நாம் நம்பியிருப்போமானால் நமக்குள் சோர்வும், சலிப்பும், அகந்தையும் உண்டாகுமா? எனவே நம்மை ஆராய்ந்து பேதுரு சொல்லியிருக்கிற வண்ணம் நாம் தெரிந்துகொள்ளப்பட்ட ஆசாரியக் கூட்டத்தார்களாக நடந்துகொள்வோம்.

'வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்'
*(சங்கீதம் 39:6)*

'ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது'
*(ரோமர் 8:22)*

'நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'
*(யோவான் 11:40)*

# 92

# மரங்களில் 'வைரம்'

சில ஜாதி மரங்களில் 'வைரம்' என்னும் ஒரு கனத்த பாகம் அம்மரத்தின் உள்ளில் இருந்து பட்டை வரையில் பரவும். அந்த அடிமரம் முழுவதும் இரும்புபோல் கனத்திருக்கும். மாமரம், புளியமரம், பூவரச மரம், வேப்பமரம் முதலியனவற்றில் 'வைரம்' இருக்கும். இம்மரங்கள் வீட்டிற்கு உத்திரமாகவும் தூண்களாகவும் நன்கு அமையும். இத்துடன் இம்மரங்களைச் சட்டங்களாகவும், பலகைகளாகவும் அறுத்து மேசை, நாற்காலி, கட்டில் முதலிய ஆசனங்களாகச் செய்துகொள்ளலாம்.

வேறு சில மரங்கள் உள்ளன. அவைகளில் 'வைரம்' பட்டையில் ஆரம்பித்து வரவர உள்ளேபோகும். அந்த மரங்களின் நடுவில் ஒமப்பொடி போன்ற 'சோறு' இருக்கும். இம்மரத்தின் மையத்தில் உறுதியில்லை. பனை, தென்னை, கமுகு போன்ற இம்மரங்கள், உத்திரங்களுக்கும் தூண்களுக்கும் பயன்படாதவை. பனை மரத்தைச் சட்டமாகவும், பலகைகளாகவும் அறுத்து ஆசனங்கள் செய்யமுடியாது. இதற்குக் காரணம், 'வைரம்' பட்டையைப் பற்றியிருந்தாலும், உள்ளே சொத்தையாயிருக்கும்.

இதில் ஒரு பொருள் உளது. இரட்சிப்பு என்னும் நெறி மக்கள் ஆழ்ந்த உள்ளத்தில் ஆரம்பித்து வரவர அவர்கள் வாழ்க்கையைச் சிறப்பித்து, அவர்கள் பக்தி வழிந்தோடும்படியாக இருக்கும்.

மற்ற மரங்களில் பட்டை இருந்தாலும் உள்ளே 'சோறு' இருப்பதுபோல் சிலருடைய இரட்சிப்பு, கொள்கைகள், சடங்காச்சாரங்களில் ஆரம்பித்து, உள்ளே போகக்கூடாததாய் அவர்கள் வாழ்க்கையில் தன்னயம், சுயநீதி, தற்பெருமை முதலிய சொத்தைகள் மலிந்துகிடக்கும். எனவே, நமது மனம், வாக்கு, காயம் முழுவதும் இரட்சிப்பின் நெறியில் மூழ்கியிருப்பதுதான் கிறிஸ்தவ நெறி.

ஆழ்ந்த பக்தியுள்ள பலர் இரட்சிக்கப்பட்டவர்களாக இல்லாதிருக்கலாம் என்று ஸ்பர்ஜன் போதகர் சொல்லியிருக்கிறார். அவ்வாறான சிலரை நாம் பார்த்திருக்கிறோம். வைரம் பாய்ந்த கடின சித்தமுள்ளவர்களும் உண்டு.

கழுத்து வரையில் ஜலம் உள்ள குடம் தளும்பாது. அரைக் குடம் ஆடும், தாளம்போடும். எனவே, நாம் அதுபோல் குறைகுடமாய் இல்லாமல் நிறைகுடமாய் இருக்கவும், நமது பாத்திரம் நிரம்பி வழியவும் இறைவன் அருள்புரிவாராக.

இரட்சிப்பின் மகுடம் அதுவேதான்.

'. . . கர்த்தர் தம்முடைய ஆவியின் மூலமாய் முந்தின தீர்க்கதரிசிகளைக்கொண்டு சொல்லியனுப்பின வார்த்தைகளையும் கேளாதபடிக்குத் தங்கள் இருதயத்தை வைரமாக்கினார்கள்'

*(சகரியா 7:12)*

'நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்'

*(1 கொரிந்தியர் 13:10)*

93

# ஆணிவேரையொத்த ஆழம்!

இவ்வுலகில் ஆணிவேர் உள்ள மரங்களும், ஆணிவேரற்ற மரங்களும் உள்ளன. ஆலமரம் பெரிய புயல் காற்றில் அடி பட்டுக் குப்புற விழுந்திருப்பதைப் பார்த்திருக்கிறோம்.

அந்த மரத்தின் வேர் பூமியின் ஆழத்திற்குள் போகாமல் பூமிக்குமேல் படர்ந்திருப்பதை நாம் அறிவோம். அம்மரம் வீடு கட்டுவதற்கும் ஆசனங்கள் செய்வதற்கும் பயன்படாது. ஆலமரத்திற்கு ஆணி வேர் என்பது இல்லை. வேப்பமரம், புளியமரம் முதலிய மரங்களுக்கு ஆணிவேர் உள்ளன. இம் மரங்களின் வேர் பூமியின் மேல் படராமல் பூமியை துளைத் துக்கொண்டு வெகு ஆழமாகக் கீழே சென்றிருக்கும். எனவே புயற் காற்றில் இவை விழுவதில்லை.

மேலும் வேப்பமரம், புளியமரங்கள் வீட்டிற்கு உத்திரமாக வும், தூணுமாகவும் அமையும். பலகைகளை அறுத்து ஆசனங்கள் செய்துகொள்ளலாம்.

நமது பக்தி இத்தன்மையையுடையது. இயேசு பெருமான் பேரில் ஆணித்தரமான பக்தி இருந்தால் பூமி அதிர்ந்தாலும், ஆழி பொங்கினலும், என்ன நேர்ந்தாலும் அஞ்சிடோம். நம்மை அசைப்பது ஒன்றும் இல்லை. ஆலமரம் வேர் மேலே வளருவதுபோல் கொள்கைகளிலும், மார்க்கச் சடங்காச் சாரங்களிலும் பூரணமாக ஈடுபட்டு வருகிறவர்கள் கஷ்டம், துன்பம் முதலியவைகள் வரும் நேரத்தில் பக்தியினின்று நழுவி விழக்கூடும்.

அவர்கள் உயிருள்ளவர்கள் என்று பேர் பெற்றிருந்தாலும் செத்தவர்கள்தான் என்று வேதம் விளக்குகிறதல்லவா?

ஜான் அஸ், குரு சவனரோலா, பிஷப் ரிட்லி, பிஷப் லாடிமர், வில்லியம் டின்டேல் முதலிய வீர பக்தர்களின் உள்ளங்கள் இறைவனில் வேர் ஊன்றி இருந்ததால் தங்கள் சரீரங்களை

ஜீவபலியாக அக்கினியில் சுட்டெரிக்க அதைச் சாம்பலாக்கிக் கொண்ட இரத்தச்சாட்சிகளானார்கள்.

பிஷப் போலிகார்ப் என்னும் பெரியாரைச் சுட்டெரிக்கக் கொண்டுபோன சமயத்தில் ஒருவன் அவரைப் பார்த்து 'ஐயா, இயேசுவை மறுதலித்து சமயப் பெரியாரை ஏற்றுக் கொள்ளும்' என்றாராம்.

அதற்கு அந்த வீரத்தொண்டன், 'நான் எண்பத்து ஆறு ஆண்டுகளாக இயேசு பெருமானுக்குத் தொண்டு புரிந்து வந்துள்ளேன். அவர் என்னைக் கைவிட்டதேயில்லை. இந்த மரண சமயத்தில் நான் அவரை எப்படி மறுதலிப்பேன்' என்றாராம்.

உடனே சிமிர்னா என்னும் பட்டணத்தில் போலி கார்ப் பெரியாரை உயிருடன் கொளுத்திக் கொன்றார்கள். கல்லெறியுண்டு மரித்த சமயத்தில்கூட பிரகாசமான முகத் தோடு இருந்த வீரமணி ஸ்தேவானின் நினைவும் நமக்கு வருகிறதே. அவர்கள் வீணாக வாழவுமில்லை, அவர்கள் மரணம் வியர்த்தமாகவும் இல்லை. இரத்தச்சாட்சிகளுடைய இரத்தம் சபைக்கு வித்தாக மாறி உலகம் முழுவதும் பரம்பி உள்ளது கண்கூடு.

'நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்; அவன் லீலி புஷ்பத்தைப்போல் மலருவான்; லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான்' (ஓசியா 14:5)

'வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமா யிருக்கும்' (ரோமர் 11:16)

## 94

# தன் மனமே தன்னைச் சுடும்!

என் நண்பர் ஒருவரைப் பார்க்கப் போனபோது, அவர் வீடு பூட்டியிருந்தது. பக்கத்தில் ஒரு பிராமண மாது தன் பிள்ளைகளுடன் படியில் உட்கார்ந்திருந்தாள். நான் மிக்க வணக்கமாகப் பூட்டியிருக்கும் வீட்டாரைப்பற்றி அந்த அம்மாளிடம் கேட்டேன். அதற்கு அந்த அம்மாள் கோபமாக 'யார் எங்கே போனார்கள், எப்போது வருவார்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதற்காகவா நான் உட்கார்ந்திருக் கிறேன்; அவர்கள் எப்படிப்போனால் எனக்கென்ன? என்றார்கள்.

அந்நேரம் அவள் மகன், 'அவர்கள் வெளியிலே போய் இருக்கிறார்கள். ஏழு மணிக்குப்போல் வருவார்கள். காத்திருங்கள்' என்று சொன்னான். உடனே 'உனக்கு இந்த ஊர்க்கதை எதற்காக. அவர்கள் எப்படிப்போனால் உனக் கென்ன. நீ அந்த வீட்டிற்குக் காவல்காரனா?' என்று கேட்டு அந்தப் பிள்ளையை நன்றாக அடித்துவிட்டார்கள். அவன் அழுதான். நான் அவன் கன்னத்தை அன்பாகக் கிள்ளி 'தம்பி, நீ எப்பொழுதும் உண்மை பேசு. பொய் சொல்லாதே. உனக்கு நிறைய மார்க்கும், புரொமோஷனும் கிடைக்கும். நீ பகவான் அருளால் பெரிய உத்தியோகம் பார்ப்பாய்' என்றேன்.

அம்மாது 'அவனை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள். அந்த மாதின் மனம் அவனைச் சுட்டுவிட்டது.

நான் அறிந்த ஒரு குடும்பத்தாரைப் பார்க்கச் சென்றேன். அவர்கள் வீட்டுக் கூரையில் சுரைக்காய் கொடி, காய்களுடன் படர்ந்து இருந்தது. ஓர் அம்மாள் வந்து சமையலுக்காக ஒரு சுரைக்காய் துண்டு கேட்டார்கள். இந்த அம்மாள் தன் வீட்டில் சுரைக்காய் இல்லை என்று சொன்னவுடன், அவர்கள் வீட்டில் இருக்கும் 4 அல்லது 5 வயதுள்ள ஒரு பெண் குழந்தை ஒரு சுரைக்காயைத் தூக்கிக்கொண்டு வந்தாள்.

அதைப் பார்த்த அந்த அம்மாள் 'தன் வெட்கத்தை மறைத்து அச்சுரைக்காயை அறுத்துப் பாதி அந்த அம்மாளுக்குக் கொடுக்க அவர்கள் வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். உடனே அந்த அம்மாள், தன் மகளை அழைத்து, 'என் மானத்தை வாங்கிவிட்டாயே என்று சொல்லி, இனிமேல் பெரியவர்கள் பேசும்போது, நீ குறுக்கே வரக்கூடாது' என்று அடித்தார்கள்.

அழுத அந்தக் குழந்தையை நான் தூக்கிக்கொண்டு வெளியிலே போய்விட்டேன். அந்த அம்மாளுடைய உள்ளம் அவர்களைச் சுட்டுவிட்டது.

'பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்'

*(நீதிமொழிகள் 12:22)*

'கடவுளின் அரசை ஒரு குழந்தை ஏற்பதுபோல எவன் ஏற்றுக் கொள்ளவில்லையோ, அவனால் அவ்வரசினுள் செல்ல இயலாது'

*(மாற்கு 10:15)*

95

# கடவுளின் பெயரென்ன?

குருவானவர் குழந்தைக்குப் பெயர் கொடுக்கு முன்னரே நமக்குப் பிரியமும் அவசியமுமான ஒரு பொருளைக் குறித்துப் பிள்ளையைக் கொஞ்சுகிறோம். அப்பொருளும் அப்பொருளின் பெயரும் அக்குழந்தையின் பெயராகுமா? உலகையாளுகின்றவனை 'அரசே' என மக்கள் அழைப்பர். அவனைப் பெற்ற தாய் பெயர் சொல்லி அழைப்பாள். பெயரிட்டழைப்பதில் பற்றும் பாசமும் விளங்குகிறது.

அண்ட சராசரங்களையும் படைத்து நடத்திவரும் பரம்பொருளுக்குப் பெயர் இருப்பதாகத் தெரியவில்லை. இறைவனுக்குப் பெயரிடுபவன் யார்?

வேதாந்தமும் கடவுளுக்குப் பெயரிடவில்லை.

| | | | |
|---|---|---|---|
| வேதாந்தத்தில் | — பகவான் | காவியங்களில் | — ஈசன் |
| சைவ நூலில் | — இறைவன் | தெலுங்கில் | — தேவுடு |
| யூத நூலில் | — யெகோவா | தமிழில் | — கடவுள்* |
| புராணத்தில் | — சிவன் | ஹிந்தியில் | — ஹூதா |
| பைபிளில் | — கர்த்தர் | ஆங்கிலத்தில் | — ஆல்மைட்டி |
| திருக்குரானில் | — அல்லா | மலையாளத்தில் | —தெய்வம் |

முதலிய பதங்களெல்லாம் கடவுளைக் குறிக்கும் பதங்களேயல்லாது கடவுளுடைய பெயரேயல்ல. கடவுளுடைய பெயரைச் சொல்ல வல்ல வார்த்தை உலகிலுள்ள பாஷைகள் ஒன்றுமில்லை.

ஆலயங்களில் செய்யும் ஆயிரம், இலட்சம், கோடி அர்ச்சனைகளில் உபயோகிக்கும் பதங்கள் கடவுளது இலட்சணங்களையும் குணங்களையும் வர்ணிக்குமேயல்லாது பெயரல்ல. சுலோகம் என்றால் வசனம்—ஓம் என்றால் நமஸ்காரம் அல்லது வணக்கம்.

---

* The Tamil language has word for God 'KADAVUL' (கடவுள்) which is not found in any other Indian language. Kadavul means **He who is**. Kadavul possesses no temples and is not worshipped.

(Bishop Sargent of Mysore in his Popular book 'The Dispersion of the Tamil Church.')

சூரியானிக் கிறிஸ்தவ சபையார் தங்கள் பிஷப்மார்களைத் 'திருமேனி' என மரியாதையாக அழைப்பர். ஒரு தாய் தன் மகனைத் தம்பி என அழைப்பாள். இவை மரியாதையும் அன்புமேயல்லாது பெயரல்ல.

தமிழ்க் காவியங்களில் பெரியோர்களின் பெயர்கள் பல மறைந்தேயுள்ளன. பார்புகழும் குறளாசிரியரைத் திருவள்ளுவர் என்கிறோம். அது திருவாளர் வள்ளுவர் எனும் பொருளைப்பெறும். வள்ளுவன் என்பது ஓர் இனத்தைக் குறிக்கும். அந்த வள்ளுவன் பெயரென்ன? தெரியாது. ஆராய்ச்சிக்கு இன்னும் எட்டவில்லை. இராமாயணம் பாடிய கம்பர் கதையும் அவ்வாறே!

நல்லூர் வீரகவி (நல்லூரிலுள்ள பெரிய கவிராயன்), புகழேந்தி (புகழை ஏந்தினவன்), பரிமேலழகர் (குதிரை மேலிருந்த அழகர்), ஆலூர் கிழார் (ஆலூரிலுள்ள கிழவன்), மாணிக்கவாசகர், பெருந்தேவனார் முதலிய பெயர்கள் அனைத்தும் அவர்களின் ஆதிப் பெயர்களல்லவே. சீத்தலைச் சாத்தனார், தொல்காப்பியர், பவணந்தி முனிவர் முதலியோரது ஆதிப் பெயர்கள் நமக்குக் கிட்டவில்லை. பட்டினத்தார் பெயர்தான் என்ன? ஔவை என்றால் கிழவி. அக்கிழவியின் பெயரென்ன?

சிருஷ்டிக்குள் அகப்பட்டுள்ள மாந்தர்களே தத்தம் பெயர்களை மறைவாக வைத்திருந்தார்களென்றால், சிருஷ்டிகர்த்தாவின் பெயர் மாந்தர் மனத்திற்குக் கிட்டாதது ஆச்சரியமல்ல.

சிலேடைக் கதை ஒன்றுண்டு: மிருகங்கள் தெய்வ இலட்சணங்களை விளக்கும் வண்ணம் மாநாடொன்றைக் கூட்டினவாம். அதற்குக் காமதேனு எனும் பசு சபாநாயகனாகவும், யாளி என்னும் சிம்மம் காரியதரிசியாகவும் தெரிந்துகொள்ளப்பட்டன. தெய்வத்தின் பெயரை விளக்கிக்காட்ட ஒரு மிருகமேனும் முன்வரவில்லை. நாகம் முன் வந்து வாயைத் திறந்தவுடன் அதன் நாவு இரண்டாகப் பிளவுபட்டது. அதன் பயனாகப் பாம்பின் வர்க்கத்திற்கே இரு நாக்குகள் உள்ளன. காமதேனு எனும் பசுவும், யாளி என்னும் சிம்மமும் அழிக்கப்பட்டபடியால் இப்பொழுது இவ்வுலகில் இல்லை.

ஆம், இறைவனுக்குப் பெயர் வெளிப்படவேயில்லை. அப்படியானல் இறைவனுக்குப் பெயர் இல்லையா? அவருக்குப் பெயர் ஒன்றுளது. அது மாந்தரிட்ட பெயரல்ல. வானத்திலிருந்து வந்த தேவதூதன் மரியன்னைமூலம் இட்ட பெயர்: 'இயேசு' எனப் பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.

இறைவனது பெயர் இயேசு. இவரே உலகக் குருவும் இரட்சகருமானவர். இவர் நாமமே நாமம். வானத்தின் கீழெங்கும் இயேசு என்னும் நாமமேயல்லாமல் வேறு ஒரு நாமமும் இல்லை.

'என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்'

*(சங்கீதம் 139:4)*

'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனுயிருந்தது'

*(யோவான் 1:1)*

'தேவதூதன் மரியாளை நோக்கி 'மரியாளே, பயப்படாதே . . . இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக' என்றுன் *(லூக்கா 1:30,31)*

## 96

# மீட்டர் பெட்டியும் மீட்பரின் உதவியும்!

நமது வீட்டுக் கூரையின்கீழ் அமைந்துள்ள செம்புக் கம்பிகள் ஒன்றுசேர்ந்திருக்கும் பலகையில் இணைக்கப் பட்டுள்ள 'மீட்டர் பெட்டிக்குள்' வெகு தூரத்திலிருந்து வந்துள்ள மின்சாரம் நமக்கு நன்மைபுரிவான் கருதி இரவும் பகலுமாக அப்பெட்டிக்குள் காத்திருக்கிறது, பித்தானை அமுக்கினவுடனே அவ்வல்லமை ஓடி வந்து நமக்கு வெளிச் சத்தைக் கொடுக்கிறது; விசிறியைச் சுற்றவைக்கிறது.

இவ்வண்ணம் இறைவனது அருளும் கிருபையும் நமக் கெனவே காத்திருக்கின்றன. நமதுள்ளத்தை அப்பக்கம் திருப்புங்கால் நமக்கு உதவி புரிகின்றன. வேதம் வாசிப்பதும், தனித் தியானத்திலிருப்பதும், ஆலய ஆராதனையின் சலுகை களைப் பயன்படுத்திக்கொள்வதும் நமக்கு நன்மையை விளை விக்குமென்பது நல்வாக்கு மட்டுமன்று, சான்றோர் அனுபவமு மாகும்.

உன் திருப்புகழ் கேட்கவும்
உன் திருப்புகழ் ஓதவும்
உந்தனுக்கு எனை உதவவும்
எந்தனுக்கு அருள் ஏசுவே.

'கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாக . . . கர்த்த ருடைய ஆலயத்தில் தங்கி இருப்பதையே நாடுவேன்'

*(சங்கீதம் 27:4)*

'வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?' *(மத்தேயு 7:11)*

# 97

# அமைதி நேரம்

**அ**மரிக்கையான மௌன தியானம் ஆண்டவரை அணுக அனுகூலம். பஞ்ச பூதங்களையும், ஐந்நெறிகளையும் ஒன்றுக்கி மனத்தை வசப்படுத்தி ஆசையை ஒழித்து ஆக்கையை அடக்கி ஜெப நெறியில் நிற்கும் முறை கீழ் நாட்டாராகிய நமக்கு நன்கு விளங்கும். நமது அபாத்திரத் தன்மையை உணர்வதின் பயனுக மௌனமென்னும் அமைதியுண்டாகும். உள்ளம் கனமற்றுப் பஞ்சைப்போலிருக்கும். தெய்வ தரிசனத்திற்கு அமைதி அடிப்படையாகும்.

டெலிபோனில் பேசும்பொழுது அடுத்த நுனியில் பேசுகிறவர்களுடைய வார்த்தையை அமைதியாகக் கேட்கவேண்டும்.

இயேசு பெருமான் கெத்செமனே தோட்டத்தில் அமைதியாய் இருந்த தருணத்தில் தானே சர்வேஸ்வரனது சித்தத்தை அறிந்தார். சீடர்களையும் பிணியாளிகளையும் அமைதியாக இருக்க தனித்த இடத்திற்கு அழைத்துச் சென்றுர். சகரியாவும், மனோவாவும், அன்னுளும், மரியாளும் அமைதியான தனித்த இடத்தில்தானே பிள்ளை வரம் பெற்றனர். மோசே, ஆபிரகாம், ஈசாக்கு போன்ற வீரிய விசுவாசிகளும் அமைதியான பல சந்தர்ப்பங்களில் ஆண்டவரோடு பேசினதை அறிவோம். பெருங்காற்று, பூமி அதிர்ச்சி, அக்கினிமயம் இம்மூன்றும் அடங்கிய அமைதியான தருணத்தில்தான் ஆண்டவர் எலியா தீர்க்கதரிசியுடன் மெல்லிய குரலில் பேசினுர்.

மொட்டுகள் அமைதி நேரத்தில்தான் உருவாகி மலர்ந்து மணக்கின்றன. கீழே விழுந்த கோதுமை மணி அமைதியின்

நிலையில்தான் முளை கிளம்பி செடியாக மாறி பலன் தருகின்றது. பக்தியும் அமைதியான நிலையில்தான் பரிணமிக்கின்றது.

'கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு'

(சங்கீதம் 37:7)

இயேசு அவர்களை நோக்கி, வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள்' என்றார்.

(மாற்கு 6:31)

# 98

# மலமும் பாவமும்

சிறந்த ஒரு சிவபக்தனை அடியேனறிவேன். அவர் பிரதி காலையில் 'எனிமா' தானே வைத்துக்கொண்டு வயிற்றி லுள்ள மலம் பூராவும் கழிந்தபின் சிவபூசையிலிறங்குவார். அடிவயிற்றில் மலமிருக்கும்வரை ஜெபமும் பூசையும் செய்ய அருகனல்லவெனவும், செய்தால் இறைவன் அதை ஏற்றுக் கொள்ளானெனவும் அவர் அபிப்பிராயப்பட்டுள்ளதை நானறிந்தேன்.

அடிவயிற்றிலுள்ள அழுக்கு மட்டும் மலமல்ல. ஆக்கையி னின்று புறப்படும் அழுக்கெல்லாம் மலமாகும். மூக்குச் சளி, கண்ணிலுள்ள பீளை, காதிலுள்ள குரும்பை, உடலிலுள்ள வியர்வை முதலியவைகளனைத்தும் மலமேயாகுமெனத் தமிழ் அகராதி அறிவிக்கின்றது. இதற்காகத்தான் பூசைக்குமுன் ஆக்கையை சுத்திகரித்துக்கொள்ள குளிக்கின்றார்கள்போலும்! இது சிறந்த முறையேதான்.

இத்துடன் மலம் என்னும் பதம் பாவமென்னும் பொருளை யும் பெறும். வெளியிலுள்ள அழுக்கு மட்டுமல்ல; உள்ளத்தி லிருந்து புறப்படும் கோபம், பகை, கெட்ட எண்ணம், மோகம் முதலியவைகளனைத்தும் மலத்தைவிடக் கெட்ட தெனக் கிறிஸ்து பெருமான் ஆழ்ந்த கருத்துடன் அறிவித் துள்ளார். வாய்க்குள் போவது தீட்டல்ல, வாயிலிருந்து வெளிவரும் கெட்ட வார்த்தைகள், மனத்தில் உதிக்கும் கெட்ட எண்ணங்களே தீட்டாகும். கண்களால் காணக் கூடாத அசுத்தத்தைத் தீட்டாகவும், காணவல்ல அசுத்தங் களை மலமாகவும் நினைக்கின்றோம். எனவே தீட்டிற்கும் மலத் திற்கும் வித்தியாசமில்லை. இறைவன் சுத்த இருதயநேசன்;

தூய இருதய வாசன். ஆக்கையிலுள்ள அழுக்கைமட்டுமல்ல, ஆன்மாவைச் சுற்றியுள்ள பாவ அழுக்குகளையும் தியானத் திற்குமுன் அகற்றிக்கொள்வது அறிஞரின் கடனும்.

'தீமையைவிட்டு விலகி நன்மை செய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்' *(சங்கீதம் 37:27)*

'வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயி லிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்'

*(மத்தேயு 15:11)*

99

# நன்றாகச் சுட்டுவிட்டது

நான் ரங்கூனில் அத்தியட்ச ஆதீனத்தில் இருபத்து ஐந்து ஆண்டுகள் கணக்கனாக இருந்த தருணத்தில் பட்டாளக் கோவிலுக்கும் காரியதரிசியாக இருந்தேன். அக்கோவிலுக்கு முற்கோபியான ஓர் ஆங்கில சாப்ளின் என்னும் ஒரு பாதிரியார், ஒரு வியாழக்கிழமை காலை இராப்போஜன ஆராதனை நடத்தப்போகும்முன் வெளியிலே நின்றுகொண்டிருந்த வேலைக்காரர்களையும், மற்றவர்களையும் கோபத்துடன் கடு கடு, சிடு சிடு என்று திட்டிவிட்டு, வெஸ்ட்ரி அறைக்குச் சென்று பேசினில் தன் கையை கழுவிக்கொண்டிருந்த தருணத்தில் உள்ளே சென்று, 'ஒரு வார்த்தை சார்' என்று சொன்னேன். 'இப்போது பேசவேண்டாம்; ஆராதனைக்குப் பிறகு பேசலாம்' என்றார். 'நான் இப்போதே சொல்ல வந்திருக்கிறேன். தயவுசெய்து கேளுங்கள்' என்றேன். அதற்கு அவர் 'நீ எனக்குத் தொல்லை கொடுக்கிறாய், கீழ்ப்படியமாட்டாய், நீ சொல்லவேண்டியதைச் சொல்' என்றார். அதற்கு நான் 'சார், இவ்வளவு கோபமாய் இருக்கிறீர்களே, நீங்கள் எப்படி இராப்போஜன ஆராதனை நடத்தக்கூடும்? நீங்கள் எப்படி எடுக்கவும், கொடுக்கவும்கூடும்' என்றேன்.

உடனே அவர் மூன்று நிமிடங்கள்போல் தலைகுனிந்து பின் நிமிர்ந்து 'பால், மிக நன்றி. நான் ஆண்டவருடன் சமாதானமாகி விட்டேன். நான் இராப்போஜனம் கொடுக்க உன் சம்மதத்தைத் தா' என்றார். 'சரி சார், ஆராதனையை நடத்துங்கள்' என்றேன். அன்றிலிருந்து அவர் என்னை மரியாதையாக நடத்திவந்தார். அவருடைய மனம் அவரை நன்றாகச் **சுட்டுவிட்டது.**

'கர்த்தாவே, உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்திலே என்னைத் தண்டியாதேயும்' (சங்கீதம் 6:1)

**'விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்'** (மத்தேயு 3:7,8)

# 100

# சமாதானம்

கலைமான்கள் காட்டில் இயற்கையாக மரிப்பது அரிதாம். அவற்றின் மாம்சத்திற்கு ஆசைப்பட்டு மாந்தரவற்றைச் சுட்டுக்கொல்வர். அவற்றின் புலாலுக்காசைப்பட்டுப் புலிகள் அவற்றைக் கொன்று தின்னும்.

அம்மான்களுக்குப் பெரிய விசாலமான கொம்புகளுள. இரண்டு மான்கள் கோப வெறியுடன் முட்டிக்கொள்ளுந் தருணம் அக்கொம்புகள் சிக்கிக்கொள்ளும். பின்பு எடுக்க முடியாததால் அப்படியே இழுத்துப் பறித்துக்கொண்டு நிற்கும். பிறகு சோர்ந்துபோய் கீழே விழுந்து அவ்விடத்தே பல மணி நேரங்களுக்குப்பின் அவைகளிரண்டும் மாண்டு கிடக்கும்.

அவ்வாறே பகைகொண்டுள்ள இருவர் அல்லது இரு குடும்பங்கள் அல்லது இரண்டு அரசாங்கங்கள் ஒன்ருகவே அழியும். 'சூதும் வாதும் வேதனை செய்யும்.'

சண்டைபோட இருவர் வேண்டும், சமாதானம்பண்ண ஒருவன் மாத்திரம் போதும். 'ஒருவர் பொறை, இருவர் நட்பு.' ஒருவன் தாழ்ந்துபோனுல் பகை பறந்துபோம். சண்டையடங்கும். சமாதானம் நிலவும்.

நமக்கு அருகிலுள்ள சகோதரனுக்கும் இறைவனுக்கும் நெருங்கின சம்பந்தமுண்டு. இந்நட்பு அன்பென்னும் கயிற்ருல் கட்டப்பட்டுள்ளது.

முதலாவதாகக் கண்கண்ட சகோதரனை நாம் நேசிக்க வேண்டும். அதன்பின் காணுத கர்த்தரின் பேரில் நமக்கு நேசம் பிறக்கும்.


**'நீண்ட பொறுமையினுல் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம்; இனிய நாவு எலும்பையும் நொறுக்கும்'** (நீதிமொழிகள் *25:15*)

**'சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்'**

(மத்தேயு *5:9*)

75610

179
156



தொகுப்பாசிரியர், ஆர். எஸ் ஜேக்கப் தமிழகத்தின் சிறந்த கதாசிரியர்களில் ஒருவர். தற்போது பாளையங்கோட்டை தூய யோவான் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

7A
10-35

**SERMON ILLUSTRATIONS OF**

FATHER PAUL KADAMBAVANAM

Compiled by R. S. JACOB

விலை ரூ. 7·00 (இந்தியாவில் மட்டும்)